

# ஞானச்சுடர்

சித்திரை

2010



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



**தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை**

பொருள் : தெய்வத்தைத் தொழாதவளாயினும் கணவனைத் தெய்வமாக நினைத்து அவனைத் தொழுது காலையில் எழுகின்றவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும். (55)

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**

**சொற்காத்துச் சோர்விலாள் பெண்**

பொருள் : கற்பினின்றும் வழுவாமல் தன்னைக்காத்தும் தன் கணவனை உணவு முதலியவற்றால் உபசரித்தும், இருவரிடத்தும் புகழ் நீங்காமல் காத்தும் முன் கூறிய நற்குண நற்செய்கைகளைக் கடைப்பிடிப்பவளே சிறந்த பெண்ணாவாள். (56)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# நற்சிந்தனை



**மறப்பேனோ குருநாதன் தன்னை**

**திருத்தாண்டகம் - 6**


ஆறணிந்த திருச்சடையா யமரர் கோவே
அங்குமிங்கு மெங்குநீ அரசே ஐயா
நீறணிந்த திருக்கோல முடையாய் நின்னை
நேரிழையாள் பாகமாய்க் காணப் பெற்றால்
தாரணியிற் பிறவியென்னுந் தளைகள் போமே
சாயுச்சிய பதவியுந்தான் தப்பா தெய்தும்
ஆரறிய வல்லாருன் பெருமை தன்னை
அப்பனே ஆருயிரே ஆளு வாயே

**எல்லாம் நீயே**

அப்பனும் அம்மையும் நீயே அரிய சகோதரர் நீயே
ஒப்பில் மனைவியும் நீயே ஒதரும் மைந்தரும் நீயே
செப்பில் அரசரும் நீயே தேவாதி தேவரும் நீயே
இப்புவி யெல்லாம் நீயே என்னை யாண்டதும் நீயே 1

ஆறு வைத்ததும் நீயே அம்பிகை பாகனும் நீயே
கூறும் வேதமும் நீயே குற்றங் குணமெல்லாம் நீயே
நீறு பூசினோன் நீயே நெற்றிமேற் கண்ணனும் நீயே
பேறு பெற்றவன் நீயே பின்னென்னை யாண்டதும் நீயே 2

# ஞானச்சுடர்



மபு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

## வெளியீடு - 2 சுடர் - 148

## 2010 சித்திரை பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| "விகிர்தி" | காரை எம்.பி. அருளானந்தம் | 1 - 2 |
| இன்றைய கல்விமுறை... | ஆ. மகேசு | 3 - 5 |
| பிரார்த்தனை தினமும்... | ஐ.கோ. சந்திரசேகரம் | 6 - 8 |
| ஆசாரக்கோவை | | 9 - 10 |
| முதியோரை போற்றுவோம் | இ. சாந்தகுமார் | 11 - 14 |
| தினம் தினம் ஆனந்தமே | ஜக்கி வாசுதேவ் | 15 - 17 |
| மங்களமும், நறுமணமும்... | நீர்வை மணி | 18 - 19 |
| நித்திய அன்னப்பணி | | 20 - 21 |
| சொந்தமொழியும் வந்த.. | முருகவே பரமநாதன் | 22 - 24 |
| வாராந்த நிகழ்வின்... | | 25 - 28 |
| "அந்தி பகல்" | வாரியார் சுவாமிகள் | 29 - 30 |
| வேண்டுதல்கள் | திருமதி. சி. யோகேஸ்வரி | 31 - 32 |
| சிவலிங்கவடிவம் | திருமதி. செ. தயாளினி | 33 - 34 |
| வள்ளுவன் வகுத்த ஒழுக்கம் | கு. குணாளன் | 35 - 37 |
| தவப்பயனை அழிக்கும்... | நா. நல்லதம்பி | 38 - 41 |
| சிறுவர் கதைகள் | | 42 - 43 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 44 - 45 |
| பெரியாழ்வார் திருமொழி | ச. லலீசன் | 46 - 48 |
| சிவபுராணம் | சு. அருளம்பலவனார் | 49 - 51 |
| ஆனந்தம் எங்குள்ளது | ம.க. ஸ்ரீதரன் | 52 - 54 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பி | செல்வி. தி. வரதவாணி | 55 - 57 |
| தவமுனிவனின்... | சிவ. மகாலிங்கம் | 58 - 61 |
| செய்திச் சிதறல்கள் | | 62 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 63 - 65 |
| முதுபெரும் புலவர் | | 66 |
| தமிழகத்திருக்கோயில்... | வல்வையூர் அப்பண்ணா | 67 - 68 |


**அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா**


**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம் : 021 3219599

Web Site : WWW. Sannithiyan.org

பதிவு இல. Q.D/46/NEWS/2010

அச்சகம் : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு




# பங்குனி மாத வெளியீடு

**வெளியீட்டுரை -**

பங்குனி மாத மலருக்கான வெளியீட்டுரையினை யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அதிபர் க. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் இன்றைய தினம் இந்த ஞானச்சுடர் எனும் மலரை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஆச்சிரமமானது

* வயிற்றுப்பசி     * அறிவுப்பசி

ஆகிய இரண்டையும் போக்குகின்றது. அத்தோடு மனிதனது அறிவு வளரவும் மற்றும் முழுமனிதனாக வாழவும் இவ் ஆச்சிரமம் உதவி புரிகின்றது.

மனிதனது அறிவைப் பெருக்கவும், சமய நூலாகவும், ஞானச்சுடர் ஒவ்வொரு மாத இறுதியிலும் வெளியிடப்படுகின்றது. தொடர்ந்து இந்நூல் வெளிவர எல்லாம் வல்ல சந்நிதி வேற்பெருமானை வேண்டிக் கொண்டு மேலும் இவ் ஆச்சிரமமானது வளர்ச்சி பெறவேண்டும் என்றும் கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை-**

சுடரின் 147 இதழாக வெளிவந்த பங்குனிமாத மலரின் மதிப்பீட்டுரையினை காரை எம்.பி. அருளானந்தம் அவர்கள் நிகழ்த்தினார். அவர் தனது மதிப்பீட்டுரையை இரத்தினச் சுருக்கமாக கூறினார்.

"அவனருளாலே அவன் தாள் வணங்கி... என்பதற்கிணங்க எல்லாம் வேற் பெருமானாலே நடைபெறுகின்றது. ஞானச்சுடரானது முக்கியமான செய்தியையும், சமயக்கோட்பாட்டையும் ஞானச்சுடர் தாங்கி வந்துள்ளது. இம்மலரானது பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் அக்காலவோட்டத்தை எதிர்த்து நின்று வெளிவருவது மிகவும் போற்றுதற்குரிய ஒரு விடயமாகும்.

ஒவ்வொரு கட்டுரையாளரும் தரமான ஆக்கங்களை வழங்கிக் கொண்டிருப்பதன் காரணமாக இம்மலரின் வளர்ச்சிக்கு ஊன்றுகோளாகவும் விளங்குகின்றார்கள். ஞானச்சுடர் என்ற "ஞானக்குழந்தை" ஒரே வீட்டில் தொடர்ந்து வளர்ந்து வருவது வியப்படையத்தக்க ஒரு விடயமாகும்.

ஞானச்சுடர் என்றும் வாழி! வாழி! என கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவ் செய்தார்.




பலர் தங்களுடைய செயற்பாடு களை வேலைத் தளத்திலோ, சமூகத்திலோ மேற்கொண்டு செல்லும் பொழுது பல்வேறு பிரச்சினைகள் சவால்கள் என்பவற்றை எதிர் நோக்கினாலும் இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து தமது இலக்குகளில் வெற்றியடைய வேண்டும் என்ற பேரவாவோடு செயற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் கண் கூடாக காணமுடிகின்றது. இவர்கள் பல தடைகளையும் தாண்டி பல கஷ்டங்கள் மத்தியில் தமது நோக்கினை அடையும்போது அனைத்துப் பிரிவினரிடமிருந்தும் அவர்களுக்குரிய கௌரவம் வழங்கப்படுகின்றது. இத்தகைய ஒரு செயற்பாட்டின்மூலம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்கள் யாவும் மேன்மையடைய வழி வகுக்கப்படுகின்றது.

ஆனால் இத்தகைய இயல்பான தன்மைகளுக்கு மாறான ஒரு குழப்பமான தன்மையும் சமூகத்தில் அதிகரித்துவருகின்றது. அதாவது இயல்பாக தனது கடமைகளைச் சிறப்பாகவும் திருப்தியாகவும் செய்வதனால் கிடைக்கும் புகழ், பாராட்டு என்பன கிடைக்கவேண்டும் என்பதற்காகவே கடமை வீரர் போலவும் சமூகத்திற்கு சேவை செய்பவர் போலவும் நடிக்கின்ற தன்மை அதிகரித்து வருகின்றது. அது மட்டுமன்றி இன்னும் சிலர் பதவிகளை வலிந்து பெறமுயற்சிப்பதும் அதற்காக வெளிப்படையாகவே குறுக்கு வழிகளைக் கையாளு கின்ற பல சம்பவங்களும் பல இடங்களிலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆலயம், வித்தியாலயம், பொது நிறுவனங்கள் போன்ற புனிதமான ஸ்தாபனங்களில் இவ்வாறானவர்கள் செயற்படமுயற்சிக்கும்போது அது சமூக ரீதியான மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது திண்ணம். ஆகவே இவ்வாறான ஒவ்வாத பண்புள்ளவர்களை நாம் அனுமதிக்கும்போது எமது சமூகம் பல பிளவுகளை அடைய வாய்ப்புள்ளது. பொதுவாக இவ்வகையான புகழ், பெருமை, பதவி, அதிகாரம் போன்றவற்றை விரும்புகின்றவர்களை சமூகம் திருத்துவதென்பது கடினமான விடயம். "திருடராயப் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது" என்பது போல இவ்வாறு ஒவ்வாத இயல்புள்ளவர்கள் சமூகத்தின் நலனைக் கருத்தில் கொண்டு தாங்களாகவே திருந்த முயற்சிக்க வேண்டும்.

உ




# தேடவேண்டும் தம்பி

தேட வேண்டுந் தம்பி - சந்நிதி
சிவகுமரன் பாதத்தைச்
சிந்தனைசெய் தெந்நாளும் - தேட

ஆடியும் பாடியும் ஆறுமுக நாதாவென்று
கூடியும் ஆறிருகை குமரா குகா என - அவனை (தேட)

நாடிச் சந்நிதி சென்று
நல்லாற்றங் கரைதனிலே
கோடி சூரியப் ரதாகா
குழந்தைவடி வேலா என்றும்
மாடநெடுங் கோபுர
மன்னுங் கோயிலுள்ளானை
ஈடில் லடியார்க் கருளி
எழுந்தருள் எம்பிரானை (தேட)




மாடு மனைவி மக்களென்று
மனதில் துயர் கொள்ளாமல்
மதிக்கும் சுமைக ளெல்லாம்
துதித்தவன் தோளில் வைத்து
வாடிடா வகை யுன்தன்
வாழ்வு சிறப்படைய
வடிவேல் முருக வேளை
குடியாய்ச் சந்நிதி யமர்ந்து (தேட)

புலவர் மணி
வை.க. சிற்றம்பலவனார் அவர்கள்


# சித்திரை மாத சிறப்பும் பிரதி பெறுவோர் விபரம்

சி. கணபதிப்பிள்ளை
(பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்)
நா. உமாசங்கர்
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)
நா. குகன்
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)
பொ. பாலசிங்கம்
(பத்தமேனி, அச்சுவேலி)
இராசையா சற்குணதாஸ்
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
திருமதி. ஸ்ரீனிவாசன்
(பழம் றோட், கந்தர்மடம்)
த. சிவலிங்கம்
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)
திருமதி சிவராஜா
(நல்நடத்தை உத்தியோகத்தர், கல்வியங்காடு)
க.வ. இரவீந்திரராஜா
(விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
கு.மு. இராஜேந்திரா
(வட்டுக்கோட்டை)
கு. சண்முகநாதன்
(ஸ்ரீ ராமகிருஷ்ண பவனம், கொக்குவில்)
க. இராமச்சந்திரன்
(ஊரெழுகிழக்கு, சுண்ணாகம்)
வீ. கிருஷ்ணராஜா
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)
சி. கனகசபாபதி
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)
ம. குலநாதன்
(நாதன் கராஜ், ஆவரங்கால்)
க. பாலசுப்பிரமணியம்
(பதிவாளர், இமையாணன்)



ஐயாத்துரை முருகதாசன்
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசோதகர்)
கனகலிங்கம் சந்திரவாசன்
(சிறுப்பிட்டி மேற்கு)
செ. சிவராசா
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)
S. தர்மபாலகிருஷ்ணன்
(தும்பளை, பருத்தித்துறை)
த. நடேசன்
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
க. கிரிதரன்
(திரு இல்லம், கரவெட்டி)
மா. சண்முகநாதன்
(வியாபாரி மூலை, பருத்தித்துறை)
வீரையா சிவஞானம்
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
க.கு. கிருபாகரராசா
(பிரதான வீதி, ஆவரங்கால்)
இ. மனோகரன்
(மனோ லைற், கோப்பாய்)
அ. தவராசசிங்கம்
(களஞ்சியப் பொறுப்பாளர், உடு. ப.நோ.கூ. சங்கம்)
சி. நந்தகுமார்
(வங்கி ஊழியர், உரும்பராய்)
கு. லோகேந்திரன்
(மில் ஒழுங்கை, மல்லாகம்)
ச. கனகராசா
(துஷி மினிசினிமா, ஆவரங்கால்)
சி. விபுலானந்த அடிகள்
(லிகிதர், உடு. ப.நோ.கூ. சங்கம்)
சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
இ. விஜயகருணா
(விதுரன் மோட்டோர்ஸ், ஆவரங்கால், புத்தூர்)
செயலாளர்
(நகரசபை, வல்வெட்டித்துறை)
வ.க. சாம்பசிவம்
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)

சு. அமிர்தசாகரன்
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)
சி. சக்திகிரீவன்
(கிராம சேவையாளர், ஏழாலை)
உரிமையாளர்
(ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ், சுண்ணாகம்)
தி. பாலசிங்கம்
(அச்சுவேலி தெற்கு அச்சுவேலி)
இ. ஜெயபரிபாலன்
(உரும்பராய் கிழக்கு, உரும்பராய்)
சி. சுகிர்தலிங்கம்
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)
T. இரவீந்திரதாஸ்
(சாமியன் அரசடி, கரவெட்டி)
ச. மகாதேவன்
(ஜெயந்தி என்ரபிறைஸ், ஆவரங்கால்)
தலைவர்
(சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)
கு. மாணிக்கராசா
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ. கூ. சங்கம்)
உரிமையாளர்
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)
ஆ. மணிமாறன்
(அராலிமத்தி, அராலி)
ந. ஜெயக்குமார்
(விற்பனையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)
க. ஞானச்சந்திரன்
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
ஐ. வேலாயுதர்
(வேல்வாசம், கோப்பாய்)
ஐ. நற்குணநாதன்
(உடுவில், சுண்ணாகம்)
தம்பு சற்குருநாதன்
(ஏழாலை மேற்கு, சுண்ணாகம்)
வே.க. கந்தையா
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
திரு. இரா. சிவலிங்கம்
(கேசரிவிலா, கரவெட்டி)



வே. சந்திரசேகரம்பிள்ளை
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
K. இராமச்சந்திரன்
(சங்கானை)
த. இராஜசிங்கம்
(நீர்வேலி)
கு. செல்வலட்சுமி
(உடுவில், சுன்னாகம்)
திருமதி P. நந்தகோபால்
(பிளாக்றோட், சங்கானை)
ம. புலேந்திரன்
(கரணவாய், கரவெட்டி)
த. விமலேஸ்வரன்
(மாலிசந்தி, அல்வாய்)
வீ. செல்வராஜா
(ஊரெழு கிழக்கு, சுன்னாகம்)
கி. தவராசா
(காந்தியூர், புலோலி)
சி. பாலபாரதி
(கற்கோவளம், பருத்தித்துறை)
V. கனகநாயகம்
(கனகேந்திரா தொலைத்தொடர்பு நிலையம், இணுவில்)
உரிமையாளர்
(அரவிந் போட்டோ, ஆனைப்பந்தி)

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.No. 021-2263406
021 3219599

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org

# "விகிர்தி" வருடப் பிறப்பு மலர்ந்தே மக்களுக்கு விழவு தர வேண்டும்

- மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தம் அவர்கள் -

இறைவனை ஒளிவடிவத்தில் வழிபடுவது ஆலய வழிபாடாகும். மேடம் முதல் மீனம் வரை பன்னிரெண்டு ராசிகள் உள்ளன. ஒவ்வொரு ராசியும் முறையே சித்திரை முதல் பங்குனி வரை ஒவ்வொரு மாதத்தைக் குறிக்கிறது. மேடம் முதலாவது மாத மாகக் கொள்ளப்படுகிறது. முதலாவது இராசியான மேடத்தில் சூரியன் புகும் தொடக்க நாள், சித்திரை முதல் நாளாகும். இந்த நாளே புத்தாண்டு தினமாகக் கொண்டாடப்படு கிறது. இந்துக்கள் சித்திரை முதலாம் திகதியன்று புது வருடப் பிறப்பினை பண்டிகையா கக் கொண்டாடுவதை மரபாகக் கொண்டுள்ளனர்.

சூரியன் நிற்கும் நிலையைக் கொண்டு பருவகால மாற்றங்கள் ஏற்படுகின்றன. இளவேனில், முதுவேனில், கார், கதிர், முன்பனி, பின்பனி என ஆறு பருவகாலங் கள் ஒரு வருடத்தில் ஏற்படுகின்றன. வசந்தருது எனும் இளவேனிற் காலம் மக்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இதமான சுகமான காலம். மிதமான காலநிலை, பதமான இயற்கைச் சூழல், பூத்துக் குலுங்கும் மலர்களின் மலர்ச்சி அறுவடைக்குப் பின்னர் தானிய விருத்தி போன்றன இளவேனிற் காலத்து இலட்சணங்கள், இந்த மகிழ்ச்சியும், பூரிப்பும் நிறைந்த பொன்னெழில் கொண்ட வசந்த ருதுவின் தொடக்கத்தில் புதுவருடமும் மலர்கிறது.

புதுவருடப் பிறப்பைத் தொடர்ந்து வருகின்ற இளவேனிற் பருவத்தை ஆடல், பாடல் விளையாட்டுக்கள், மங்களகரமான காரியங்கள் விருந்துண்ணல் என்பனவற்றில் மக்கள் ஈடுபாடு கொண்டு இன்பமாகக் களிப்பர். இத்தகைய இன்பமான சம்பிரதாயமான, மரபு வழியான விளையாட்டுக்களும், பொழுது போக்குகளும் மலர்கின்ற புத்தாண்டை அலங்கரிக்கின்றன. உலகியல் இன்பங்களை ஆன்மீகத்துடன் இணைத்து, ஆன்மீக ஒப்புதலுடன் அனுபவிக்கும்போது அதனால் கெடுதல் இல்லை என்பதை இந்துக்கள் புதுவருடத்தை கொண்டாடி மகிழும் நெறிமுறைகளைப் பார்க்கும்போது புரிந்து கொள்ள முடிகிறது.

அதனால் வருடப் பிறப்பு, பண்டிகை அதைத் தொடரும் பல்வேறு நிகழ்ச்சிகள் யாவும் சமயத்தோடு தொடர்புபடுத்தி இறை சிந்தனையுடன் ஆற்ற வேண்டியதன் அவ சியம் வற்புறுத்தப்பட்டது. புதுவருடப் பண்டிகை சமூகவிழாவாக மாத்திரம் அமையாது சமய விழாவாகவும் விளங்குவதில் அதன் சிறப்புத் தங்கியுள்ளது.

புதுவருடம் பிறப்பதற்கு முன்னும் பின்னும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியை புண்ணிய காலம் என்பர். இப்புண்ணிய காலத்தில் இறைவனை நினைத்து சங்கற்பித்து

மருத்து நீர் தலையில் தேய்த்து நீராடி, புத்தாடை தரித்து திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து குரு, பெற்றோர், பெரியோர் ஆகியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று இயன்ற தானதர்மங்களைச் செய்தல் வேண்டும்.

புதுவருடம் பிறக்கும் நேரத்தைச் சோதிடர்கள் கணித்துக் கூறுவர். குறித்த அந்த வேளையில் குத்துவிளக்கேற்றி நிறைகுடம் வைத்து புத்தாண்டை வரவேற்பது மரபு. அதிகாலையில் நித்திய, நைமித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து தத்தம் இல்லங்களில் குடும்பத்தவர் சகிதம் சூரியனுக்குப் பொங்கல் பூசைகள் செய்வது இந்துக்களின் வழக்கம்.

நல்ல சுபநேரத்தில் கைவிசேஷம் நடைபெறும். கைவிசேஷம் என்பது வெற்றிலையில் நெல் அல்லது பச்சையரிசியிட்டு அதன்மீது காசு பணம் வைத்து குடும்பத் தலைவன் தமது குடும்பத்தவருக்கு வழங்குதல் என்பதைக் குறிக்கும்.

கைவிசேஷம் பெரியவர்களிடம் பெற்ற பின்னரே கொடுக்கல் வாங்கல் ஏனையவர்களிடம் செய்யப்படும். விருந்துண்ணல், குரு, பெரியவர்கள், நண்பர்கள் தரிசனம் என்பன வியாழன், செவ்வாய் தவிர்ந்த நாட்களில் திதி நட்சத்திரம், யோகம் என்பன சுபமாகவுள்ள வேளையில் நிகழ்த்தப்படும். எந்த வேலையையும் நல்ல நாள் மூகூர்த்தம் பார்த்து சுபவேளையிலேயே புது வருடத்தில் தெய்வத்தை நினைத்துத் தொடங்கும் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்படுகிறது. இவை அனைத்தும் வெறும் சம்பிரதாயங்கள், அர்த்தமற்ற சடங்குகள் என்று கருதிவிடக்கூடாது. இவற்றுக்குப் பின்னால் பல அர்த்தங்கள் உண்மைகள் உண்டு. இவை வீணானவை என்றால் எப்பொழுதோ மறைந்திருக்கும். ஆனால் இன்று வரை நிலைத்திருக்கின்றன. இவற்றால் மனிதர்கள் புத்துணர்வும், மகிழ்ச்சியும், புதுத்தென்பும் பெறுகின்றார்கள்.



வாழ்க்கையில் பிடிப்பும் நம்பிக்கையும் திருப்தியும் அடைகிறார்கள். இவையே இதற்குச் சான்று கூறப்போதுமல்லவா? புது வருடத்தில் பரிமாறிக்கொள்ளப் படும் மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களும், நல்லெண்ணங்களும் வாழ்வில் அமைதியையும், சாந்தியையும் தரும் என்பது திண்ணம். எல்லோரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், சமாதான வாழ்வைச் சந்திக்கவும், மலருகின்ற விகிர்தி வருடம் தரவேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

உ

# இன்றைய கல்விமுறை ஆன்மவிடுதலைக்குத் துணைநிற்கின்றதா?

- ஆ. மகேசு அவர்கள் -

உலகத்தின் பல இடங்களிலும் சம உரிமைகள் கிடைக்காத அல்லது பறிக்கப் பட்ட மக்கள் விடுதலை வேண்டி போராட்டங்கள் நடாத்தி வரும் இந்நாளில், எமக்குள்ளே இருக்கும் ஆன்மா விடுதலை வேண்டி போராடிக் கொண்டிருப்பதை நாம் உணருவதில்லை. ஆகவே தான் விடுதலை வேண்டி நிற்கும் இந்த ஆன்மாக்களுக்கு இக்காலக் கல்வி முறை துணை நிற்கின்றதா என அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வி என்பது; மனிதனால் வளர்க்கப்பட்ட செயற்கைமுறை நாகரிகத்திற்கு ஒரு குழந்தையை ஆயத்தம் செய்வது அல்ல. குழந்தையின் இயல்பு மனிதனால் படைக் கப்பட்ட சமூகத்தினால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது கல்விச் சிந் தனையாளர் "ரூஸோவின்" கருத்தாகும். இயற்கை அன்னையிடமிருந்து வரும் எவையும் சிறந்து விளங்குகின்றன. ஆனால், அவை அனைத்தும் மனிதனின் கைப்பட்டதும் சீரழிகின்றன என்பது ரூஸோவின் வாதமாகும். குழந்தைகளின் ஆற்றல்கள் மலர்ச்சியடைதல் இறை வனது திருவுளக்குறிப்பின்படி நிறைவேறுகின்றது என "புறொபெல்" என்ற கல்விச் சிந்தனை யாளர் குறிப்பிட்டுள்ளார். குழந்தையை ஒரு விதையாகக் கருதினார் "பெஸ்டலாஸ்லி" என்ற கல்விச் சிந்தனையாளர். விதைக்குள் எதிர்காலத்தில் பெரிய மரமாகும் ஆற்றல் சிறுவடி வில் உள்ளுறைந்து இருப்பதுபோல, பிற்காலத்தில் வெளிவர வேண்டிய பேராற்றல்கள் குழந்தைகளிடம் உள்ளுறைந்து காணப்படுகின்றன என்று இவர் எண்ணினார். அவ்வாற்றல் களை வெளிப்படுத்துதலே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டுமென விரும்பினார்.

எனவே மேலே கூறப்பட்ட ஒரு சில கல்விச் சிந்தனையாளர்களின் சிந்தனை களைத் தொகுத்துப் பார்க்குமிடத்து, இயற்கையாகவே குழந்தைகளிடம் காணப்படும் இயல்பூக்கங்களைச் சரியான முறையிலே நெறிப்படுத்தி, ஆற்றுப்படுத்தலே கல்வியின் இலக்காக எதிர்பார்ப்பதில் தவறேதும் கொள்ளமுடியாது என்பது எமது கருத்தாகும்.

இதன் பின்னணியிலேயே இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் இன, மத, மொழி வேறுபாடின்றி சமகல்வி வழங்கப்பட்டு வருகின்றது. காலத்துக்குக் காலம் கல்விக் கொள்கைகளிலே மாற்றங்களைச் செய்தும், பாடநூல்களை மாற்றியமைத்தும் கோடிக்கணக்கான நிதியினை அரசு கல்விக்கென செலவு செய்து வந்திருக்கின்றது. தற்போதும் அப்படியே செய்து வருகின்றது. எதிர்காலத்திலும் இவ்வாறு அமையலாம்.

ஆக, கல்வி என்பது பிள்ளைகளினுடைய அறிவாற்றலை மட்டும் விருத்தி செய்து, தொழிலுகத்திற்குத் தயார் செய்யும் முகவர் நிலையங்களாகவே பாடசாலைகள் இயங்கி வருகின்றன என்பதை யாரும் மறுதலிக்க மாட்டார்கள். கற்ற கல்வியின் மூலம் ஏதோ ஒரு தொழிலைப் பெற்று வாழ்க்கையை நடாத்த வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. அதிலும் இல்லற வாழ்வில் காலடி எடுத்து வைக்கும் ஆண்மகன் ஏதோ ஒரு தொழிலை மேற்கொள்ளவேண்டும். "உத்தியோகம் புருஷலட்சணம்" என்பது இதனையே சுட்டி நிற்கின்றது.

***"இல்லானை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய் வேண்டாள்***
***செல்லாதவன் வாயிற் சொல்"***

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழியும் இதற்கு வலுச்சேர்க்கின்றது. நாம் கற்ற கல்வியின் மூலம் தொழில் வாய்ப்பினைப் பெற்று வாழ்க்கையைச் சீரும் சிறப்புமாக நடாத்திவரும் அதேநேரம், நாம் மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கத்தைச் சிந்தித்துப் பார்க்கத் தவறி விடுகின்றோம். மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கம் ஆன்ம விடுதலைபெற்று இறைவனுடைய பாதங்களைச் சென்றடைதலே என எமது சமய நூல்கள் கூறுகின்றன. இதற்கு இக்காலக் கல்விமுறை உறுதுணை செய்கின்றதா? இல்லையே!.

சகல பாடசாலைகளிலும் தரம் ஒன்று தொடக்கம் உயர்தர வகுப்புக்கள் வரை சமய பாடம் கற்பிக்கப்படுகின்றது. இச்சமய பாடம், கணித பாடத்தைப் போல, விஞ்ஞான பாடத்தைப் போல, ஆங்கில பாடத்தைப் போல முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்கப்படுகின்றதா? அழகியல் பாடங்களைப் போல் சமய பாடத்தையும் கற்பிப்பதால், மாணவ சமுதாயம் சமயத்திலுள்ள விழுமியங்களை அறிவு பூர்வமாகத் தெரிந்து அதன்படி வாழ்க்கையை நடாத்தக்கூடிய வாய்ப்பினை மாணவர்கள் இழந்துள்ளனர் என்றே கூற வேண்டும். சமய பாடத்தைத் துறைபோகக் கற்றுத் தேர்ந்த எத்தனை ஆசிரியர்கள் இச்சமய பாடத்தை கற்பிக்கின்றார்கள். நுனிப்புல் மேய்ந்தாற்போல் கற்பிக்கும் ஆசிரியர்களால் சமய விழுமியங்களை மாணவ சமுதாயம் உள்வாங்க முடியுமா?

எனவே சமயம் வேறு, வாழ்க்கை வேறு அல்ல. எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று இடித்துரைப்பது சமயக் கல்வியே. இச்சமயக் கல்வி இளம் வயதிலிருந்தே முறைப்படி கற்பிக்கப்படவேண்டும். சமய பாடத்தைக் கட்டாய பாடமாக்கினால் மட்டும் இளஞ் சமுதாயம் சமய விழுமியங்களைத் தெரிந்து வாழ்க்கையை அதன்படி நடத்தும் வாய்ப்பு ஏற்படும்.

இலங்கையில் எழுத்தறிவு வீதம் கூடுதலாகவே உள்ளது என மதிப்பீடு தெரிவிக்கும் அதே நேரம், எழுத, வாசிக்க, படிக்கத் தெரிந்த மக்கள் வாழுமிந்தச் சிறிய தீவிலே சாந்தி, சமாதானம், அமைதி எட்டாக்கனியாகவே இருக்கின்றனவே. இதற்கு என்ன காரணம்? தன்னுயிரைப் போல் மன்னுயிரையும் மதிக்கும் உயர்ந்த மாண்பு அருகி, உத்தியோகம் பெறுவதற்குக் கல்வி என்ற ஆங்கிலேய காலத்துக் கல்வி முறையை நாம் இப்போதும் பின்பற்றி வருகின்றமையால், நாட்டிலே வளர்க்கப்பட வேண்டிய பண்புகள்

யாருக்குமே தெரியாமல் மறைந்துவிட்டன. அந்த உயர்ந்த மாண்புகள் இளைஞர் சமுதாயத்திடமிருந்து வெளிக்கொணரப்படவேண்டும். இதற்கு கல்வி முறையிலே சமயக் கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

வாழ்க்கை அநித்தியமானது. ஆனால் எம்முடலிலுள்ள ஆன்மா நித்தியமானது. அழிவில்லாதது. எமதுடல் அழியும் போது, ஆன்மா இன்னோர் உடம்புக்குள் சென்று சேருகின்றது. இது நாம் செய்யும் நல்வினை தீவினைப் பயன்படி நடந்தேறுகின்றது. ஆகவே மனிதப் பிறவி எடுத்துள்ள நாங்கள் இந்த மனிதப்பிறவியிலேயே ஆன்ம விடுதலையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மனிதப் பிறவியிலேயே நாம் அடையும் வேதனைகளையும், சோதனைகளையும் சொல்லில் வடிக்க முடியாது. ஆகவே இப்பிறவியை விட்டு வேறு பிறப்பெடுத்தால் எமது நிலை என்னாகும்?

*“குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப்பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே”*

என நாவுக்கரசரின் பாடல் மனிதப் பிறவியின் மாண்பினை அழகாகச் சுட்டி நிற்கின்றது. ஆகவே இந்தப் பிறவியிலே ஆன்ம விடுதலையை நாமெல்லோரும் வென்றெடுக்கத் திடசங்கர்ப்பம் பூணுவோமாக.

# கும்பாபிஷேகம் விளக்கம்

கோயில்களில் கும்பாபிஷேகம் செய்யும்போது, ‘அஷ்ட பந்தன கும்பாபிஷேகம்’ என்றும், ‘நூதன கும்பாபிஷேகம்’ என்றும் குறிப்பிடுவர். இவ் இரண்டு பெயர்களுக்குமான வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளுங்கள், ‘நூதனம்’ என்றால், ‘புதுமை’, புதிதாக கோயில் கட்டி செய்யப்படும் கும்பாபிஷேகம், ‘நூதன கும்பாபிஷேகம்’ ஆகும். பழமையான கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய்யும்போது, சுவாமி சிலைகளுக்கு கீழே ‘அஷ்டபந்தனம்’ என்னும் மருந்து சாத்தி மந்திரங்கள் சொல்லி சக்தியை அதிகரிப்பர்.

எனவே, இந்தக் கும்பாபிஷேகத்தை, ‘அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்’ என்பர்.

உ



# பிரார்த்தனை தினமும் அவசியமா

**- ஐ.கோ. சந்திரசேகரம் (J.P) அவர்கள் -**

நாம் ஏன் தினமும் பிரார்த்தனை செய்ய வேண்டும்? நீண்ட காலம் குளிக்காமல் இருந்தால் புழு, பூச்சி முதலியவைகள் வந்து நம் உடலை அழித்துவிடும். இதை நம் கண்ணால் பார்க்க முடிகிறது.

ஆனால் மனதில் ஏற்படும் மாற்றங்கள் கண்ணுக்கு புலப்படாதவை. பிரார்த்தனை என்ற சோப்பிட்டு தியானம் என்ற நீரினால் மனதைத் தினமும் கழுவவேண்டும். இல்லாவிட்டால் உடல் சீரழிவது போல, மனதில் காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாத்சர்யம் ஆகிய நோய்கள் பெருகி நம் ஆன்மீக வாழ்க்கையைச் சிறிது சிறிதாக அழித்துவிடும்.

### *பிரார்த்தனையின் வலிமை*

தினமும் பிரார்த்தனை செய்யும்போது நமக்கு ஒரு மிகப்பெரிய சக்தியுடன் தொடர்பு கிடைக்கிறது. அந்த சக்தியானது நமது மன உளைச்சல், பிரச்சினைகள் ஆகியவற்றை அகற்றி ஊக்கம், நம்பிக்கை, ஆற்றல் போன்றவற்றைக் கொடுக்கிறது.

ஆன்மீக வாழ்க்கையை முழுமையாக ஏற்று வாழ்ந்து வருபவர்கள் பிரார்த்தனையின் மூலம் மனதளவில் இளமையாகவும், வலிமையாகவும் விளங்குகிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் ஸ்ரீராமகிருஷ்ணரை ஓர் அமுத கலசமாக வர்ணிக்கிறார். அந்த அமுதம் எவற்றால் செய்யப்பட்டிருக்கிறது? அதில் வேத, வேதாந்தங்களின் சாரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஸ்ரீமத் நாராயணனின் பத்து அவதாரங்களின் தத்துவங்களும் சேர்ந்துள்ளன. இவற்றுக்கு மேலாக பிரம்மா, விஷ்ணு, மகேசுவரர் ஆகியோரின் சக்திகளும் இணைந்துள்ளன.

அப்படிப்பட்ட அமுதத்தை நாம் தியானத்தின் மூலம் பருகினால் ஆன்மீக வாழ்வின் உன்னதத்தை அடைய முடியுமென்று சுவாமி விவேகானந்தர் உறுதியாகக் கூறுகிறார்.

ஆன்மீக வழியில் வாழ்வது எவ்வாறு என்ற முறையை ஸ்ரீராமகிருஷ்ணர் கீழ்க் கண்டவாறு கூறியுள்ளார்.

'நான் என் மனதில் பதினாறில் ஒரு பங்கை மட்டும் வெளியில் வைத்து உலக வாழ்வில் ஈடுபடுகிறேன். மீதி பதினைந்து பாகங்கள் தேவியின் பாத கமலத்தில் வைத்துள்ளேன். நீங்கள் ஒரு பாகத்தை இறைவன் திருவடியில் வைத்து, மீதி பதினைந்து பாகங்களை உலக வாழ்வில் ஈடுபடுத்தலாம்!'

மனதில் பதினாறிலொரு பங்கையாவது பகவானிடத்தில் செலுத்தவேண்டும். இறைவன் மீது அளவற்ற அன்பு வைத்தால் மனம் அவர் பாத கமலங்களில் சிறிது சிறிதாக லயிக்கும்.

அன்றாட வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைக் கூர்ந்து கவனிப்பதன் மூலம் அவற்றின் உட்பொருளை உணர்ந்து கொள்ளலாம்.

உதாரணமாக, பால் கெட்டுப்போகாமலிருக்க நன்கு காய்ச்சுகிறோம். பிறகு உறை யூட்டி தயிராக்குகிறோம். பாலினை விட தயிரின் விலை இரு மடங்கு அதிகம்.

அதேசமயம் பாலினை விட தயிர் இரண்டு மடங்கு அதிக நாட்கள் கெடாமல் நீடிக் கிறது. தயிரைக் கடைந்தால் வெண்ணெய் கிடைக்கிறது. வெண்ணெய் தயிரை விடப் பத்து மடங்கு விலை அதிகமானாலும் தயிரைவிடப் பத்து மடங்கு அதிக நாட்கள் நீடிக்கிறது.

வெண்ணெய்யைக் காய்ச்சினால் கிடைக்கும் நெய் வெண்ணெயை விடப் பல மடங்கு விலை அதிகம். ஆனால் நெய்யைப் பல மாதங்களுக்கு உபயோகப்படுத்தலாம்.

பக்தர்களாகிய நாம், பகவான் சோதிக்கும்போது அவர் நம்மைப் பாலாய்க் காய்ச்சிக் கொண்டிருக்கிறார், தயிராய் கடைந்து கொண்டிருக்கிறார், வெண்ணையாக்கிக் கசடை அகற்றிக் கொண்டிருக்கிறார், என்று எண்ணிக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் பக்தனின் மதிப்பு பல மடங்காக அதிகரிக்கின்றது.

அந்தப் பாதச்சுவடுகள் எங்கே?

அவன் சிறு வயது முதலே இறைவனிடம் நம்பிக்கையுள்ளவனாக இருந்தான். இறந்த பின்பு சொர்க்கம் சென்றான்.

அவன் சொர்க்கத்தில் பல வரைப்படங்களைக் கண்டான். ஒவ்வொரு படத்தின் கீழும் சொர்க்கத்தை அடைந்திருந்த ஒவ்வொருவரின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

அவைகளுள் தன்னுடைய பெயர் இருக்கிறதா என்று ஆவலுடன் தேடினான். ஓர் ஓவியத்தின் கீழ் அவன் பெயர் இருந்தது. அது ஒரு கடற்கரையின் சித்திரம்

கடற்கரை மணலில் இரண்டு ஜோடி பாதச்சுவடுகள் காணப்பட்டன. ஒன்று தன்னுடையது. மற்றொன்று இறைவனுடையது என்று அவனுக்குப் புரிந்தது.

அதைத் தொடர்ந்து நோக்கினான். சில இடங்களில் ஒரு ஜோடி பாதச்சுவடுகள் மட்டும் காணப்பட்டன. பல இடங்களில் இரண்டு ஜோடி பாதச்சுவடுகள். அவனுக்குப் புரிய வில்லை. கூர்ந்து கவனித்தான்.

அவனுடைய 18, 19 வயதில் ஓவியத்தில் ஒரு ஜோடி பாதச்சுவடுகள் மட்டும் இருந்தன. அந்த வயதில் அவன் பரீட்சையில் தோல்வியடைந்தான். பலவிதமாகத் துன்பப் பட்டதை நினைவு கூர்ந்தான்.

19 வயதிற்கு மேல் இரண்டு ஜோடி பாதச்சுவடுகள். அடுத்து அவன் 32 வயதிலிருந்து 34 வயதுவரை நோய் வாய்ப்பட்டிருந்தான். அப்போதும் ஒரு ஜோடி பாதச்சுவடுகள் தான்.

உடனே அவன் 'நான் கஷ்டப்படும் போது கடவுள் என்னை விட்டு எங்கோ போய் விடுகிறார். நான் மகிழ்ச்சியாக இருக்கும்போது மட்டும் அவர் என்னுடன் வருகிறார்' என்று அவன் ஒரு முடிவிற்கு வந்தான்.

இறைவனிடம் அவன் கோபம் கொண்டான். நேராக இறைவனிடம் சென்று, "என் வாழ்நாள் முழுவதும் உங்கள் பக்தனாக இருந்திருக்கிறேன். ஆனால் துன்பம் வந்த போதெல்லாம் என்னைக் கைவிட்டு விட்டீர்கள்" என்று புலம்பினான்.

அதற்கு இறைவன், "மகனே, உனக்கு அந்தப் பாதச் சுவடுகளைச் சரியாகப் படிக்கத் தெரியவில்லை. நீ ஆனந்தமாய் இருக்கும்போது உன்னுடன் கைகோர்த்து கூடச் செல்வது என் வழக்கம். அதனால் இரண்டு ஜோடி பாதச்சுவடுகள் தென்படுகின்றன. நீ துன்பப்பட்ட போதெல்லாம் ஒரு ஜோடி பாதச்சுவடுகளை மட்டுமே காண்கிறாய். அவை உன் பாதச்சுவடுகள் என்றா நினைக்கிறாய்? இல்லை, உன் துன்ப காலங்களில் நீ காணும் பாதச் சுவடுகள் என்னுடையவை. ஏனெனில் உன் துன்பங்களின் போது உன்னை என் தோளில் அல்லவா நான் சுமந்து செல்கிறேன்!" என்று விளக்கினார்.

ஒரு முறை ஸ்ரீராமகிருஷ்ணர் கேசவர் வீட்டிற்குச் சென்றிருந்தார். "இன்று ஜகன்மாதா என்னை உங்கள் வீட்டில் ஜிலேபி சாப்பிடச் சொல்லியுள்ளாள்" என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கேசவரின் தாயாரிடம் கூறினார்.

கேசவரின் தாய்க்கு அளவற்ற மகிழ்ச்சி. ஜிலேபி அவர் வீட்டிலேயே இருந்தது. உடனே அதைக் கொண்டு வந்து சாப்பிடக் கொடுத்தார்.

அதன் பின்பு ஸ்ரீராமகிருஷ்ணர், "ஜகன்மாதா இன்று உங்கள் வீட்டில் ஐஸ்கிறீம் சாப்பிடச் சொல்லியிருக்கிறாள்" என்று கூறினார்.

கேசவரின் தாயார் திடுக்கிட்டார். ஏனெனில் வீட்டில் ஐஸ்கிறீம் இல்லை, அந்தப் பகுதியில் எங்கும் சுலபமாக ஐஸ்கிறீம் கிடைக்காது.

உடனே அவர் அம்பிகையிடம் மனமுருக வேண்டிக் கொண்டார். அந்தக் கணமே அதிசயமாகத் தெருவில் ஒருவன் ஐஸ்கிறீம் விற்றுக் கொண்டு சென்றான். சொல்லொணா ஆனந்தத்துடன் கேசவரின் தாய் ஓடிச் சென்று ஐஸ்கிறீம் வாங்கி ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அளித்தார். ஸ்ரீராமகிருஷ்ணரும் சாப்பிட்டார்.

நம் வாழ்க்கையில் ஜிலேபி போன்ற சாதகமான சம்பவங்களும், ஐஸ்கிறீம் போன்ற பாதகமான சம்பவங்களும் மாறிமாறி ஏற்படுகின்றன. நாம் எந்தத் தருணத்திலும் பகவானை நம்பிக்கையுடன் பிடித்துக் கொண்டிருந்தால் சோதனைகள் சாதனைகளாக மாறுகின்றன.

சோதனைகளைக் கொடுப்பவனும் இறைவனே, அவைகளை நீக்குபவனும் அவனே.

அதனால் துன்பம் வரும்போது மட்டுமல்லாமல் எக்காலத்திலும் இறைவனின் சிந்தனையில் தொடர்ந்து ஈடுபடவேண்டும். பிரார்த்தனை, தியாகம் இவற்றின் மூலம் நிச்சயமாக அந்த உன்னதநிலையை அடையலாம்.

உ

# பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக் கோவை

***82. அவளும் பெண்தானே!***

வண்ண மகளிரிடத்தொடு தம்மிடம்
ஒள்ளியம் என்பார் இடம் கொள்ளார் தெள்ளி
மிகக் கிழமை உண்டெனினும் வேண்டாவே பெண்டிர்க்கு
உவப்பன வேறாய் விடும்.

ஒப்பனை அலங்காரங்களால் தம்மை அழகு படுத்திக் கொள்ளும் விலை மாதர் வீடே, தம் வீடாகக் கொண்டு வாழ; அறிவில் சிறந்தோம், என்று கூறிக்கொள்ளும் பெரியோர் இடம் கொடுக்க மாட்டார்கள். ஆராய்ந்து பார்க்குமிடத்து, மனைவி என்பவள்; கணவனுக்கு மிகவும் உரிமை உடைய பொருள்தான் என்றாலும், அவளும் பெண்தானே! எனவே அவள் ஆசையும் வேறாகி விட்டால் பின் விபரீதம் அல்லவா? எனவே வேண்டாம் விலைமாதர் வீடே கதியெனக் கிடக்கும் வாழ்க்கை.

வண்ணமகளிர் - விலைமாதர்; ஒள்ளியம் - சிறந்தோம்; கிழமை - உரிமை; உவப்பான - விரும்புவன.

***83. புகழோடு வாழ....***

நிரல்படச் சொல்லார் நிழல் மிதித்து நில்லார்
உரைஇடை ஆய்ந்து உரையார் ஊர்முனிவ செய்யார்
அரசர் படை அளவும் சொல்லாரே என்றும்
கடைபோக வாழ்தும் என்பார்.

ஒரு வரிசையில் செல்லமாட்டார். ஒருவர் நிழலை மிதித்துக்கொண்டு அதன் மீது நிற்கமாட்டார். பேசுவதற்கு முன்பே யோசிக்காமல், பேசத் தொடங்கிய பின், பேச்சின் இடையில் யோசிக்கமாட்டார். ஊரார் வெறுக்கும் கோபிக்கும், காரியங்களைச் செய்யார். தம்முடைய அரசரின் படைபலத்தைக் கூட மற்றவர்க்குச் சொல்லமாட்டார்கள். நீடித்த புகழோடு நீண்ட நாள் வாழ நினைப்பவர்கள்.


நிரல் - வரிசை; முனிய - வெறுக்கும்.

***84. இவை – கவனம்***

அளைஉறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழை உறை சீயமும் என்று இவை நான்கும்

**இளைய எளிய பயின்றன என்று எண்ணி**

**இகழின் இழுக்கம் தரும்.**



புற்றில் வாழ்கின்ற பாம்பு, மன்னன், தீ, குகைக்குள் இருக்கும் சிங்கம் - ஆகிய நான்கையும்; இவை நமக்கு நெருக்கமானவைதானே, பழகியவைதானே, நன்கு தெரிந்தவைதானே என்று நினைத்து, அசட்டையாக இருப்பது ஆபத்தாக முடியும்.

அளை - புற்று; உறை - வாழும்; முழை - குகை; சீயம் - சிங்கம்.

***85. அரசனைப் போல வாழ்வது ஆபத்து***

**அறத்தொடு கல்யாணம் ஆள்வினை கூரை**

**இறப்பப் பெருகிய கண்ணும் - திறப்பட்டார்**

**மன்னரின் மேம்பட்ட செய்யற்க செய்பவேல்**

**மன்னிய செல்வம் கெடும்.**

தான தருமங்கள் செய்வதிலோ, திருமணங்கள் நடத்துவதிலோ, முயற்சி மேற்கொள்வதிலோ, குடியிருக்கும் வீடு கட்டிக் கொள்வதிலும் என்னதான் பெருஞ் செல்வம் இருந்தாலும், அறிவுடையோர், மன்னருக்கு மேலாக நடந்து கொள்ளக் கூடாது. அப்படி இல்லாமல் மன்னருக்கு மேலாகச் செய்வார்களானால், அவர்களின் அளவற்ற செல்வமும் அழிந்து போகும்.

ஆள்வினை - முயற்சி; கூரை - வீடு; இறப்ப - அதிகமாக; மன்னிய - மிகுந்த.

***86. கேட்கக் கூடாத கேள்வி***

**உண்டது கேளார் குரவளை மிக்காரைக்**

**கண்டுழிக் கண்டால் மனம் திரியார் புல்லரையும்**

**உண்டது கேளார் விடல்**

நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள்? என்று, ஆசிரியர், தாய் தந்தை, அரசன், தனக்கு மூத்தோன் ஆகிய ஐங்குரவரையும், தம்மின் உயர்ந்த பெரியோரையும் பார்த்த இடத்து, அவர்களை நோக்கிக் கேட்கக் கூடாது. பெரியோரிடமே கேட்கக் கூடாது என்றால் அற்பர்களிடம் நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள் என்ற கேள்வியைக் கேட்கலாமா? கூடாது, விடுங்கள்! மனத்தை அலையவிடாத - கற்றறிந்த பெரியார் கீழோர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்க மாட்டார்கள்.

திரிதல் - கெடுதல்.

***87. செய்யக் கூடாதது***

**கிடந்தாரைக் கால் கழுவார் பூப்பெய்யார் சாந்து**

**மறந்தானும் எஞ்ஞான்றும் பூசார் கிடந்தார்கண்**

**நில்லார்தம் கட்டில் மிசை**

ஒருவர் கட்டிலில் படுத்திருக்கும்போது, அவர் கால்களைக் கழுவக் கூடாது. அவர்கள் மேல் பூ போடக் கூடாது. மறந்தும் கூட, எப்படிப்பட்ட நிலையிலும், அவருக்குச் சந்தனம் பூசக் கூடாது. ஒருவர் படுத்திருக்க மற்றவர் அவர் அருகில் நிற்கவும் கூடாது.

சாந்து - சந்தனம்; எஞ்ஞான்றும் - எப்போதும்.

உ

# முதியோரை போற்றுவோம்



- இ. சாந்தகுமார் அவர்கள் -

மனித வாழ்க்கை பல்வேறுபட்ட மாற்றங்களிற்கு உட்பட்டு இறுதியில் முதுமை என்ற நிலையினை அடைகின்றது. அந்த நிலையினை அடைந்தவர்களின் வாழ்க்கைப் பாதையினை திரும்பிப் பார்க்கின்றபோது அவர்கள் வாழ்ந்த வாழ்வின் தார்ப்பரியம் தெரிகின்றது. அவர்களின் வாழ்க்கைக்குப் பின்னால் எத்தனையோ விடயங்கள் மறைந்தும் மறைக்கப்பட்டும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஒவ்வொரு முதியவர்க்கும் ஒவ்வொரு சரித்திரம் இருப்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியவர்களாக இருக் கின்றோம். "முதியோர் வாழும் காலம் வரலாறாகவும் வாழ்ந்து முடிந்த பின் இன்னொரு வருக்கு அது பாடமாகவும் அமைகின்றது". இவர்கள் தான் தமிழ்ப் பண்பாட்டுச் சக்கரத் தின் அச்சாணியாக திகழ்பவர்கள்.

முதுமை ஒவ்வொரு மனிதர்க்கும் கிடைக்கும் நன்கொடை. இந்த நன்கொடைச் சொத்தை நாம் விரும்பியோ விரும்பாமலோ பெற்றுத்தான் ஆக வேண்டும். எங்கு ஒரு முதியவர் பராமரிப்பு அற்று கைவிடப்பட்ட நிலையில் அநாதையாக இருக்கின்றாரோ அந்த முதியவரை நாம் அடையாளம் கண்டு அவரை ஆதரித்து உரிய இடத்தில் சேர்க்க வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு சிந்தனை உடைய மனிதனிற்கும் உண்டு என்பதை மறந்து விடக்கூடாது.

முதியோர்கள் அவனியில் நடமாடும் தெய்வங்கள் என்ற நம்பிக்கையும் மன உணர்வும் இருத்தல் வேண்டும். ஏனெனில் எதிர்காலத்தில் நாமும் முதுமை என்ற நிலையினை நோக்கிய பயணத்தில் அதேபாதையில் தான் செல்கிறோம் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

முதியவரிடம் இருக்கின்ற அறிவு, அனுபவம், ஆளுமை, ஆற்றலைப் பெற வேண் டிய அவசியமும் தேவையும் எமக்கு உண்டு. அவர்களிடம் இருந்து பெற வேண்டிய விடயத்தினை நாம் எலி போன்று துருவித் துருவி எடுக்க வேண்டும். அப்போதுதான் அவர் களிற்குள் இருக்கின்ற பலதரப்பட்ட சுவையான விடயங்களை கற்றுக் கொள்ள முடியும்.

இவர்களின் சிந்தனைகள் படிமுறை படிமுறையாக ஒவ்வொரு விடயத்தினையும் ஒழுங்கு படுத்தி செயற்படுவதை நாம் காணுகின்றோம். அத்தகைய பெரியோர்கள் இளையோர் களிற்கு ஒரு வழிகாட்டியாக மேற்பார்வையாளராக இருப்பார்களாயின் அனைத்துச் செயல் களும் உரிய கால நேரத்தில் நிறைவாக செய்து முடிக்க முடியும். இதற்கு அவர்களின் அனுபவம் அவர்களையும் அவர்களோடு இணைந்தோரையும் நெறிப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

முதியோர்களின் உள்ளத்தில் இருக்கின்ற எண்ணங்களை, நல்ல சிந்தனைகளை, கொள்கைகளை, கோட்பாடுகளை நுகர்ந்து இன்பத்தை அனுபவிக்க வேண்டும். அவை தான் எமக்குக் கிடைத்த பெறுமதிமிக்க செல்வங்களும் சொத்துக்களும் ஆகும். நித்தம் நித்தம் மாறுகின்ற உலகில் மாறாமல் இருப்பது இறப்பு ஒன்றுதான். வந்தவர் எவரும் நிலைப்பதில்லை. நிலைத்து இருப்பது அவரவர் செய்த நல்ல செயல்களும் நல்ல வழிகாட்டலின் ஊடாக பெற்ற அறிவுமே.

சிலர் முதியோர்களை பயனற்ற பட்டமரமாகக் கருதுகிறார்கள். அவர்கள் அறி விலிகள். பட்ட மரங்கள் கூட எத்தனையோ பயன்பாட்டிற்கு உதவுகின்றது. அத்தகைய மரங்கள் எத்தனையோ வரலாற்று சிறப்பினை தன்னகத்தே கொண்டிருப்பதை நாம் சில வரலாற்று மூலங்கள் ஊடாக கண்டு கொள்கிறோம். ஆனால் முதியவர்கள் பட்ட மரமல்ல. பட்டறிவு உடையவர்கள். ஒவ்வொரு விடயத்தையும் கண்டு, கேட்டு, உய்த்து உணர்ந்து(த) அனுபவத்தினை கூறுகின்ற திறமை வாய்ந்தவர்கள். இவர்களை நாம் பட்டறிவு உடையவர்கள் என்று கூறுதல் சிறப்பாகும்.

அந்தவகையில்,

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி
நிலமே சொந்தமடா...."

என்ற நிலையில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதரும் தனக்குள்ளே இருக்கின்ற திறமையினை, ஆளுமையினை உணராது செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்களிற்கு தமக்குள்ளே இருக்கும் திறமையினை வெளிப்படுத்து வதற்குரிய களம், சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவர்களுக்கு களமோ, சந்தர்ப்பமோ, கிடைக்குமாயின் வெற்றியின் உச்சத்திற்கு சென்றுவிடுவார்கள். கீழ் நிலையிலே நிற் கின்றவர்களை இனங்காண வேண்டிய பொறுப்பும், அவர்களை நல்ல முறையில் பயன்படுத்தி அவர்களுக்குள் இருக்கும் திறமையினை வெளிக்கொணர வேண்டிய தேவையும் உள்ளது. அவர்கள் இந்த நாட்டின் சொத்தாகக் கருதி செயற்பட வேண்டியது எமது கடமையும் தர்மப் பணியுமாகும்.

முதியவர்கள் பொறுமையின் சின்னமாக விளங்குகின்றார்கள். காரணம் அவர்கள் வாழ்க்கையில் பலதரப்பட்ட படிகளையும் தடைகளையும் கஷ்ட நஷ்டங்களையும் சந்தித்த

வர்கள். சகிப்புத் தன்மை நிறையப் பெற்றவர்கள். எதையும் தாங்குகின்ற மனப்பக்குவமும் மன அடக்கமும் கொண்டவர்கள். இவர்கள் கோபுரம் போன்றவர்கள்.

"கோபுரத்தின் கலசத்தில் எச்சமிடும் காகங்கள் ஆன போதும் சாமிக்கு வந்ததில்லை கோபங்கள்..."

என்ற வரிகள் முதியோர்களின் செயலை நினைவுபடுத்துகின்றது. முதியவர் என்ற சொல்லின் முதிர்வு என்பது வயதில் முதியவர் என்பதை காட்டிலும் செயலில் செயற்பாட்டில், தேச பக்தியில், இறைபக்தியில், முதிர்ச்சி பெற்றவர்கள் முதியவர்கள்.

இன்று நாம் முதியவர்களை சரியான முறையில் பாதுகாக்கவில்லையெனின் எமது தமிழ்ப் பாரம்பரியம், இந்துக்களின் பண்பாடு, கலாச்சாரம், நாகரிகத்தின் சுவடுகளையும்; நாட்டார் பாடல்கள், கூத்துக்கள், கும்மிகள், ஒப்பாரிப் பாடல்கள் என்று தமிழ் மணம் பரப்பும் தமிழர் வரலாறு பேசும் கதைகளை எல்லாம் நாம் பாதுகாக்கத் தவறிய பாவிகளாகி விடுவோம். இன்றைய முதியவர்கள் முன்னைய காலத்து கலாச்சாரத்தினையும் கலையம்சங்களையும் "நகமும் சதையும்" போன்று முதியவர்களோடு ஒட்டியிருந்தமையைக் காணலாம். எனவே பண்பாட்டினையும் கலையம்சங்களையும் தம்மகத்தே கொண்டு செல்லும் நடமாடும் கலைக் கூடங்கள் முதியவர்கள்.

முதியோரிடத்தில் இருக்கின்ற சிறப்பு வாய்ந்த தன்மை இயற்கையோடு ஒட்டி வாழும் தன்மை கொண்டது. தாம் வாழும் சூழலை கோயிலாக மதித்து வாழும் தன்மையோடு மற்றவர்களையும் அதனோடு இணைத்து வாழவைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். இயற்கையின் சீற்றத்தினையும் அதன் மாற்றத்தினையும் மாறுதலையும் அறிந்து கொள்ளக் கூடிய தன்மையும் நிறையப் பெற்றவர்கள். அவர்கள் வாழ்ந்த கிராமத்தின் கண்கண்ட தெய்வமாக கருதப்பட வேண்டியவர்கள்.

முதியவர்களுக்கு நாடு சொத்து, எமக்கு முதியவர் சொத்து. முதியவர்களுக்கு நாட்டு மக்கள் பாதுகாவலர். எமக்கு முதியவர்களின் அனுபவங்கள் பாதுகாப்பு. முகத் தோற்றத்தினை மாற்றியமைக்க பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை உதவும். ஆனால் முதியவர்களின் அறிவினையும், ஆற்றலையும், அனுபவத்தினையும், ஆளுமையினையும் மாற்றி அமைக்க என்ன சத்திர சிகிச்சை உண்டு? எதுவுமே இல்லை. முதியவர்களுக்கு நிகர் முதியவர்கள் தான். இறைவன் கூட சுந்தரரை ஆட்கொள்ள கிழப்பிராமண வடிவத்தில் வந்தார் என்ற வரலாற்றினை அறிவோம். அத்தகைய வரலாறு கூட முதியவர்கள் இடத்தில் பழையவரலாறுகள், கதைகள், செயல்கள், செயல் திறன்கள் உள்ளது என்ற தத்துவத்தின் உண்மையை உணர்த்திக் காட்டுகின்றது.

முதியவர்களை நாம் பாதுகாக்க வேண்டிய அவசியத்தினை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆசியாவிலேயே முதியவர்கள் அதிகமுள்ள மூன்றாவது நாடு இலங்கையாகும். எனவே முதியவர்கள் நாட்டின் அபிவிருத்திப் பணிகளிற்கும் பங்களிக்கக் கூடிய வகை

யிலும், அவர்களின் உடல், உள, நலம் சார்ந்த வாழ்க்கையை நாம் பயன்படுத்த வேண்டும். அவ்வகையில் இன்று அவர்களிடம் அக்கறை கொண்டு பல முதியோர் இல்லங்கள் திறக்கப்பட்டு அவர்களை அனுசரித்து காக்கப்படுகிறது. அவர்களிற்குரிய சகல வசதிகள், வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கப்படுவதோடு, அவர்கள் விரும்பும் இடங்களுக்குக் கூட்டிச் சென்று அவர்களின் ஆசையினை நிறைவேற்றக் கூடிய அளவிற்கும் அவர்களை திருப்திப்படுத்துவதோடு அவர்களை எந்த வகையிலும் வேறுப்படுத்திப் பாராது நாம் முதியவர்களை அனுசரித்தும் அரவணைத்தும் வாழவேண்டும்.

பெற்றோர்கள் பிள்ளைகளை தூக்கிவைத்திருக்கும் போது இடுப்பு வலி எடுக்கிறது. இறக்கி விடும்போது மனசு வலி எடுக்கிறது. இவ்வாறு கண்ணுக்குள் வைத்து காக்கும் பெற்றோர்களை பிள்ளைகள் பராமரிக்காது விடுவது சரியா? அவர்களது நலன்களில் அக்கறை கொள்ளாது விடுவது சரியா? பெற்றோரை மற்றவர்கள் குறைவாக பேசுவதை நாம் பொறுத்துப் போவது சரியா? மானிட உருவம் தாங்கிய தெய்வங்களாகிய பெற்றோர்களை நாம் மதித்து வணங்காது விடுவது சரியா? என்ற பல வினாக்களுக்கு நாம் ஒவ்வொருவரும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். இத்தகைய கேள்விகளை நாம் உதாசீனம் செய்வோமேயானால் எங்கள் ஒவ்வொருவருடைய எதிர் காலத்தினை பற்றி நாம் முன்னோக்கிப் பார்க்க வேண்டும்.

"காவோலை விழ குருத்தோலை சிரிப்பது போல" இன்றைக்கு எமது பெற்றோர்களுக்கு நாளை எங்கள் பிள்ளைகள் எமக்கு செய்வார்கள் என்பதில் ஐயமில்லை. முதியோர்களை பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனை சொல், செயல் எமக்கு இருக்க வேண்டும். அத்தகைய சிந்தனைகளை இளைய தலைமுறையினர்க்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் எதிர்கால முதியவர்களை தாம் மதித்தும் அவர்களை பெருமைப்படுத்தியும் வாழ வேண்டும் என்ற நல்ல மனப்பாங்கோடு வாழ வழி காட்டவேண்டும். பிள்ளைகளின் உள்ளத்தில் முதியோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயர்வான மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும்.

முதியோரைப் போற்றும் வகையில் ஐப்பசி முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி வரை கொண்டாடப்படுகின்றது. இந்த வகையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் ஒவ்வொரு சேவைகளும், சேவைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் அமைவதோடு, மற்றவர்களும் பார்த்து இவ்வாறுதான் செயற்படவேண்டும் என்ற சிந்தனையையும் தூண்டி வருகின்றது. முதியோரைப் போற்றல், உணவு, உடை, உறையுள், அனுசரிப்பு, அன்புகாட்டல் அவர்களின் சொற்களுக்கு மதிப்பளித்தல் போன்ற செயல்களை நாமும் உணர்ந்து செயற்படுவோம். இவை எல்லாவற்றிற்கும் முதலில் நல்ல மன மாற்றம் அவசியம். அத்தகைய மாற்றந்தான் உலகில் எல்லாவகை மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமையும் என்றால் மிகையாகாது.

"முதியோரை காப்போம், முதுசம் சேர்ப்போம்"

# தினம் தினம் ஆனந்தமே....

- சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்-

ஒரு மரத்தை வளர்க்க வேண்டும் என்றால் முதலில் விதையை நட்டு, பிறகு அதை நன்றாகப் பராமரிக்க வேண்டும். இல்லையா? ஆனால், நீங்கள் ஒரு மரத்தை ஓவியமாக தீட்டுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இப்போது எப்படி வேண்டுமானாலும் அதை நீங்கள் வரையலாம்.

முதலில் கிளைகளை வரைந்து, பின்னர் மரத்தின் அடிப்பாகத்தை வரையலாம். இல்லையா? உண்மையாகவே ஒரு மரத்தை வளர்க்க வேண்டுமானால் மேலிருந்து கீழாகவா வளர்க்க முடியும்? கீழே வேரிலிருந்து மேல் நோக்கித்தானே வளர்க்க முடியும்? ஓவியத்தில் வேண்டுமானால் மேல்முனையில் இருந்து ஆரம்பிக்கலாம். நிஜ வாழ்வில் அது முடியாது.

## வாழ்க்கையில் எல்லாமே லாபம்தான்

உதாரணத்திற்கு உங்களுக்கு மாம்பழம் என்றால் மிகவும் பிடிக்கும். ஆனால் மாமரத்தை வளர்ப்பது பற்றி அக்கறை உங்களுக்குக் கொஞ்சமும் கிடையாது. இப்போது உங்கள் தோட்டத்தில் மாமரம் வளர்கிறதோ இல்லையோ, ஆனால் உங்களுக்கு மாம்பழம் முதலில் வேண்டும். இது நடக்கக் கூடிய விஷயமா?

நீங்கள் மாமரத்தை வளர்க்காமலே, சந்தைக்குச் சென்று ஒரு டஜன் மாம்பழங்கள் வாங்கி வரமுடியும். ஆனால் உங்கள் தோட்டத்தில் இருந்து அது உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றால், மாமரத்தை வளர்க்காமல் அது எப்படிக் கிடைக்கும்?

உங்கள் வாழ்வில் ஆனந்தம் நிலையாக இல்லாததற்குக் காரணம் என்னவென்று இப்போது புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

நீங்கள் ஆனந்தத்தை எதிர்முனையில் உருவாக்க முயற்சிக்கிறீர்கள். வருடத்திற்கு வருடம் உங்கள் தலை மீது மாம்பழங்கள் பழுத்துக் கொட்ட வேண்டும் என்றால் கீழே இருந்துதான் வளர்க்கத் தொடங்க வேண்டும். மேல் முனையில் இருந்து இதைத் தொடங்க முடியாது.

ஆனந்தமும் இது போலத்தான். அது உங்களுக்குள்ளே இருந்து பூக்கிறது. ஆனால் அதை மறுமுனையில் அதாவது, வெளியே தேடிக்கொண்டு இருக்கிறீர்கள். இது மேல் முனையில் இருந்து மரம் வளர்ப்பது போல சாத்தியமற்ற ஒன்று.

நீங்கள் உங்கள் வாழ்க்கையையே ஆனந்தமாக வாழ விரும்புகிறீர்கள். அப்படி யென்றால், ஆனந்தத்தைப் பற்றி நீங்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். மேல் முனை யில் இருந்து மரத்தைவளர்ப்பது எப்படி சாத்தியமற்றதோ, அப்படியேதான் ஆனந்தத்தை

வெளியில் இருந்து பெறுவதும். அப்படியே ஆனந்தத்தை வெளியில் இருந்து எப்போதாவது பெற்றாலும், அது நிலைக்காது.

நீங்கள் தேடுவதோ நிலையான ஆனந்தத்தை. ஆனால் அதை எதிர் முனையில் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்.

இங்கு எல்லாமே லாபம்தான்....

"கடுமையாக உழைத்து நிறைய பணம் சம்பாதித்தபிறகு எந்தக் கவலையுமின்றி வாழ்வேன்; காலையில் எழுந்து அலுவலகம் செல்லத் தேவையில்லை; கடற்கரையில் ஆனந்த மாக படுத்துக் கிடப்பேன்; மலையேறுவேன்" என்றெல்லாம் நீங்கள் நினைத்துக் கொண்டிருக் கிறீர்கள்.

திடீரென்று உங்கள் வியாபாரம் நொடித்துப்போய் விட்டது என்று வைத்துக் கொள்வோம். உங்களுக்கென்று ஒன்றுமே இல்லை... இருந்தது எல்லாமே போய்விட்டது.... இப்போதும் நீங்கள் நினைத்தபடி காட்டில் நடக்கலாம்; கடற்கரையில் உறங்கலாம்; நீங்கள் நினைத்ததை எல்லாம் செய்யலாம்.



ஆனால் இப்போது நீங்கள் நினைத்ததை எல்லாம் செய்வீர்களா என்ன? கவலையில் மூழ்கிப்போவீர்கள் தானே!

ஏனென்றால், எது நடந்தாலுமே அதை பாதகமாகத்தான் நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். உங்களுக்குச் சாதகமாக எதையும் பயன்படுத்த மறுக்கிறீர்கள்.

இந்த உலகத்திற்கு நீங்கள் வந்தபோது எந்த முதலீடும் இல்லாமல்த்தானே வந்தீர்கள்? ஏதாவது கொண்டு வந்தீர்களா, என்ன?

ஆக, உங்கள் வாழ்வில் எது நடந்தாலுமே, நீங்கள் நஷ்டம் அடைய வாய்ப்பே இல்லை. எப்படிப் பார்த்தாலும் உங்களுக்கு லாபம்தான் இல்லையா?

இந்த வாழ்க்கை என்பதே அப்படித்தான் உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் நஷ்ட மடைய வாய்ப்பே இல்லை. வாழ்க்கை எப்படி நடந்தாலும். உங்களுக்கு லாபம்தான். நஷ்டம் கிடையாது. ஆனால் எந்நேரமும் அழுது கொண்டே இருக்கிறீர்கள்.

உங்களுக்குத் திருமணம் ஆகவில்லை என்றால், "என் வாழ்வில் திருமணமே நடக்காதா?" என்று அழுகிறீர்கள். திருமணம் செய்து கொண்டவர்கள் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

எப்போதுமே நீங்கள் தவறான பெண்ணையோ அல்லது தவறான ஆணையோதான் திருமணம் செய்கிறீர்கள். ஏனென்றால் இந்த உலகத்தில் சரியான ஆண் அல்லது சரியான பெண் என்று யாருமே கிடையாது. திருமணத்திற்குப் பிறகு ஏதோ ஒன்று நடந்து நீங்கள் இருவரும் பிரிந்துவிட்டால், பின் "என் திருமணம் முறிந்து விட்டதே..." என்று அழுகிறீர்கள்.

ஆக, எல்லாவற்றிற்குமே நீங்கள் அழக்கற்றுக்கொண்டு விட்டீர்கள். சூரியன் மேலே வந்தால், வெயில் கொளுத்துகிறது என்று அழுகிறீர்கள். சூரியன் மறைந்துவிட்டால் மிகவும் இருட்டாக இருக்கிறதே என்று பயந்து அழுகிறீர்கள்.

குளிர் காலத்தில் மிகவும் குளிர்கிறது. அதனால் அழுகை; வெயில் காலத்தில் வெப்பம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அதற்கும் அழுகை; நான் என்ன நினைக்கிறேன் என்றால், இப்படியே நீங்கள் போய்க்கொண்டிருந்தால் உங்களுக்கு ஏற்ற இடம் உங்கள் கல்லறையாகத்தான் இருக்கும்.

"வாழ்வு" உங்களுக்கு சரிப்பட்டு வராது, ஏனென்றால் நீங்கள் வாழ்வின் இயல்புக்கு எதிராக உள்ளீர்கள். வாழ்வின் அம்சங்களான பிறப்பு, இறப்பு மற்றும் பல எதார்த்தமான நிகழ்வுகளை தவிர்க்கும் மனோபாவம் உங்களிடம் வளர்ந்துவிட்டது. இந்த மனநிலை மாறவேண்டும். அப்போதுதான் ஆனந்தமான வாழ்வைப் பெற முடியும்.

**(ஆனந்தம் இன்னும் வரும்)**

# தேவாரம் பெயர் விளக்கம்

**சிவபெருமானை வேண்டி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாடல்களின் தொகுப்பு 'தேவாரம்' எனப்படுகிறது. 'தேவன்' 'ஆரம்' என்னும் வார்த்தைகளின் தொகுப்பே தேவாரம் ஆகும். 'தேவனாகிய இறைவனுக்கு மாலை போல சூட்டப்பட்ட பாடல்' என்பது இதன் பொருளாகும். தேவாரம் பாடிய மூவரும் சிவபெருமான் அருள்புரியும் திருத்தலங்களுக்குச் சென்று இப்பாடல்களைப் பாடினர். இவர்கள் சென்ற தலங்கள் மட்டுமின்றி, அங்கிருந்தே வேறு தலங்களில் அருள்புரியும் சிவனைப்பற்றியும் பாடியுள்ளனர். இவ்வாறு பாடப்பெற்ற தலங்கள், 'தேவார வைப்புத்தலங்கள்' எனப்படும். 276 (முன்பு 274 மட்டுமே இருந்தது. சமீபத்தில் இரண்டு தலங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன) தேவாரப்பாடல் பெற்ற தலங்களும், 255 தேவார வைப்புத்தலங்களும் உள்ளன.**

உ

சைவ சமயத்தவர்களின் இறைவழிபாட்டிலும் பல்வேறு சிறப்பு விழாக்களிலும் தனித்துவமான இடத்தைப் பெறும் மங்களப் பொருள்களுடன் சந்தனமும் முதன்மை யானதொன்றாகும்.

மருத்துவ, விஞ்ஞான ரீதியான சுகவாழ்வினை அன்றாட வாழ்வியலுடன் இணைந்த தாகச் சைவ சமய சடங்குகள், வழிபாடுகள், மற்றும் நிகழ்வுகள் பின்னிப் பிணைந்திருப் பதைச் சமயச் சான்றோர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

சைவ சமயத்தவர்களுடைய வழிபாடுகளில் முக்கிய இடம்பெறும் விபூதி, சந்த னம், மஞ்சள், பால், குங்குமம், சாணம், அறுகம்புல் மற்றும் பத்திரப் புட்பங்கள்

# மங்களமும், நறுமணமும், நோய் தீர்க்கும் மருத்துவ மகிமையும் மிக்க சந்தனம்

- நீர்வைமணி அவர்கள் -

பலவும் மருத்துவக் குணங்கள் மிக்கதாக வும், கிருமிநாசினிகளாகவும், விஞ்ஞான ரீதியாகவே ஏற்றுக்கொள்ளப்படும் சிறப்புடை யனவாகவும் உள்ளன.

இந்த விதத்திலே சந்தனம் குளிர்மையானதாகவும், கிருமிநாசினியாகவும், மங் களப் பொருளாகவும், அழகுக் கலைக்குரியதாகவும், நல்ல மருத்துவக் குணங்கள் மிக்க தாகவும் விளங்குகின்றது. சுத்தமான நல்ல சந்தன மரத்தினதும், சந்தனத்தினதும் நறுமணமே மனமகிழ்வையும் உள்ளத்திற்கும், உடலுக்கும் ஆரோக்கியம் தருவதாகவும் இருப்பதை நாம் அனுபவபூர்வமாக அறியலாம்.

நல்ல வாசனைமிக்க உயர்ந்த சந்தன மரங்களைக் கொண்டு செய்யப்படும் சிற் பங்களும், கைவேலைப் பொருட்களும் மிகவும் பெறுமதி வாய்ந்தனவாகவும், வாழ்விடங் களிலும், வழிபாட்டுத் தலங்களிலும் தனிச் சிறப்புடன் பேணிப் பாதுகாத்துப் போற்றப்படு வனவாகவும் உள்ளன.

இதிற் செஞ்சந்தனம் எனப்படுவது மிகவும் அருமையான மூலிகையாகவும், யாகங் களிலும் ஓமவழிபாடுகளிலும் சிறப்புடன் சேர்த்துக்கொள்ளப்படுவதாகவும் உள்ளது. செஞ்சந்தனக் குழம்பு காமாலை, கண்நோய், கூவக்கட்டுப் போன்றவற்றுக்குத் தேடிப் பூசப்படுவதும், உடம்பின் சூட்டைத் தணித்துக் குளிர்மையைத் தருவதாகவும் சிறந்த மருந்துவக் குணமுடையதாகவும் உள்ளது.

சந்தனத்தின் மகிமையை மக்களுக்கு உணர்த்தவே இல்லங்களிலும், விழாக்களிலும், ஆலயங்களிலும் சந்தனத் திலகமிட்டு எல்லோரையும், எம் மக்கள் மனம் மகிழவைக்கின்றார்கள்.

சந்தன மரமானது தான் வாசனை மிக்கதாயிருப்பதுடன், பக்கத்திலுள்ளவற்றின் மணத்தையும் தன்மணத்தினால் மறைத்துவிடுகின்றது. சந்தனப் பொட்டிட்டு சபையில் ஒருவர் இருக்கும் போதே பார்ப்பவர்கட்கு முகத்திற் தனிமையானதொரு மலர்ச்சியும், கவர்ச்சியும் இருப்பதனை நாம் காணலாம்.

இவ்விதம் மங்களமும், நறுமணமும், நோய் தீர்க்கும் மருத்துவ மகிமையும் மிக்க சந்தனத்தைப் பற்றிச்

"சந்தனமும், ஜவ்வாதும் சேர்ந்து நறுமணம் கமழ" எனவும்

"சந்தனப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே, குத்துவிளக்கு ஏற்றி வைத்து" எனவும் வரும் பாடல் வரிகளும் சந்தனத்தின் சிறப்பை எமக்கு நன்கு உணர்த்தி நிற்கின்றன.

# செல்வச் சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை (7)

சிவகுரு வினாணை யோடு விரையுவ லிவீர வாகு
திகழுபெ ருமாறு பாயும் - கல்லோடை
சிரமப ரிகார மாக செழுமைமி குமுரை நாடி
திருபெரு குபாதஞ் சூடு - பதிமேவி
புவனமு முதாமு வோனின் புகலசு ரதாது கூறி
புரபதி யையேக மீள - வருங்காலை
புகழுவ டிவேலன் பூசை புரியவு ரைமாலை யாக
புதியபெ ருவேலை நாட்டித் - தொழவேதான
தவமுனி வரோடு பாதந் தனிலுரு குயோகி மாரும்
சரணப யமாகி நாளுந் - தவஞ்செய்ய
செழுமையு ளதான பாத திருவரு ளைவாரி வாரி
சிவகதி யதேகு மாறு - அருள்வோனே
கவலைப லவாகி வேறு கதியது இலாத சேயுன்
கருணைபெ றுமாறு நீயும் - அருளாயோ?
கருவறை புகாத வாழ்வும் கனதன முமீய வேசந்
நிதியத னில்வேல தாகு - முருகோனே!



- இராசையா குகதாசன்,
நாயன்மார்க்கட்டு.

உ

# 2010 ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| R. மணிவாசகன் | அவுஸ்திரேலியா | 15,000.00 |
| திரு. வடிவேற்கரசன் மூலம் A.V. முருகையா | அவுஸ்திரேலியா | 20,000.00 |
| க. சிவக்கொழுந்து மூலம் Dr. T. சிறிஸ்கந்தராஜா | லண்டன் | 10,000.00 |
| N. தனசிங்கநாதன் | கொழும்பு | 36,750.00 |
| V. நந்தகுமார் | ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ், நவாலி வடக்கு | 5,000.00 |
| முத்துத்தம்பி மகேந்திரன் ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் | மருந்து வகையில் | 10,000.00 |
| A. சுந்தரலிங்கம் (அஞ்சலகம்) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| E. சிவராஜா வங்கி ஊழியர் | கொழும்பு | 10,000.00 |
| ஆ. சித்தி விநாயகலிங்கம் | அவுஸ்திரேலியா | 1,000.00 |
| S. முத்துகிருஸ்ணன் | கொழும்பு | 2,000.00 |
| வ. தங்கவடிவேல் | றம்பைக்குளம், வவுனியா | 3,000.00 |
| பாலராணி செல்வேந்திரம் | அமெரிக்கா | 3,000.00 |
| K.V. துரைசாமி நினைவு | மயிலிட்டி | 1,000.00 |
| ச. நடராசா | குப்பிளான் | 1,000.00 |
| து. கஜானன் | உசன், மிருசுவில் | 400.00 |
| ப. சிவக்குமார் | உடுப்பிட்டி | 1,001.00 |
| மா. கருணாநிதி | நடராசாபுடவையகம் அச்சுவேலி | 1,000.00 |
| கந்தையா திலகவதி | அவுஸ்திரேலியா | 5,000.00 |
| நவபாலன் ராஜ்குகன் | வல்வெட்டித்துறை | 1,600.00 |
| திருமதி V. ரகுநாதன் | கண்டி | 1,000.00 |
| மதிமேகராசா நிஷாந்தினி | குப்பிளான் | 10,000.00 |
| M. ஸ்ரீஸ்கந்தராசா | சிறுப்பிட்டி | 500.00 |
| அருணாசலம் அம்மாப்பிள்ளை | நீர்வேலி | 1,000.00 |
| சோ. பரமநாதன் | குப்பிளான் | 500.00 |
| திருமதி சிவநாயகி கந்தசாமி | | 1,000.00 |
| செல்வி கௌசிகா சந்திரசேகரம் | கோண்டாவில் | 3,000.00 |
| மு. சுஸ்ருதன் (தொ.தொடர்பு) | யாழ்ப்பாணம் | 2,000.00 |
| S.R. சரவணபவன் | பிள்ளையார் கோவிலடி, தாவடி | 500.00 |
| க. சிவபாதசுந்தரம் | அல்வாய் | 1,000.00 |
| கமலாதேவி சௌந்தரராஜன் | அல்வாய் | 1,500.00 |
| தவக்குமார் சிவசோதி | உரும்பராய் | 1,000.00 |

| | | |
|---|---|---|
| பிரணவன் ஆனந்த சுந்தரம் | லண்டன் | 1,500.00 |
| மா. நடராசா | கரந்தன் வீதி, நீர்வேலி | 5,000.00 |
| சி. சிறிஸ்கந்தராசா (நவிண்டில்) | கொழும்பு | 5,000.00 |
| சுசிலா நகை மாடம் | பருத்தித்துறை 1மூ. சம்பா, | 5,000.00 |
| தம்பிராசா சற்குணராசா | நுணாவில், சாவகச்சேரி | 5,000.00 |
| தம்பிஜயா பிரபாகரன் | பத்தமேனி, அச்சுவேலி | 5,000.00 |
| சுபாஜினி மகானுஜன் | (கனடா) வரணி | 30,000.00 |
| Dr. K. சிவஞானசூரியர் | கொழும்பு | 1,500.00 |
| A. பிரதாபன் | உடுவில் | 500.00 |
| அ. கமலநாதன் | நற்பிட்டிமுனை, கல்முனை | 1,000.00 |
| தங்கவேல் சுதாகரன் | இமையாணன், உடுப்பிட்டி | 1,000.00 |
| கந்தையா பகீரதன் | கந்தசாமி கோவிலடி, இணுவில் | 2,000.00 |
| மா.ந. பரமேஸ்வரன் | இணுவில் | 1,000.00 |
| சேனாதிராசா சண்முகராசா | வருணன், அச்சுவேலி | 20,000.00 |
| இ. இரத்தினேஸ்வரன் குடும்பம் | லண்டன் | 3,000.00 |
| செ. ஆனந்தராஜன் குடும்பம் | கொழும்பு | 3,000.00 |
| நமசிவாயம்பிள்ளை சிவனருட்காந்தி | மானாங்கானை வல்வெட்டிதுறை | 3,000.00 |
| அ. பரமநாதன் | மயிலணி, சுண்ணாகம் | 500.00 |
| சின்னத்துரை சோதிமுத்து | மகாத்மா வீதி, நெல்லியடி | 1,000.00 |
| திருமதி S. கமலராணி நினைவாக | மேகநாதன் குடும்பம் நோர்வே | 10,000.00 |
| க. சிவக்கொழுந்து குடும்பம் | தேவகோட்டம், உடுப்பிட்டி | 10,000.00 |
| மகாலிங்கம் | வத்தளை, கொழும்பு | 5,000.00 |
| P. மாணிக்கவாசகர் | நியூசிலாந்து | 5,000.00 |
| S.P. அபரிணா | ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு | 5,000.00 |
| பாலகிருஸ்ணன் இந்திராதேவி | தாவடி | 4,000.00 |
| திருமதி புவனா இரத்தினசோதி | கதிரவேற்பிள்ளை வீதி, புலோலி | 5,000.00 |
| க. கந்தையா | கனடா | 5,000.00 |
| சி. சிறீ ஆனந்தராசா | அவுஸ்திரேலியா (நவிண்டில்) | 5,000.00 |
| உதயலிங்கம் யோகாம்பிகை | மூளாய் | 3,000.00 |
| க. பத்மசாமி | புலோலி | 1,000.00 |
| ஸ்ரீபவன் துஷ்யந்தி | கனடா | 15,000.00 |
| வேந்தன் குடும்பம் | கரவெட்டி வடக்கு | 10,000.00 |
| காசி கார்த்திகேசன் | ஏழாலை மேற்கு | 5,000.00 |
| கனகரெத்தினம் சதீஸ்குமார் | தாவடி வடக்கு | 2,000.00 |
| உதயராசா தாரணி | கோண்டாவில் வடக்கு | 10,000.00 |
| சு. சிவகுமாரன் | புலோலி மேற்கு | 4,000.00 |

# சொந்த மொழியும் உ

- பேரறிஞர் முருகவேபரமநாதன் (ஆல்கடலான்) அவர்கள் -

தமிழைப் பற்றிப் பலரும் பிரம்மாதமாகப் பேசுகின்றனர். எழுதுகின்றனர். ஆனால் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர், இளைஞரும், முதிஞரும், பெண்களும் ஆண்களுமாக எத்தனை விழுக்காடு வாய் மொழியாய்ப் பேணுகின்றனர். தாய்மொழி வாய்மொழியாகும் அந்தஸ்தையே இழந்து வருகிறது. பேசுவோர் பாவிப்போர் அருக அருக மொழிவீழ்ச்சி தானாகவே இயற்கையாய் வளம் குன்றும் இதைக்கட்டியெழுப்ப எந்த முனைவராலும் முடியாது. எழுத்தை இழந்த மொழிகளும், பேச்சை இழந்த மொழிகளும், சுலோகங்கள் கிரியைகளோடு மட்டும் தொடர்பாடும் மொழியும், இன்று சகசம், இக்கண் ணோட்டத்தில் தமிழின் இன்றைய நிலைப்பாடு என்ன. பேசாமொழியாய்ப் போவதைக் கனடா வில், அமெரிக்காவில், இங்கிலாந்தில் அவுஸ்திரேலியாவில் அமைவது, இன்றைய நிலைப் பாடு. தமிழ் பேசுவது, தமிழிற் கதைப்பது அநாகரிகம். நாகரிகமில்லையென்ற மனப்பாங் குடைய தமிழர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இவர்களும் ஒருவித நனிநாகரிகர். தொன்மை மிகு இம்மொழியில் நிறையக் கருவூலங்கள் உண்டு. இதைப்படிக்க, படிக்க வைக்க வழி தேவை. மனிதம், விழுமியம், மனிதாயநலம் சொல்லும் இவைகளைக் கற்றோர் புனிதமான வாழ்வு காண்பர். பாபாவின் வார்த்தையில் சொன்னால் தாய்மொழியைப் பேணுவோம். தாய்ச்சமயத்தைவிட்டு மதம் மாறோம் இப்படியான வடஇந்திய மகான்கள் வழி செல்வோர் பேசுவதே, பெருமைப்படுவதே ஆங்கிலம் தான். அடியேன் கண்டிமா நகரில் வாழும்போது பிரம்மகுமாரி சமாசம் சென்றேன். அவர்களின் ஊடகம் ஆங்கிலமாயே அமைந்தது. ஏன் மரணவீட்டிற் பஜனை பண்ணுவோர் தமிழிற்பாடுவதில்லை. தாயை யாரேனும் வெறுப்பாரோ தாயைப் போலத்தான் தாய்த் தமி ழும், சங்கீதம், நாட்டியமெல்லாமே ஆங்கிலத்தில் ஈயடிச்சான் கொப்பியாக அமையும்.

மேடையில் முழங்கும் அளவுக்குச் சாதனை இல்லை. பாரதி சொன்னாரே வாய்ச் சொல்லில் வீரரடி என்று இதற்கு இலக்கியமாகத் திகழும் தமிழினம் வாளாகளித் திருத்தல் நன்றோ? ஐரோப்பிய நாடுகளில் வெவ்வேறு மொழி பேசும் ஒரு தமிழினம் உருவாகுவதைத் தவிர்க்கமுடியாது. போற தெரிகிறது. வெள்ளம் வருமுன் அணைகட்டு வதே புத்திசீவித்தனம் வருமுன்னர் காப்பது முதன்மையானது. வந்தபின் காக்கமுடியாது. இதை முன்னித்தான் வள்ளுவர் இப்படி எழுதினார் ஓர் பாட்டு

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்*

*வைத்தூறு - வைக்கோல்* *(குறள் 435)*

- புலன்களை அடக்கி ஆள்வதே நன்று -

பல்மொழி விற்பனராய்ப் பல தமிழர்கள் வாழ்கின்றனர். பிறமொழியாளர் பலர் தமிழைக் கற்றுப் புலமையுள்ளவர்களாகத் திகழ்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் நாம் ஒரு மொழியையே இழந்து விடுகிறோம். தமிழையும், ஒரு மொழியாக வைத்திருக்கும் சந்தர்ப்பத்தை நாமாகவே இழக்கிறோம். இது நமக்கெல்லாம் பேரிழப்பாகும். நமக்கு நாமே சிவப்பு விளக்குப் போடுவதா?

சாதாரணமாக இருமலையாளிகள் சந்தித்தாற் தம் தாய் மொழியில் (மலையாளம்) பேசுவர். இரு கன்னடக்காரர், இரு தெலுங்குக்காரர், இந்திக்காரர், இரு சீனர், இரு மத்திய கிழக்காசியக்காரர், சந்தித்தால் அவர்களின் மொழியூடகம் தாய்மொழி தான். அவ்வளவு மொழியபிமானம் அவர்களுக்கு எந்த இஸ்லாமியரும் தம் வேதப்புத்தகங்களைப் படிப் பதற்காக அராப் மொழியைக் கற்று உயர்கிறார்கள். நம் இலங்கை வாழ் முஸ்லிம் சகோதரர்கள் தமிழைப் பேணிக் கொண்டே வாழ்கிறார்கள். இது நமக்கு முன் மாதிரியாய் இல்லையா? எனவே தமிழ் தெரிந்த நாம் தெரியாதவர்கள் போல வாழ்தல் எமது பெலவீனத்தையே காட்டுகிறது. சுயமரியாதையை நாம் பேண வேண்டும். நாம் தமிழர். எம் தாய் மொழியென்ற உணர்வு வேட்கை ஓட்டு மொத்தமாகத் தேவை. எம் விலாசங் களை நாமே இழப்பதா. அடுத்த இளம் பரம்பரையினருக்கு அவர்களின் முன்னோர் பெயர், இனம் கட்டுக் கோப்புத் தெரியவேண்டும். கலைகளைப் பயில்வதில் ஆர்வம் தேவை. அதேவேளை தமிழ் மொழியிலும் ஆர்வந்தேவை. இதைப் பிறர் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை.

எண்சோதிடம் ஊடுருவித் தமிழ்ப் பெயர்களையே இழக்கிறது. அசல் தமிழினம். தமிழ் மொழி மரபில் வந்த குழந்தைகளின் பெயர்களைத் கொண்டு இவர்கள் என்ன இனமெனக் கண்டு கொள்ளமுடியவில்லை. அன்னை தெரேசா, விஜயலட்சுமி பண்டிட், சறோஜினி தேவி போன்றோரின் பெயர் எண் சோதிட அடிப்படையிலா வைக்கப்பட்டன. நம் மண்ணில் பிரபல்யமான கல்விமான்களான எவியேசர், மயில்வாகனம், லிங்கம் சகோதரர்கள் உயர்வுக்கு எண் சோதிடமா கை கொடுத்தது. எண் சோதிடப் படி பெயர் வைத்து பெரியவர்கள் அவமிருத்தாய் இறக்கவில்லையா, மரணத்தை வெல்லுமளவுக்கு எண் சோதிடம் பாதுகாப்பளிக்குமா? வெறும் மூடக் கொள்கையின் பிறப்பிடமே இது. இந்த நோய் வீடு வேண்டும் போதும், வாகனம் வேண்டும் போதும் தொற்றிக் கொண்டது. நமது பெலவீனத்தை வீட்டுத்தரகர்களும் அறிந்து கொண்டனர். இந்தக் கேலிக்கூத்தினின் றும் நம் தமிழினம் விடுதலை பெறுவது என்றோ? இப்போ சிவன், முருகன், திருமால் பெயர்களை எண் சோதிடத்திற் போட்டு மண்டையைக் குழப்புமளவுக்கு நம்மவர் மாறிவிட்டனர். பிள்ளைகளின் பெயர்கள் முன்னுக்கும் பின்னுக்கும் தலைவால் இல்லாமல் அமையக் காணலாம். நல்ல தமிழ்ப் பெயர் வைத்தால் நையாண்டி பண்ணி மாற்றிவிடு கின்றனர். (உ-ம்) ஒருவர் அங்கவை சங்கவை எனத்தன் பிள்ளைகளுக்கு வைத்தார். அவரது நண்பர்கள் அங்கைவை, இங்கைவை உங்கைவையென ஏழனம் செய்து மாற்றுவித்துப் போட்டார்கள். ப், க், ச், த், முன்வரப் பெயர் வைப்பர், ப்ரியா, ப்ரபு, க்குபா, ப்ரசாந்தி, த்லகா, எப்படிக் கூப்பிடுவது. இப்ரியா, இப்ரபா என அழைப்பதா?

பெயரின் இறுதியில் ந், த் வரும் (உ-ம்) பிரசாந்த், ஆனந்த் விவேக், பிரேம்சந்த், பிரசாத் தமிழினத்தவர்களின் எதிர்காலப் பெயர்கள் எப்படியெல்லாம் மாறுமோ?

இப்போ இன்னொரு புது மோஸ்தரிலே ஆங்கிலம் புகுந்திருக்கிறது. இறந்து போனவர்கட்கு நினைவுமலர் அடிப்பர். பல பிரமுகர்களதிலே தம் கருத்தைப் பொன்முலாமிற் பதிப்பர். ஆனாற் திருமுறைப் பாடல்களை அப்படியே ஆங்கிலத்தில் உருவாக்கி அச்சடிப்பர். அதன் பொருள். வரு உணர்வு எல்லாமங்கே செத்துப்போம். உதாரணமாகத் திருவாசகத்தில் வரும் சிவபுராண முதல் வரி இப்படி இருக்கிறது.

நமச்சிவாய வா அழ்க. இதை எப்படி ஓசைகுன்றாமல் ஆங்கிலத்தில் எழுதுவது. இதுவுமோர் கௌரவப் பிரச்சினைதான். சினிமாப் பாடல்களை ஆங்கிலத்திலே எழுதி முழங்குவர். ஆனால் உணர்வுகள், பாவங்கள், வெளிப்பாடுகள் தமிழோசையாய் இருக்காது. வந்த மொழியின் ஓசையாகவே இருக்கும். நகை, அழுகை, இழிவரல் மருட்கையென்ற நவரசங்கள் கூடு போய்விடும். பாரதி, பாரதிதாசன் போன்றோர் தமிழ் தமிழெனப் பாடினாலும் தமிழினம் அதைச் செவி மடுக்கத் தயாரில்லை. சிந்திப்போம் செயற்படுவோம். அடுத்த பரம்பரை என்னாகும்? இதற்கு விடை காணுவோம்.

*சோதிடந்தனை இகழ்*
*வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ*
*வீட்டுவார்த்தை கற்கிலாய் போபோ*

பாரதி

எம் இல்லக் கதவுகளையும், சாளரங்களையும் திறந்து புதிய புனித காற்றுவர ஆவன செய்து ஆரோக்கியமாய் இருப்பது போல, எம் மனக்கதவுகளைத் திறந்து தமிழைச் சுவாமிப்போம்.

---

## கேள்வி பதில்

**திருநீறு, திருமண் ஆகியவற்றை மூன்று கோடுகளாகத் தரிக்கிறோம். இதற்கு ஏதேனும் அர்த்தம் உண்டா?**

இந்து மதத்தைப் பொறுத்தவரை ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் நம்மை அலைக்கழிப்பவை. ஆணவம் என்பது தலைக்கனம். கன்மம் என்பது நமது வினைப்பயன். (கர்மம் என்கிறோமே... அது) மாயை என்பது நிலையில்லாத நிலை. இந்த மூன்றையும் நாம் வெல்ல வேண்டும் என்கிறது சைவசித்தாந்தம். இந்தக் குறைகள் ஆன்மாவின் மும்மலங்கள். அவை எரிக்கப்படவேண்டும். அதை அடையாளம் காட்ட "ஆ"வின் சாணத்தை எரித்து மூன்று கோடுகளாக திருநீறாக நெற்றியில் அணிகிறார்கள். திருமண் என்பது திருமாலின் திருவடியைக் குறிக்கும் கோடுகள்.






இளைப்பாறிய ஆசிரியர் ஐ. சண்முகலிங்கம் (குப்பிளான் சண்முகம்) அவர்கட்கு பேரவைத் தலைவர் திரு. க. சிவக்கொழுந்து அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு



அதிபர் ந. பரமேஸ்வரன் அவர்கட்கு பேரவை உறுப்பினர் A. அரசபிள்ளை அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தி அவர்கட்கு கலாபூஷணம் இசைமணி வ. செல்லத்துரை அவர்கள் நினைவுக் கேடயம்வழங்கும் நிகழ்வில் பேரவை உறுப்பினர் கு. அருணகிரிநாதனும் காணப்படுகின்றார்.



வில்லிசைக் கலைஞர் க. சத்தியதாஸ் அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் இளைப்பாறிய அதிபர் க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் காட்சி.



நிகழ்வில் கலந்து கொண்ட இளம் சொற்பொழிவாளர் பொன் சுகந்தனைப் பாராட்டி ஆச்சிரமத்தோடு நீண்ட காலத் தொடர்புள்ள V. அரியராசா அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு



தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் இரா. ஸ்ரீநடராஜா அவர்களைப் பாராட்டி ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் திரு. செல்வமாணிக்கம் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு.



இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கட்கு புத்தூர் சோமாஸ்கந்தா ஆசிரியை திருமதி. கௌரி சுரேசன் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணக் பட்டப்படிப்புக் கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றுவதோடு தொடர் சொற்பொழிவாற்றுபவராகிய திரு. அ. குமாரவேல் அவர்கட்கு ஆச்சிரம சுவாமி பொன்னாடை போர்த்தும் நிகழ்வு. நீர்வை மணி கு.தியாகராசசர்மா அவர்கள் அருகில் நிற்பதைக் காணலாம்.

வாரியார் பக்கம் :



# "அந்தி பகல்"

- வாரியார் சுவாமிகள் -

*அந்தி பகல் என்றிரண்டையு மொழித்து:*

அந்தி - மறப்பு, பகல் - நினைப்பு நினைப்பும் மறப்பும் அற்றார்க்கே இறைவனது தரிசனம் உண்டாகும். அருணகிரிநாதர் பலவிடங்களில் கூறியுள்ளார்.

**"அந்திபகலற்ற நினைவு அருள்வாயே"** - (ஐங்கரனை) திருப்புகழ்

**"இதமகிதம் விட்டுருகி இரவுபகலற்ற விடம்**
**எனதென விருக்கைபுரி யோகப் புராதனனும்"**

- திருவகுப்பு(12)

**"பரமானந்தத்தே தேங்கார் நினைப்பு மறப்பு மறார்"**

- அலங்காரம் (55)

**"இரவு பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே"**

- அலங்காரம் (74)

**"கருதா மறவா நெறிகாண எனக்**
**கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்** - அநுபூதி (21)

*பிற ஆன்றோர்கள் வாக்குகளையும் நோக்குக:*

**"நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சம்**
**வினைப்பற் றறுக்கும் விமல னிருக்கும்"** - திருமந்திரம்

**"இரவுபக லில்லா இன்ப வெளியூடே**
**விரவி விரவிநின் றுந்தீபற"** - திருவுந்தியார்

**"கங்குல்பக லறநின்ற எல்லையுள தெது"** - தாயுமானவர்

***இந்திரிய சஞ்சலங்களையறுத்து:***

நினைப்பும் மறப்பும் அற்றவர்க்குப் பொறிபுலன்களாலுண்டாகும் துன்பங்கள் தானே நீங்கும். தூங்கியோன் கைப்பொருள் தானே வீழ்வதுபோல் என்றுணர்க.

**"இந்த்ரிய தாப சபலமற வந்து நின்கழல் பெறுவேனோ"**

- (ஓலமறைகள்) திருப்புகழ்

***அம்புயப் பதங்களின் பெருமையைக் கவிபாடி:***

இறைவனுடைய திருவடிக் கமலங்களின் பெருமையை அமைத்துக் கவிபாடுதல் நினைப்பும் மறப்பும் நீங்குதற்குச் சாதனமாம். அத்திருவடியின் பெருமையை அருணகிரியார் பின்வருமாறு கூறியுள்ளார்.

"ஆல முண்டகோன் அகண்ட லோக முண்ட மால் விரிஞ்சன்
ஆரணங்கள் ஆகமங்கள் புகழ்தான் (தோலெலும்பு - திருப்புகழ்)
"வீடுஞ் சுரர் மாமுடி வேதமும் வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே" - அநுபூதி (44)
"வேதாமுதல் விண்ணவர் சூடு மலர்ப்பாதா" - அநுபூதி (36)

# ஆற்றிடை யாடும் அருள்தரும் வேலவன்

*01. சலத்திடைத் தவழ்ந்திழைத்து ழைக்கும் சார்புறு நெஞ்சங்கள்*
*புலத்துறு மீனும் பாடும் சுழிக்கு மோர் அலைகள் நெஞ்சிற் சாடிச்சார*
*கலக்குமோர் கடற்காற்றுக்கஞ்சா நன் நெஞ்சங்கள் களிகூர்ந்து*
*துலக்கவே வேலன் நாமம் புகட்டியே மேலை யாழிக்கரை யறிந்திடுவார்!*

*02. கலங்கார் காட்டாற்று வழிதனக்கு மடங்கார் கந்தனருளால்*
*அலங்கார ஞான போதப் பொருளைக் கரங்குவித் தோதுவார் மோனப் பொருளான*
*பாலானந்த ஆற்றினிடை முருக நாமமேத்து வார் ஞானச்சுடரறிந்தவரே*
*காலானைக் கழல் பற்றிக் கொண்ட மாத வப்பெருங்கடல் மருண்டனரே!*

*03. வேலவனை வேண்டுவார் வேந்தர் தமக்கஞ்சார் காலன் கணக்கிற் சேரார்*
*கண்ட துட்டநோயணுகார் கலங்குமிடர் நரகக்குழி புகார்*
*கருவிழி பிதுங்கக் கடுக்கும் பாசாங்குச மிறுக்கு மிடர்க்கஞ்சார்*
*வேதனை துவண்டு மானப் போகவிப்பிற விசோரத் திருக்கைவேலை யோதுவார்*

*04. ஆனது அலங்கல்மேலாம் அவலக்கடல் நீக்கவேண்டி தானது வந்த தெய்வமென்பர்*
*ஈசனுக்குவந்த யோக ஓமெனும் மந்திரத்தையோதியே மெஞ்ஞானபுடம் கூடுவர் பாடுவர்*
*ஓங்கரி முகன் தம்பியே மண்கமழுந்திகொள் திருமால் மருகோனே*
*ஏழுகடலெற்றி வளைத்திடும் தொண்டைமானாற்றிப் பள்ளி கொள் வேலவனே*

*05. பதிதனை யுலகோர்க்கெங்கு மருள் கொடுத்தாண்டுகொண்ட மெய்யனே!*
*கதியொன்றும் காண்கிலேன் கவசமுற்றிடும் மாயை வாழ்வினைப் புரிகிலேன்*
*நதியெனப்படர்ந்தோடும் பொய்வாழ்வினைப் போக்கியாண்ட வடிவேலவனே!*
*நெறிகாண் விதியைமாற்றி பதிபுகழ் புகழ் போற்றும் நின்பதமேற்று*
*வாயாற்றிடைவேலவனே!*

**கலைமணி க. தெய்வேந்திரம்**

உ

(தொடர்ச்சி...

# வேண்டுதல்கள்

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் -

அப்பர் பெருமான் தனக்கேற்பட்ட சூலைநோயைத் தீர்க்குமாறு கோரி "கூற்றாயினவாறு விலக்ககலீர்" எனச் செய்த வேண்டுதலே அவரது முதலாவது தேவாரமாக அமைந்ததை ஏற்கனவே பார்த்தோம். அந்தப் பதிகம் முழுவதுமே 'சுடுகின்றது சூலை தவிர்த்தருள்வீர்", "நறுகாமல் துரந்து கரந்துமிமர்" போன்ற வெவ்வேறு வார்த்தைப் பிரயோகங்கள் மூலம்இதே வேண்டுதலைச் செய்கின்றார்.

அத்துடன், சூலைநோய் தரும் வேதனையையும் அதனைத் தாங்கமுடியாது தான் படுகின்ற துன்பத்தையும் இப்பதிகம் முழுவதும் விபரித்துள்ளார். தனது முதலாவது தேவாரத்தில் அந்த நோயைக் கூற்றுவனெனக் கூறியவர் அடுத்த தேவாரத்திலே நஞ்சாகி வந்து நலிவதாக அதன் கொடுந்தன்மையை எடுத்துரைப்பார். "குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன்" என்றும், "அலந்தேன் அடியேன்" என்றும், அது தரும் வேதனையால் துன்பப்படுவதைப் பாடியவர் அந்த வேதனையையும் பலவாறு விபரித்துள்ளார்.

*வலிக்கின்றது சூலை தவிர்த்தருள்வீர்*
*பயந்தோன் வயிற்றின் அகம்படியே*
*பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திட நான்*
*அயர்ந்தேன்* எனவும்

*கலித்தேயென் வயிற்றின் அகம்படியே*
*கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன*
*அலுத்தேன் அடியேன்* எனவும் அவர் பாடும்

போது அந்த வேதனை எமது மனத்தைக் கலக்குகிறது.

இதன்பின் அவர் இறையருள் பெறுகிறார். பரிபக்குவமடைகிறார். சித்தம் சிவமயமாகின்றது.

அவர் சைவ சமயத்திற்கு மாறிவிட்டதையறிந்த சமணர்கள் மன்னனிடம் சென்று, நாவுக்கரசரைத் தண்டிக்குமாறு தூண்டினர். மன்னன் அவரை நீற்றறையில் இட்டான். அவர் தகிக்கும் வெப்பத்துள்ளிருந்தார். வயிற்றில் சூலைநோயிருந்த போது "சுடுகின்றது சூலை" என இறைவனிடம் விண்ணப்பித்தவரின் உடல் முழுமையாக நீற்றறையில் அதியுயர் வெப்பத்திற்குள் இப்போது இருக்கின்றது. இவ்வேளையில் அவர் அந்த வெம்மை தன்னை வருத்துவதை இறைவனிடம் கூறி அதிலிருந்து தன்னைக் காக்குமாறு வேண்டியிருக்க வேண்டும். ஆனால் அவர் அப்படி வேண்டவில்லை. அவரோ

*மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே*

எனப் பாடுகின்றார். அவர்

- நீ மற்றவர்களைக் கண்டு பயப்படாதே -

தான் வெந்துயரடைவதாகக் கூறவில்லை. உடலெலாம் சுடுகின்றது. தவிர்த்தருள்வாய் என்றோ, என் வேதனையை விலக்கியிடாய்என்றோ தன்னைக் காக்கும்படி இரந்து நிற்க வில்லை. இப்போது அவர் இறைவனது திருவடியிலே ஒன்றிக் கிடக்கிறார். அந்த இறையடி நீழலில் மாசற்ற வீணையிசையையும், மாலைநேரத் தண்மதியையும் இதமான தென்றலின் வருடலையும் இளவேனிலையும், வண்டு ரீங்கரிக்கும் பொய்கையின் குளிர்மையையும் அவர் உணர்கிறார். அவருக்கு எந்த வேதனையும் தெரியவில்லை. மனம் இறைவனுடன் ஒன்றிக் கிடந்தாலும் உடல் வெம்மையிற் பொசுங்கியிருக்கவேண்டுமே. அப்படி நடக்காதது இறைவனது திருவருளினாலேயாகும்.

இறையடி நீழலிலே இருந்ததனால் நீற்றறையிலிருந்து தப்பிய நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலிலே இட்டார்கள். கல்லோடு அமிழ்ந்து இறந்துபோவாரென எதிர்பார்த்த னர்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலினுட் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே


எனப் பாடியவாறு கல்லே தெப்பமாக மாறிவிட அவர் அதன்மேலேயிருந்து வந்து கரை சேர்ந்தார். இச்சந்தர்ப்பத்திலும் அவர் தனக்கு வந்த இடர்குறித்து முறையிடவில்லை. நல்ல துணையாயிருக்கும் நமச்சிவாய என்னும் மந்திரத்தைப் பற்றியே அவர் பாடினார்.

பின்னர் அவரைக் கொல்வதற்காக யானையை அவர் மீது ஏவினார்கள். அப்போதும் இறைவனாகிய "ஒருவர் தமர் நாம், அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்சவருவதும் இல்லை" என்று பாடி அஞ்சாது நின்றார்.

அவர் சமண சமயத்திலிருந்து சைவத்திற்கு மாறுகின்ற வேளையில் அவரிருந்த நிலையிலிருந்து பின்னர் மாறிவிட்டதையே இத்தேவாரங்கள் காட்டுகின்றன. அத்துடன் அவருக்குத் தேவையானதை அவர் கேட்டுப் பெறவேண்டியிருக்கவில்லை. இறைவனே அவருக்குத் தேவையானதைக் கொடுக்கிறார். தனது அடியவருக்கு எந்தத் துன்பமும் நேராது காத்து நிற்கின்றார்.

இத்தகைய இறையருளையும் நாவுக்கரசர் பாடிய தேவாரங்களையும் நோக்குகையில் வேண்டுவார் வேண்டுவது ஈவான் என அவர் பாடியதும் இதன் காரணமாகத்தானோ என் றும் சிந்திக்கத் தூண்டுகின்றது. வேண்டுபவருக்கு அவர் வேண்டுவதைக் கொடுப்பவர் என்ப தோடு தேவையானவருக்குத் தேவையானதைக் கொடுப்பவர் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். தன் பக்தனுக்கு எதனை அவசியமாகக் கொடுக்க வேண்டுமென்பது இறை வனுக்குத் தெரியும். எனவே அவரே அதனைத் தருவார். நாம் கேட்டுப் பெறவேண்டிய அவசிய மில்லை. எமக்கு நற்றுணையாவது நமச்சிவாயவே என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இது குறித்து மாணிக்கவாசகப் பெருமானும் பாடியுள்ளார். அதனை மற்றொரு கட்டுரையில் நோக்குவோம்.

உ



# சிவலிங்க வடிவம்

- திருமதி தயாளினி செந்தில்நாதன் அவர்கள் -

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமானாவார்.சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் என்று பொருள் உண்டு. மங்கள வடிவினனாய சிவன், மங்களங்கள் அனைத்தும் நல்கும் தன்மையன். எண்குணத்தானாகிய சிவன் ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ்சோதி வடிவினனாவான். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் பரிபூரண வடிவினனாய சிவபெருமானுக்கு உருவமைத்து வழிபாடாற்றுவது குறித்து அப்பர்,

**"குறிகளும் அடையாளமும் கோயிலும்**
**நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்**
**அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்**
**பொறியிலீர் மனம் என்கொல் புகாததே"** எனப்பாடியுள்ளார்.

உலக உயிர்கள் அனைத்தும் உய்யும் வண்ணம் முழுமுதற் பொருளாய சிவன் கொண்ட வடிவங்கள் உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்றாகும்.

**................. ஏகத்து**
**உருவும் அருவும் அருவுருவுமாகி**
**வருவ வடிவம் பலவாய்** எனக் குமரகுருபரர் கூறியுள்ளார். உருவத் திருமேனிகளாவன (சகனத்திருமேனி)

நான்முகன், திருமால், உருத்திரன், மகேசன் என்னும் நான்குமாகும். அருவத் திரு மேனிகளாவன (நிட்களத் திருமேனி) சிவம், சக்தி, நாதம், விந்து என்னும் நான்கு மாகும். அருவுருவத்திருமேனி (சகல நிட்களத்திருமேனி) சிவலிங்கத் திருமேனியாகும். இவ் ஒன்பதும் நவம் தரும் பேதம் என அழைக்கப்படும். இதிலே சிவலிங்க வடிவம் பற்றி நோக்கலாம்.

கண்ணுக்குப் புலப்படாத அருவத் திருமேனிக்கும், கண்ணுக்குப் புலப்படும் உருவத் திருமேனிக்கும் மூலமான இருப்பிடமாகிய சிவபெருமானை அறிந்து வழிபடு வதற்கு அடையாளமாக விளங்குவது சிவலிங்க வடிவமாகும்.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
நாணாறு தேடியமால் நான்முகனும் காணதருச்

சேணாரும் தழற்பிழம்பாய்த் தோன்றியது" என்ற பாடல் சிவலிங்க வடிவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

லிங்கம் என்பதற்குரிய பொருளை காரணம் சுப்பிரபேதம், வாதுளம் போன்ற ஆகமங்கள் தெளிவாகக் கூறுகின்றன. எந்த இடத்தில் பிரளய காலத்தில் சேதன அசேதனப் பிரபஞ்சங்கள் அனைத்தும் இலயம் அடைந்து பின்னர் படைப்புக் காலத்தில் எதிலிருந்து மீண்டும் உற்பத்தியாகின்றனவோ அதுவே இலிங்கம். லிம் என்பது லயத்தை யும் (ஒடுங்குவதையும்) கம் என்பது வெளிவருதலையும் குறிக்கும். இலிங்கம் என்பது சித்தரித்தல் எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது. சிவபெருமான் படைப்பு முதலான ஐந்தொழில்களாலும் பிரபஞ்சத்தை சித்தரிக்கின்றதால் சிவலிங்கம் எனப்பட்டது என வருணப்பத்ததி என்ற நூல் விளக்கியிருக்கின்றது.

சிவலிங்கத்தில் பீடமாக உள்ள பகுதி விந்து என்னும் தத்துவத்தையும், இலிங்கமாக உள்ள பகுதி நாதம் என்னும் தத்துவத்தையும் குறிக்கும். நாதமே லிங்க வடிவமென்றும், விந்துவே பீடமென்றும் கூறப்படுகின்றது. இலிங்கம் சிவவடிவம். பீடம் சக்தி வடிவமாகும். இலிங்கமும், பீடமும் ஒன்று சேர்ந்து ஒன்றாக இருப்பதால் நெருப்பும், உஷ்ணமும் சேர்ந்து ஒன்றாக இருப்பது போலச் சிவமும், சக்தியும் சேர்ந்து ஒன்றாக இருக்கின்றமையைக் குறிக்கின்றது.

குணம் குறிகடந்த பேரொளியாகிய இறைவனை ஒரு குறியின் கண்வைத்து வழிபடும் பொருட்டுத் திகழ்வது சிவலிங்கம். இது இறைவனது அருவுருவத் திருமேனி. சதாசிவத் திருமேனி எனவும் கூறப்படும். சிவலிங்கமானது அடியிலிருந்து மேல் நோக்கி பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என மூன்று கூறுகளை உடையது.

பிரமபாகம் அடிப்பாகம் கருவறையின் தரைமட்டத்திற்குக் கீழே நாற்கோண வடிவமாய் காணப்படுவதாகும். விஷ்ணுபாகம் தரைமட்டத்திற்கு மேல் ஆவுடையாருள்ளும் மறைந்திருக்கும் எண்கோணவடிவமானது. உருத்திரபாகம் ஆவுடையாருள்ளும் மேல்மட்டத்திலிருந்து ஓங்கியும் நிற்கும். இங்ஙனம் வெளியே தெரியும் பாகம் பூஜாபாகம் எனப்படும்.

சிவலிங்க அமைப்பு முறைப்பற்றி ஆகமங்களும், சிற்பநூல்களும் மிக விரிவாகக் கூறுகின்றன. சிவனது ஏனைய வடிவங்களுக்கு அடிப்படையாக விளங்குவதோடு, கருவறையின் பிரதான மூர்த்தியாக நிறுவப்படும் காரணத்தாலும் இதன் அளவு முறை பற்றி இந்நூல்கள் விரிவான விளக்கங்களை உள்ளடக்கியுள்ளன.

மேலும் இலிங்கம் அமைப்பதற்குரிய பொருட்களைப் பற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன. கல், உலோகம், மண், மரம், நவரத்தினம் ஆகிய பொருட்களே இதற்கு உகந்தவையாகும். இலிங்கங்கள் பல வகைப்படுவன. சுயம்பு, தைவிகம், மானுஷம், காணவம், ஆர்ஷிகம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற்றுள்ளே மற்ற எவராலும் தாபிக்கப்படாமல் தானே தோன்றியது சுயம்புலிங்கம் என்ற பெயரைப் பெறுகின்றது. இவ்வாறாக இலிங்க வகைகள் சிறப்புப் பெற்று விளங்குகின்றன.

எனவே மேலே கூறப்பட்டவற்றின் மூலமாக சிவலிங்க வடிவம் பற்றி அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

- அறியாமையிலிருந்து கேடு விளைகிறது -

உ

# விஞ்ஞானமும் ஒழுக்கமும்

- கு. குணாளன் அவர்கள் -

மனித நாகரிகம் வளர்ச்சி அடைந்துள்ள இந்த விஞ்ஞான யுகத்தில் மனிதம் இறந்துள்ளது என சான்றோர்கள் கவலை அடைகின்றனர் விஞ்ஞான அறிவியல் துறையைப் பொறுத்தவரை உலகத்தவர் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பது எவ்வளவு உண்மையாயினும் ஒழுக்கம், பண்பாட்டு வகையில் மனிதர்கள் இன்னும் பின்தங்கிய, பூரணத்துவம் அடையாத நிலையிலேயே உள்ளனர் எனவும் சான்றோர்கள் பெரிதும் கவலை தெரிவிக்கின்றனர்.

விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதன் எண்ணற்ற சாதனைகளை நிலை நாட்டி உள்ளான். இறைவனின் இருப்பிடம் என முன்னோரால் குறிப்பிட்ட நிலவிற்கே சென்று காலடி பதித்து மண், கல் போன்றவற்றை எடுத்து வந்து சாதனை படைத்துள்ளான். மேலும் அண்டத்தில் குடியேறக் கூடத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இப்படியாக சாதனைகளைப் படைத்து வரும் மனித குலத்தில் ஒழுக்கம் என்ற பண்பு அருகி வருவது மிகவும் வேதனைக்குரிய செயலாகும்.

மனிதனின் ஒழுக்க மேம்பாட்டிற்கு வழிவகைகள் யாது என்று ஆராயுமிடத்து வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளில் பத்துப் பத்துக் குறட்பாக்களில் இடம் பெற்றுள்ள முத்து முத்தான வாழ்வியற் கருத்துக் கருவூலமே சிறப்பாக மக்களுக்கு வழிகாட்டக் கூடியது எனலாம்.

இன்று உலகில் நடக்கும் செயல்களை எல்லாம் அன்று தெய்வப்புலவர் தனது 1330 குறட்பாக்கள் மூலம தெளிவு படுத்தி உள்ளார் என்பது இன்று தெட்டத் தெளிவாக எல்லோரும் அறிந்த உண்மை. இதனை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. திருக்குறள் உலக மக்கள் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கேற்ற" நன்னெறிகளை வகுத்தளித்துள்ளது. இதனால்த்தான் வான்மறை வள்ளுவம் வாழ்க்கைப் பொருள் நூல் என உலகத்தவரால் அழைக்கப் படுகிறது.

"உயிரை எவ்வாறு பாதுகாக்கின்றோமோ, அவ்வாறே ஒழுக்கத்தையும் பாதுகாக்கவேண்டும்" என்பதனை அறிவுறுத்தும் வகையில் 'ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப் படும்" என்று வள்ளுவம் கூறுகிறது. இவ்விடத்தில் பார்க்கும் போது உயிரைப்போல மட்டுமன்றி உயிரிலும் மேலாக என்று மிகவும் சிறப்பாக கூறப்படுகிறது. ஒழுக்கம்

தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே.

என்பது உயிரைவிட பாதுகாக்கப்பட வேண்டியது. ஏனென்றால் அது விழுப்பத்தை தருகிறது. அதாவது விழுப்பம் என்றால் சிறப்பு என்று பொருள்படும்.

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்"*

என்னும் குறட்பா மூலம் எடுத்து இயம்பியுள்ளார். உயிரின் ஐந்து அறிவைப் பெற்று வாழும் விலங்குகள், ஊர்வன கூட அறிந்து இருக்கின்றன. பல்லி, பாம்பு, மற்றும் பிராணிகள், விலங்குகள் தம் உயிரினுக்கு ஆபத்து வருவதை அறிந்தால் ஓடி ஒழித்து தமது உயிரினைப் பாதுகாத்துக் கொள்கின்றன. பறவைகள் கூட தமது உயிரினுக்கு ஆபத்து என்றால் பறந்து மறைந்து கொள்கின்றன. அவை கட்கும் உயிர்தான் மேலான பொருள்.

ஆனால் மனிதன் வெறும் உயிர உள்ளவனாக மட்டும் இருந்துவிட்டால் போதுமா? உண்மையில் எந்த ஒரு மனிதனும் இதை ஒப்புக்கொள்வதில்லை. எனவே மனிதன், மனிதத்தன்மை உள்ள, மனிதம் உள்ளவனாகவே இருக்க விரும்புகிறான். ஒழுக்கம் தவறி ஒரு விலங்கினைப் போல வாழ்வதைவிட இறப்பது மேல். எனவே மனிதனுக்குரிய பண்பான ஒழுக்கத்துடன் வாழ்வதே மனிதனுக்குச் சிறப்பு ஆகும். ஒழுக்கமாகிய பண்பு எந்த ஒரு மனிதனிடத்து இல்லையோ அவன் மனிதனாகான் என வள்ளுவர் கூறி உள்ளார்.

ஒழுக்கம் ஆகிய பண்பே ஒருவனை மனிதனாக்குகிறது. ஒழுக்கம் இல்லாத இடத்து ஒருவன் எவ்வளவு கூர்மையான புத்தி படைத்தவனாயினும் அவன் மனிதனாகக் கருதப்படமாட்டான். இதனை வள்ளுவர் மிகவும் அழகாக குறள் மூலம் வெளிப்படுத்தி உள்ளார். அதாவது

*"அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்"*

பண்பு இல்லாதபோது மனிதன் மரத்துக்குச் சமனாகிறான். ஒழுக்கவழி இல்லாத காரணத்தினால் ஓரறிவுடைய வழி நில்லாக் காரணத்தால் ஓரறிவுடைய மரமாக அவன் தாழ்த்தப்படுகிறான்.

மனித வாழ்வில் சிறப்பாக உயர வழி வகுப்பது மனம்தான். மனிதர்களின் இன்பதுன்பங்களுக்கு அவரவருடைய மனதில் ஏற்படும், உருவாகும் எண்ணங்களே காரணமாகும். ஒருவன் தன் மனதில் எண்ணும் எண்ணம் நல்லதாக இருந்தால் வாக்கு நல்லதாக அமையும் வாக்கு நல்லதாக இருந்தால் செயலும் நல்லதாக அமையும். செயலும் நல்லதாக அமைந்தால் அதனால் விளையும் பயனும் நன்மையாகவே இருக்கும். இப்பயன் ஆனது அவனுக்கு மட்டுமன்றி அவனைச் சார்ந்த உற்றார், உறவினர், சமூகம், கிராமம், நாடு அனைத்திற்கும் நன்மையையே விளைவிக்கும்.

ஒழுக்கத்துடன் உத்தம வாழ்க்கைக்குச் சான்றாக விளங்கிய உலகம் போற்றும் சத்தியசீலர் மகாத்மா காந்தி அடிகளை மாந்தர்கள் ஒருமுறை நினைத்துப் பார்க்க வேண்டும்.

மனதில் அழுக்காறு இல்லாவண்ணம் அதனைத் தூய்மையாக பராமரித்தல் எமது ஒவ்வொருவருடைய கடமையாகும். தெய்வப்புலவர் மனதை நோக்கி அறிவுரை வழங்கிய குறட்பாக்கள் அநேகம். மனிதர்களாகிய நாம் பொறாமை, கோபம், முதலியவற்றைக்கொண்டு அதன் மூலம் அழிவைத் தேடிக் கொள்கிறோம். இன்று நாம் படும் இன்னல்களுக்கெல்லாம் எமது

ஆணவம், பொறாமை, கோபம் என்பன வையே காரணங்களாகும். இத்தீய குணங் கள் என்று எம்மைவிட்டு நீங்குகிறதோ அன்றுதான் எமக்கு சுபீட்சமான வாழ்வு கிட்டும் என்பதில் எந்த வித ஐயப்பாடும் இல்லை.

அன்னை சாரதாதேவி, இராம கிருஷ்ணர், மகாத்மா காந்தி, விவேகானந் தர் போன்ற பெரியோர்கள் தமது வாழ்வில் எப்படி ஒழுக்கத்தினை கடைப்பிடித்து வாழ்ந்து இவ்வுலகம் போற்றும் உத்தம சீலர்களாக திகழ்ந்தார்கள் என்பதனை நாம் ஒவ்வொருவரும் அவர்களின் வாழ்க் கைச் சரிதத்திலிருந்து அறிந்துகொள் வோம். ஆனால் இன்றைய இளைய சமு தாயம் இவற்றையெல்லாம் விடுத்து வாழ்க் கைக்கு உபயோகமில்லாத தரம் கெட்ட நூல்களை வாசித்து, ஒழுக்கம் தவறி நடப் பது மிகவும் வேதனைக்குரிய ஒரு விடய மாகும். இவ்வுலகில் நாமும் ஒழுக்கத்தை கடைப்பிடித்து வாழ்ந்து உன்னதம் அடைய வேண்டும் என்பதே எனது பேரவா.

"அரிது அரிது மானிடராய்ப் பிறப்ப தரிது" என்னும் மூதாட்டியின் வாக்கிற் கிணங்க நாம் மானிடராகப் பிறந்துள்ளோம். அப்படிப்பட்ட நாம் நல்ல சிறந்த ஒழுக்க நெறிகளிலிருந்து தவறின் அவர்கள் அது வரை எய்திய சிறப்புக்கள், பெருமைகள், நற்பெயர்கள் யாவற்றையும் இழந்து உலகத்தவரால் வெறுக்கப்படுவர். ஒருவன் கண்ணிமைக்கும் நேரத்தில் கெட்டவனாக லாம்.

ஆனால் ஒருவன் நல்லவனாக எவ் வளவு காலம் எடுக்கும் என்பது கூறமுடி யாது. எமது தலையில் இருக்கும் முடிக்கு நாம் எவ்வளவு அழகு வேலைகளைச் செய்து மெருகேற்றி பராமரிக்கிறோம். அப் படியான முடி தலையில் இருந்து உதிர்ந்து விடுமாயின் அதனைக் காண்பவர் அறவே வெறுப்பர். அதனை அசிங்கமாகவே தம் கண்ணால் உற்று நோக்குவர். இது போலவே மனிதர்கள் தமது பண்பிழந்து தாழ்ந்தவர்களாயின் வெறுத்தர்க்கு உரியவராவர். இக் கருத்தினை வள்ளுவம்

***"தலையில் இழிந்த மயிரனையர் மாந்தர்***
***நிலையில் இழிந்த கடை"***

என மிக அழகாக கூறியுள்ளார். எனவே இவ்வுலகில் மானிடராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் இந்த ஒழுக்கப் பண்பை கடைப்பிடித்து உத்தமர்களாக வாழ்ந்து வீட்டிற்கும், நாட்டிற்கும் நற்பெயரை தேடிக் கொடுப்போம் என இன்று முதலாவது உறுதி பூண்போமாக.

**"மனித குலம் தோன்றியதற்கு பிறகுதான்**
**சம்பிரதாயங்கள் தோன்றின,**
**சம்பிரதாயங்கள் தோன்றிய பின்**
**மனித குலம் தோன்றவில்லை"**

**"வாழ்க ஒழுக்கத்துடன்"**

உ

# தவப்பயனை அழிக்கும் ஆணவம்

- நா. நல்லதம்பி அவர்கள் -

ஜனாதனதர்மம் ஆகிய எமது இந்துமத தர்மத்தின்படி ஒரு மனிதன், இந்த மண்ணிற் பிறக்கும் பொழுது எதனையுங்கொண்டு வருவதில்லை; போகும் போது எதனை யுங் கொண்டு போவதுமில்லை. இங்கே அவன் அனுபவிப்பதெல்லாம் சிவன் தந்தவையே.

*"பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை; பிறந்து மண்மேல்*
*இறக்கும் பொழுது கொடுபோவதில்லை; இடைநடுவில்*
*குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்தது...."*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், தெய்வநிலைக்கு உயர்ந்து, பிறவியை முற்றுப்பெறச் செய்கிறான்; ஏனையவர் மீண்டும் பிறப்பதற்கே ஆளாகி இறக்கின்றனர்.

மனித வாழ்க்கை நமக்குக் கிடைத்தது, இறைவனை பக்திபூர்வமாக வணங்கி, அவனருள் பெற்று, முத்தியின்பம் பெறும் பொருட்டே யாம் என்பது நாவலர் பெருமான் நமக்குச் சொன்ன அறிவுரை ஆகும்.

நல்ல வாழ்க்கை வாய்க்கப் பெற்றவர்கள், மேலும் இறையருளால் முன்னேறித்தவம் செய்து பேரின்ப நிலை பெறும்போது, சிலபேர் பேராசையினால் தவப்பயனை அவமாக்கி அழிவைத் தேடுகின்றார்கள்.

நமது வாழ்க்கைப் பாதையில் இறைவன் பல தடைதாண்டற் பரீட்சைகளை நடாத்தி நம்மைச் சோதிக்கிறார். இதிலே சித்தி பெறுவதும் பெறாததும் நமது கையிலேதான் இருக்கிறது! இதனைத் தலையெழுத்தென்றோ தலைவிதியென்றோ நாம் கூறிக்கொள் கிறோம்.

இவ்வுலகில், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வாழ்க்கை நிலை யினைக் கூறுவனவாகவே நமது தமிழ் இலக்கியங்களும் இந்து தர்ம நூல்களும் பெரியோர்களால் எழுதப்பெற்றுள்ளன.

தமிழின் தலைசிறந்த இலக்கியமாகவும் இந்து தர்ம இலக்கியமாகவும் நின்று, உலகப்பொதுமறையாகித் தமிழ் மகனை உலக அரங்கில் உயர்த்தி வைக்கிறது நமது திருக்குறள்.

இதிகாசங்களாக நின்று இந்துதர்ம விழுமியங்களைப் போதிக்கும் பல்வேறு பாத்திரப் படைப்புகளோடு விளங்குவன பாரத, இராமாயண காப்பியங்கள். கிருஷ்ணா வதாரத்தின் மூலம் அதர்மங்களை அழித்த பல கதைகள் பாரத காப்பியத்தில் கூறப்பெறு கின்றன. அவற்றுள் ஒன்றினை இக்கட்டுரை மூலம் விளக்குவோம். "உலகிலே அதர்மம்

மேலோங்கித் தர்மம் சீரழிந்து போகவும் அதனால் நல்லவர்கள் துன்பப்படவும் நேர்ந்தால், அவ்வேளைகளில் நான் அவதாரமெடுக்கிறேன்" என்று கிருஷ்ணபகவான் கூறியுள்ளார்.

அதன்படி, பாரத தேசத்திலே கிருஷ்ணன் அவதாரஞ் செய்கிறார். அப்பொழுது, ஜராசந்தன் மகத தேசத்தில் சக்கரவர்த்தியாக இருந்து அரசாட்சி செய்கிறான். ஹஸ்தினா புரம், பாஞ்சாலம் ஆகிய இரு பிரதேசங்களைத் தவிர, ஏனைய பாரத நாட்டுப் பிரதேசங் களை ஜராசந்தன் அரசாண்டு வருகிறான்.

பூபாரந்தீர்க்கவென அவதாரஞ் செய்த கிருஷ்ண பரமாத்மா நந்தகோபன் - தேவகி தம்பதியரின் எட்டாவது பிள்ளையாகப் பிறக்கின்றார். இந்தத் தேவகிக்கு ஹம்சன் என்றொரு சகோதரன் இருக்கிறான். அவன் மிகவும் கொடியவன். தனது சகோதரியான தேவகியின் எட்டாவது பிள்ளையாகப் பிறக்கப்போகும் கிருஷ்ணனால் தனக்கு மரணம் ஏற்படும் என்பதை அறிந்துகொண்டிருந்தான்.

அதனால் கிருஷ்ணன் பிறந்ததும் தேவகி தன் மகனை ஆயர்பாடியில் மறைவாகக் கொடுத்து விடுகிறாள். பாலகிருஷ்ணன் ஆயர்பாடியில் யசோதரை வீட்டில் வளர்வது ஹம்சனுக்குத் தெரிந்துவிடுகிறது. கிருஷ்ணனைக் கொல்ல முயன்று வருகிறான்.

ஹம்சன், ஜராசந்தன் என்பவனுடைய மகள்மாரான இரு பெண்களை மணஞ் செய்து வாழ்கிறான்.

ஹம்சனும் அவனது மாமனான ஜராசந்தனும் தேவர்களுக்கும் நாட்டு மக் களுக்கும் பொல்லாங்கு செய்பவர்களாக இருப்பதனால், மக்களும் தேவர்களும் கிருஷ்ண பரமாத்மாவிடம் தஞ்சமடைகிறார்கள்.

ஆயர்பாடியில் கிருஷ்ணனின் தீராத விளையாட்டுக்கள் நடைபெறும் அதேநேரம், கிருஷ்ணனுக்கு நண்பர்களும் வந்து சேர்ந்துவிடுகிறார்கள். ஆயினும் தனது அவதார நோக்கத்தில் கண்ணுங்கருத்துமாக இருந்த கிருஷ்ணர், ஹம்சனின் சூழ்ச்சிகளை முறி யடித்து அவனைக்கொன்று விடுகிறார்!

இனி மற்றொரு பொல்லாதவனான ஜராசந்தனையும் கொல்ல வேண்டும். ஜராசந் தனுக்கு ஏனைய அரசர்கள் கப்பங்கட்டவேண்டும். கப்பங்கட்ட மறுத்தால் அவர்களை அவன் கொன்றுவிடுவான். இவ்வாறு 99 அரசர்களை அவன் வெற்றிகொண்டுவிட்டான். இன்னும் ஒருவனை மடக்கிவிட்டால் 100 பேரை வென்ற சிரஞ்சீவியாக வாழலாம் என எண்ணியிருக்கின்றான் ஜராசந்தன்.

ஹம்சனைக் கிருஷ்ணர் கொன்றுவிட்டார் என்பது தெரிந்தும் ஜராசந்தன் கிருஷ்ணரைக் கொல்ல விரும்பவில்லை. ஆயினும் ஹம்சனைக் கொன்ற கிருஷ்ணர், ஜராசந்தனை வேறு விதமாகக் கொல்ல எண்ணிக் கொண்டிருக்கிறார்.

ப்ரவர்ஷனக் குன்றில் வாழ்கின்ற பழங்குடி மக்களிடம் சக்கரவடிவிலான ஆயுதம் ஒன்று இருக்கிறது. அது, சொன்ன வேலையைச் செய்துவிட்டு, எய்தவன் கைக்கு வந்துவிடும்! இந்தப் பழங்குடியினரைப் பயன்படுத்தினார் கிருஷ்ணர்.

அவர்கள், ஜராசந்தனுடைய கையாட்களுக்குப் பழரசம் கொடுத்து மயக்கி அவனு டைய பல போர் வீரர்களைக் கொன்று விடுகிறார்கள். இதே வழியில் ஜராசந்தனைக்

கொல்ல கிருஷ்ணர் விரும்பவில்லை.

ஒரு நாள், இதுவிடயமாக உதிஸ்டிரனோடு பேசிக்கொண்டிருக்கிறார் கிருஷ்ணர்.

அப்போது உதிஸ்டிரன் கூறுகிறான்; "மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமென்பது தான் முக்கியமானது. ஒருவனுடைய சுயநலத்துக்காக ஏன் 100 பேருடைய தலை உருளவேண்டும்"

உதிஸ்டிரனுடைய இந்த அபிப்பிராயத்தைப் பயன்படுத்தத் திட்டம் போடுகிறார் கிருஷ்ணர்.

இப்போது ஜராசந்தனுடைய பிறப்புப் பற்றிச் சிறிது பார்ப்பது அவசியம்.

ஜராசந்தனுடைய தந்தை ப்ரிஹடதரன் இரு மனைவியரை மணந்தும் பிள்ளைப் பேறு கிட்டாத காரணத்தால், வனஞ்சென்று, சந்தகௌசிகர் என்ற முனிவரிடம் தனது குறைபாட்டைச் சொல்லுகிறான். அந்த முனிவர், ஒரு பழத்தை இவனிடங்கொடுத்து, இவனது மனைவியிடம் உண்ணக்கொடுக்கும்படி கூறுகின்றார்.

ப்ரிஹடதரனுக்கு மனைவியர் இருவர் என்பது பற்றி முனிவருக்குத் தெரியாது!? இது பற்றி அரசன் முனிவரோடு பேசவுமில்லை.

அரண்மனைக்கு வந்து சேர்ந்த பொழுதுதான், இருமனைவியருக்கு ஒரு பழத்தை எப்படிக் கொடுப்பது என்ற சிந்தனை எழுகிறது! ஆலோசனை கேட்க முனிவரிடம் போகவேண்டுமே!

பழத்தை இரு கூறாக்கி இருவரிடமும் கொடுத்துவிடுகிறான். நாட்கள் நகர்ந்தன

மனைவியர் இருவரும் ஒரு மனிதஉடலின் இரு பாதிகளைத் தனித்தனி பெற்றெடுக் கின்றனர்!

அரசனுக்குக் கோபம் பொங்குகிறது. ஆனால் முனிவரிடம் கோபத்தைக் காட்ட முடியுமா, என்ன?

இரு பாதிகளையும் காட்டிலே எறியச்செய்துவிடுகிறான். காட்டிலே உலாவிய ஒரு அரக்கியின் கண்களில் இவைகள் படுகின்றன. தற்செயலாக இப்பாதிகளைப் பக்கம் பக்கமாக வைத்துப் பார்க்கிறாள். அழகான ஓர் ஆண்குழந்தை உருவாகிறது!

அரக்கி, அந்தப் பிள்ளையை அரசன் கையில் கொடுக்கிறாள். 'ஜரா' என்ற அரக்கிபெயரையும் 'சந்தன்' என்ற முனிவர் பெயரையும் இணைத்து 'ஜராசந்தன்' என பிள்ளைக்குப் பெயர்சூட்டி மகிழ்ந்து, வளர்க்கிறான் ப்ரிஹடதரன்.

இப்படியாக வளர்ந்து சக்கரவர்த்தியாகி கொடுங்கோலனாகியிருக்கின்ற ஜராசந்த னைக் கொல்லுந் திட்டம் கிருஷ்ணருடைய எண்ணத்தில் உருவாகிவிடுகிறது.

ஜராசந்தனுடைய 100ஆவது என்ற சவாலை ஏற்று வீமன் போரிட வேண்டும் என்பது கிருஷ்ணருடைய திட்டம்.

தருமன் உடன்படுகிறான்.

ஒருநாள், வீமன், அர்ச்சுனன், கிருஷ்ணர் மூவரும் முனிவர்கள் போல வேடமிட்டு ஜராசந்தனுடைய கோட்டைக்குள் திடீரெனப் பிரவேசிக்கிறார்கள்!

"என்ன வேண்டும்?" ஜராசந்தன்.

"மற்போர்" கிருஷ்ணர் கூறுகிறார். மூவரும் வேடத்தைக் களைகிறார்கள்.

ஏக்கங்கொண்ட ஜராசந்தன், மாட்டுக்காரப் பயலுடன் மற்போரா என்று கர்ச்சிக்கிறான்.

'மற்போர் வீமனுடன்' என்று பதில் கூறுகின்றார் கிருஷ்ணர்.

மற்போர் தொடங்குகிறது. அர்ச்சுனனும் கிருஷ்ணரும் பார்வையாளர்கள் போல அயலிலே நிற்கிறார்கள்.

வீமன், ஜராசந்தனை இரு கூறாக்கிக் கிழித்து எறிகிறான். அவை மறுபடியும் இணைந்து போர் புரிகின்றன! இப்படி பின்னரும் பல முறை பிளந்து எறியும்போதெல்லாம் அவை கணப்பொழுதில் ஒன்றிவிடுகின்றன!

வீமன் கடுமையாக யோசிக்கிறான். யதேச்சையாக கிருஷ்ணரையுந் திரும்பிப் பார்க்கின்றான். அந்த நேரம் கிருஷ்ணர் ஒரு இலையை இரு கூறாக்கி வளம் மாறிப் போடுகிறார்.

வீமனுக்கு விளங்கி விடுகிறது!

மறுமுறை உடற்கூறுகளை மாற்றிப் போட்டு விடுகிறான். ஜராசந்தன் எழுந்திருக்கவேயில்லை. இறந்து விடுகிறான். கதை முடிகிறது.

அவதாரமெடுத்த கிருஷ்ணபகவான், அதர்மத்தின் ஒரு பகுதியை அழித்து விடுகிறார். ஆனால், இது தர்மமானதா என்று ஒரு வினா எழுகின்றது.

ஜராசந்தனை வேறு எந்த வழியிலும் கொல்ல முடியாது. அந்த வல்லமையை, வரத்தைக் கொடுத்ததும் இறைவன்தானே! இறைவன் அருளால் பெற்ற அதிகாரத்தை, வரத்தை நல்லவழியில் உபயோகிப்பதுதான் தர்மம். அப்படியிருக்க, ஆணவ முனைப்பால் ஏனையவர்களுக்கு எதிராக, பிழையான வழியில் தனது பலத்தைக்காட்ட முயன்றது அதர்மமாகிறது.

அன்றியும், ஒரு அக்கிரமக்காரன் மாழ்வதா அன்றி 100 நல்லவர்கள் மாழ்வதா நீதி? அக்கிரமக்காரன் (சர்வாதிகாரி) சிரஞ்சீவியாக இருந்து உலகை ஆளுவதற்குப் பதில் அழித்துவிடுவானே.

வீமன், இந்தக் கொலையைச் செய்தாலும் சந்தர்ப்ப வசத்தால் அது தர்மமாகிறது!


அர்ச்சுனன் கிருஷ்ணபகவானின் கீதா உபதேசங் கேட்டபின் போர்க்களத்திலே நடந்து கொண்டது போல,

வீமனும் அர்ச்சுனனும் பகவானுக்காகத் தொழிற்பட்டவர்கள்; தமக்காக, தமது எண்ணப்படி எதையுஞ் செய்யவில்லை என்பதால் பாவமோ பழியோ அவர்களுக்கில்லை.

தெய்வச் செயலாகத் தர்மம் நிலைபெறச் செய்தமையால் இவை தர்மமாகின்றன.

*மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின்*
*அறஞ் சூழும் சூழ்ந்தவன் கேடு. (குறள்)*

உ




**(அறத்துப்பால்)**



## 01. ஆதிமூலமே!

*தனக்குவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்*
*மனக்கவலை மாற்றல் அரிது. (குறள் :7)*

கஜேந்திரன் என்பது ஒரு யானையின் பெயர். அது யானைகளின் இந்திரன் போன்றது. திரிகூடம் என்ற ஒரு மலைக்காட்டில் அது வாழ்ந்தது. அந்த மலையிலிருந்து ஓரருவி விழுந்து, அதனால் உண்டாகியிருந்த குளம் ஒன்று இருந்தது. அது மிகப் பெரியது. கஜேந்திரன் மற்ற பெண் யானைகளுடனும் குட்டி யானைகளுடனும் வசித்தது. அந்தத் தாமரை பூத்த தடாகத்தில்த்தான் தினமும் குளிப்பது வழக்கம்.

ஒரு நாள் அந்த கஜேந்திரன் தாகம் எடுக்கவே தண்ணீர் அருந்த குளத்திற்கு வந்தது. துதிக்கையைத் குளத்தில் விட்டு கரையோரமாக நின்றபடியே தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தது.




வரவிருந்த ஆபத்தை அது உணரவில்லை. அதை அக்குளத்திலிருந்த முதலையும் பார்த்தது. ஒரு பெரிய யானை இரையாகக் கிடைத்த மகிழ்ச்சியில் அதனருகில் போய் நீரில் இருந்த காலைப் பிடித்துக் கவ்வியிழுத்தது.

தரையினில் யானைக்குப் பலம் அதிகம். தண்ணீரிலோ முதலைக்குப் பலமதிகம். இதனால் யானை போராடியது. ஒரு சமயம் கரைப்பக்கம் முதலை இழுக்கப்பட்டது. மறுசமயம் தண்ணீருக்குள் யானை வலிக்கப்பட்டது. முதலையின் பற்கள் பதிய யானையின் காலிலிருந்து இரத்தம் வழிந்தது. யானையின் நிலைமை பரிதாபகரமாக ஆயிற்று.

உடனே யானைக்குத் தன் முயற்சியால் 'ஆவதொன்றும் இல்லை' என்று தோன்றவே போராட்டத்தைக் கைவிட்டது. அகில உலகங்களும் எவரிடமிருந்து உண்டாகி எவரால் காக்கப்படுகிறதோ அவரை உதவிக்கு அழைத்தது.

"சாத்திரமுணர்ந்த சான்றோரின் மனமெனும் தாமரை மலரில் வசிக்கும் புகழ்ச் சுடரே, தனக்குவமை இல்லாத தலைவனே, மூல முதல்வனே, ஆதிபகவனே, என்னை இந்த முதலையிடமிருந்தும் சம்சாரத் துக்கத்திலிருந்தும் காத்தருள்வாயாக" என்று திருவடி பணிந்து வேண்டியது. "நான் இறைவனின் பொருள்" என்று சரணாகதி அடைந்தது. பற்றை விட்டுவிடப் பற்றற்றானின் துணையைத் தேடியது.

கஜேந்திரனின் அபயக்குரல் எல்லா தேவ, தேவதைகளாலும் கேட்கப்பட்டது. சிவனும், பிரம்மாவும் கேட்டனர். ஆனால், "ஆதிமூலம்" ஆகியவர், தாங்களில்லை என வராமல் தவிர்த்தனர். கருடவாகனமேறி சுதர்சன சக்கரத்துடன் விரைந்து வந்த ஸ்ரீமத் நாராயணன், ஸ்ரீஹரியானதால், எல்லா உயிர்களிலும் நிறைந்து வசிக்கும் பரமாத்மா ஆன தால் யானையின் துயர் போக்க அறத்தைக் காக்கும் ஆழியான சக்கரத்தை முதலையின் மேல்விட்டார். முதலையின் முகம் பிளக்கப்பட்டு கஜேந்திரன் காப்பாற்றப்பட்டது. இதை எல்லாத் தேவர்களும், பிரம்மாவும், சிவபிரானும் கண்டு மகிழ்ந்தனர்.

ஸ்ரீஹரி என்றால் இயற்கையாகப் பிறர் துன்பங்களை, அவற்றின் காரணங்களை அழிப்பவர் என்று பொருள்.

பிறகு, எட்டுக் குணங்களை உடைய மேலான இறைவன் 'பொய்தீரந்த' ஒழுக்கமான சரணாகதியைக் கடைப்பிடித்த கஜேந்திரனின் பஞ்சபுலன் வாழ்க்கை இச்சை, இரு வினை களை ஒழித்துப் பிறவிப் பெருங்கடலிலிருந்து கரையேற்றி மோட்சமான தம் 'மிசை நிலத் தில்' நிரந்தரமான பேரின்ப வாழ்வை அளித்தார்.

வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவன், முதலையின் சாபத்திற்கும் இதனால் விமோசனமளித்தார். "ஊகூ' என்ற கந்தர்வனான அவன் தேவலர் என்ற ரிஷியின் சாபம் நீங்க, தன்னுலகம் சென்றான். இதற்கு கடவுளின் அடியாரான கஜேந்திரனின் காலைப் பிடித்தது காரணமாயிற்று.

அப்படியானால் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கடவுளின் திருவடிகளைச் சேர்ந்தவர் ஆவதே குற்றமறபுலன்களை அடக்கிய யோகிக்கும் தேவை என்பது புரிகிறதன்றோ!

## சித்திரை மற்றும் வைகாசி மாத ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசேட உற்சவ தினங்கள்

| | |
|---|---|
| 14.04.2010 சித்திரை 01 புதன் | – தமிழ் இந்துப் புத்தாண்டு (விகிர்தி) மாலை விசேட உற்சவம் |
| 17.04.2010 சித்திரை 4 சனி | – கார்த்திகை விசேட உற்சவம் |
| 21.04.2010 சித்திரை 15 புதன் | – சித்திரா பூரணை விரதம் |
| 14.05.2010 சித்திரை 31 வெள்ளி | – கார்த்திகை தின விசேட உற்சவம் |
| 26.05.2010 வைகாசி 12 புதன் | – வைகாசி விசாகம், விசேட உற்சவம் |

## சித்திரை மற்றும் வைகாசிமாத குருபூசை தினங்கள்

18.04.2010 சித்திரை 5 ஞாயிறு மங்கையற்கரசியார் குருபூசை

20.04.2010 சித்திரை 7 செவ்வாய் விறன்மிண்டர் குருபூசை

26.04.2010 சித்திரை 13 திங்கள் உமாபதி சிவாச்சாரியார் குருபூசை

27.04.2010 சித்திரை 14 செவ்வாய் இசைஞானியார் குருபூசை

28.04.2010 சித்திரை 15 புதன் திருக்குறிப்புதொண்டர் குருபூசை

08.05.2010 சித்திரை 25 சனி திருநாவுக்கரசர் குருபூசை

13.05.2010 சித்திரை 30 வியாழன் திருத்தொண்டர் குருபூசை

– இயன்றளவு யோகாசனம் செய்தல் வேண்டும் –

# திருவிளையாடல்

## நாக மெய்த படலம்

- ஆறுமுகநாவலர் -



படலம் - 28

அனந்தகுண பாண்டியன் வீபூதி, உருத்திராட்சம், பஞ்சாட்சர மென்னும் மூன்றுமே மெய்ப்பொருள் எனத் தெளிந்து, அவைகளில் அளவிறந்த பக்தி பூண்டு, தன் தந்தை முதலான ஏனைய அரசர் களையும் விடச் சிறப்புடன் அரசு செய்து வந்தான். அதனால் பாண்டி நாடெங்கும் சிவ வேடமே பரவிற்று. அதனால், சமணர்கள் பொறாமைகொண்டு பாண்டியனைக் கொல்லக்கருதி ஒரு பெரிய வேள்விச்சாலை அமைத்து வேள்வி செய்தனர். வேள்வி குண்டத் தினின்றும் ஓர் அசுரன் தோன்றி, “நீங்கள் எனக்கு விதிக்கும் பணி யாது?” என வினாவினான். “நீ விரைந்து போய் பாண்டியனை மதுரையோடு எடுத்து விழுங்கிவிட்டு வா” எனச் சமணர் கள் அந்த அரக்கனைப் பணித்தனர்.

இதைக் கேட்ட அசுரன் வானத்தை முட்டும் பெரிய சர்ப்பவடிவு கொண்டு, கண்டோர் அஞ்சி நடுங்கும்படி மதுரையின் மேற்குத் திக்கில் வந்தான். அந்தச் சர்ப்பத்தின் பயங்கர வடி வத்தைக் கண்ட மக்கள் ஓடிச்சென்று அனந்த குண பாண்டியனிடம் விபரத்தைக் கூறினர். பாண்டியன் எவ்வித அச்சமும் கொள்ளாமல், முன்னர் யானையை விடுத்தவர்களே இப்போது இதனையும் அனுப்பியுள்ளனர் எனத் தெளிந்து, “சோமசுந்தரக் கடவுளே நம்மைக் காத்தருள் வார்” எனக் கூறி திருக்கோயில் சென்று வணங்கி முறையிட்டான். பின்னர் பாண்டியன் இறை வனிடம் அனுமதி பெற்று கையில் அம்பும் வில்லுங்கொண்டு மதுரைத் திருநகர வாயிலை அடைந்தபோது எதிரே சர்ப்பம் வருவதைக் கண்டான். சர்ப்பவடிவில் வந்த அசுரன் மது ரையை மூடி ஆகாயத்தில் படத்தைப் பரப்பி வாயைப்பிளந்து மதுரையை விழுங்குவதுபோல சீறினான். பாண்டியன் அச்சம் கொள்ளாமல் வில்லை வளைத்து அம்புகளைத் தொடுத்தான். விட்ட பாணங்களெல்லாவற்றையும் அசுரன் துகள்படும்படி கடித்து உமிழ்ந்தான். பாண்டியன் சோமசுந்தரரை மனதில் நினைத்துக் கொண்டு ஒரு சந்திர பாணத்தை விடுத்து அப் பாம்பினுடைய உடம்பைத் துண்டஞ் செய்தான். பாம்பு இடிபோல ஆரவாரித்து இரத்தம் அருவி போலப் பெருகி இறக்கும் தறுவாயில் ஆலகாலவிஷம் போல நஞ்சைக்கக்கிப் பின் இறந்தது. அந்த நஞ்சு இடையீடில்லாமல் மதுரை மாநகரம் முழுவதும் பரவ ஆரம்பித்தது. அதனால் மக்கள் அறிவு மயங்கிப் பெரும் அல்லலுற்றனர். பாண்டியன் சிவபெருமான் திருக் கோயிலை அடைந்து வணங்கி, “எம்பெருமானே; முன்னே கடலை வற்ற வைத்தும், மேகங் களைத் தடுத்தும், யானையை எய்தும் இந்நகரத்தைக் காத்ததுபோல இந்த விடத்தினால் வந்துள்ள துன்பத்தையும் நீக்கியருள வேண்டும்” என விண்ணப்பஞ்செய்து நின்றான். அருட் கடலாகிய சிவபெருமான் தன் திருச்சடையிலுள்ள பால சந்திரனுடைய அமிர்தத்திலே

சிறிய துளியைச் சிந்தியருளினார். அச்சிறு துளி அந்நகரமெங்கும் பரவி முன்போலவே மதுரை மாநகரைச் சுத்தம் செய்தது. யாவரும் விட பயம்நீங்கி இன்பமுற்றிருந்தனர்.

## மாயப் பசுவை வதைத்த படலம்

**படலம் – 29**

அனந்தகுண பாண்டியன் பாம்பைக் கொன்ற பின்பு, கதி கலங்கி ஓடிய சமணர்கள், "யாம் விடுத்த யானையைப் போல் பாம்பையும் கொன்றுவிட்டார்கள். இனி யாது செய்வோம்?" என ஒன்று கூடி ஆராய்ந்தனர். முடிவில், "பசுவுக்கு இவர்கள் ஊறு செய்யார்கள். அதனாற் பசுவை விடுப்போம்" என்று முடிவு செய்து ஒரு அபிசார வேள்வி செய்தனர். ஓம குண்டத்தினின்றும் ஓரசுரன் பசுவுருவாகத் தோன்றினான். அந்தப் பசுவைச் சமணர்கள் மதுரை நகர்மீது ஏவிவிட்டனர். பசுவானது ஆரவாரத்துடன் சென்று வழியில் காண்போரைக் கொன்று பெரும் அவலங்களை ஏற்படுத்தி மதுரையை அணுகியது. இதனையறிந்த பாண்டியனும் நகரத்தாரும் விரைந்து சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலை அடைந்து வழிபட்டு முறையிட்டனர். சிவபெருமான் அவர்கள் மீது திருவருள் சுரந்து அருகே நின்ற இடபத்தைப் பார்த்து, "சமணர்கள் விடுத்த பசுவை நீ போய் வென்று வரக் கடவாய்" என்று பணித்தருளினார்.

அந்த இடபம் பசுவை அண்மித்தது. சமணர்கள் நினைத்ததுபோலவே இடபமானது பசுவுக்கு எவ்வித ஊறும் செய்யாமல் தன் பேரழகைக் காட்டி நின்றது. பசு அவ்விடபம் மீது இச்சைகொண்டு வீரியத்தை விடுத்து வீழ்ந்திறந்து மலைவடிவாயிற்று. பாண்டியனும் நகரத்தாரும் மகிழ்ச்சியடைந்தனர். சமணர்கள் ஓட்டமெடுத்தனர். இடபமானது தனது தூல சரீரத்தை இடபமலையாக அங்கேயே நிறுத்திவிட்டு முன்னைய உருவாகி இறைவனருகே அமர்ந்துகொண்டது. நகரத்தார் மகிழ்ச்சியடைந்து சந்நிதியில் இருந்த இடபத்தை வணங்கிச் சென்றனர்.

இராமர் இலங்கைக்குப் போகும் பொருட்டு வானர சேனைசூழ இலக்குவன் அனுமன் சுக்கிரீவன் முதலிய வீரர்களோடும் அங்குவந்து அந்த இடபமலையின் மீது தங்கினர். அகத்திய மகாமுனிவர் அங்கு வந்து மதுரை மாநகரின் சிறப்புப் பற்றி இராமருக்குக் கூறினார். இதனைக் கேட்ட இராமபிரான் பொற்றாமரை வாவியிலே நீராடி சோமசுந்தரக் கடவுளை வணங்கி, தான் எண்ணிய கருமம் விரைந்துமுடிய அருள்புரிய வேண்டும் என விண்ணப்பித்து நின்றான். சோமசுந்தரக் கடவுளும் இராமரது வேண்டுதலை ஏற்று, "இராமா! தென்கிழக்குத் திசையிலேபோய் சமுத்திரத்திலே சேதுகட்டி இலங்கை சென்று இராவணனைக் கொன்று சீதையைச் சிறைமீட்டு உன் அயோத்தி திரும்பி பலகாலம் அரசு செய்து, பின் வைகுண்டம் வந்தடையக் கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். இராமரும் இறைவன் கூறியபடியே இலங்கை சென்று திரும்பி சேதுவிலே சிவலிங்க பிரதிஸ்டை செய்து, சோமசுந்தரக் கடவுளை மீளவும் வணங்கி விடைபெற்று அயோத்தி நகரையடைந்தார். இது இவ்வாறிருக்க,

அனந்தகுண பாண்டியன் தன்மகன் குலபூடன பாண்டியனிடம் தன்னரசைக் கொடுத்துவிட்டுத் தான் சிவலோகத்தை அடைந்தான்.

க.பொ.த. (உயர்தர) மாணவரின் மேலதிக வாசிப்பிற்குரியது

# பெரியாழ்வார் திருமொழி

- ச.லலீசன் அவர்கள் -

வைணவ சமயத்தைச் சேர்ந்த பன்னிரண்டு ஆழ்வார்களுள் பெரியாழ்வாருக்குத் தனியிடம் உண்டு. ஆண்டாளின் தந்தையாகிய இவர் கிருஷ்ணாவதாரத்தில் தன் மனதைப் பறிகொடுத்தவர். தன்னை யசோதையாகவும் கிருஷ்ணனைக் குழந்தையாகவும் கருதிப் பாடல்கள் பாடினார்.

பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த மஹாவிஷ்ணுவிடம் தேவாதி தேவர்கள் எல்லோரும் சென்று ஒரு சமயம் மன்றாடி நின்றார்கள். கம்சன், சிசுபாலன் முதலிய கொடியவர்களின் கோரச் செயல்கள் அதிகரித்த நிலையில், அவர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றுமாறு இவர்கள் கையேந்தி நின்றார்கள். இவர்களது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த மஹாவிஷ்ணு யது குலத்தில் தான் தேவகி வயிற்றில் பிறப்பதாகவும் அக் குலத்தில் இருக்கும் கம்சனை அடக்குவதாகவும் திருவார்த்தை அருளினார்.



கொடியவர்களை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு மஹாவிஷ்ணு துவாபர யுக இறுதியில் கிருஷ்ணாவதாரத்தை (9 ஆவது அவதாரம்) மேற்கொண்டார். தேவகிக்கும் வசுதேவருக்கும் மகனாகப் பிறந்த இவர் கம்சன் போன்ற கொடியவர்களிடமிருந்து தப்பிக்கொள்வதற்காக யசோதை – நந்தகோபன் மகனாக வளர்ந்தார். எனவேதான் கண்ணனின் வளர்ப்புத் தாய் என யசோதையைக் கொள்கிறோம்.

பெரியாழ்வார் தன்னை யசோதையாகக் கருதிப் பெரியாழ்வார் திருமொழிப் பாடல்களைப் பாடினார். பெரியாழ்வாரும் யது குலத்தைச் சேர்ந்தவரே. யதுகுலம், யாதவ குலம், ஆயர் குலம் என்பன ஒரு பொருள் தருவன.

பெரியாழ்வார் பாடிய பாடல்கள் திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி ஆகிய நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரியாழ்வார் திருமொழி பிரதானமானது. இது 461 பாடல்களைத் தன்னகத்தே கொண்டது.

குழந்தைக் கண்ணனின் திருவவதாரத்தில் மனதைப் பறிகொடுத்ததாகப் பெரியாழ்வார் திருமொழிப் பாடல்கள் ஆரம்பமாகின்றன. அழகிய மாளிகைகள் நிறைந்த திருக்கோட்டியூரில் அழகிய முடியும் நிறைகுணங்களும் உடைய கண்ணபிரான் பிறந்த இனிய மனையில் ஆயரும் ஆய்ச்சியரும் அவன் பிறந்த மகிழ்ச்சியால் ஒருவர் மேல் ஒருவர் நறுநெய் தடவி சுண்ணங்கள் (பவுடர்) பூசி மகிழ்ச்சிகொண்டதால் அவற்றைக் கலந்த மாளிகை முற்றம் சேறு ஆயிற்று எனப் பெரியாழ்வார் பாடத் தொடங்குகின்றார். இறுதியில் கண்ணன் தன் நெஞ்சில் குடிபுகுவதாகப் பாடுகின்றார்.

*"வடதடமும் வைகுந்தமும் மதிற் துவராபதியும்*
*இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே"*

எனப் பாடுகின்றார். நூலில் இடம் பெறும் ஒவ்வொரு பகுதியினதும் நிறைவம்சமாக நூலைப் படிப்பவர் பெறும் பயன் பற்றியும் கூறுகிறார். பல்லவர் கால இலக்கியங்களில் நூற்பயன் கூறல் ஒரு பண்பாக விளங்குகின்றது.



தமிழில் எழுந்த பிரபந்த வகைகளுள் பிள்ளைத் தமிழ் என்பதும் ஒன்று. இது பிள்ளைக் கவி, பிள்ளைப் பாட்டு என்றும் அழைக்கப்படுகின்றது. பெரியாழ்வார் கண்ணனின் குழந்தைப் பருவம் பற்றிப் பாடிய பகுதிகள் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்திற்கு இட்ட அத்திபாரமாகக் கொள்ளப்படுகின்றது. பிள்ளைத் தமிழ் நூல்களுள் முதல் நூல் ஒட்டக் கூத்தர் பாடிய குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் ஆகும். இது சோழர் காலத்தில் எழுந்தது.

பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் இரண்டு வகைப்படும். அவற்றுள் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னும் பத்தும் பருவங்களைப் பற்றிக் கூறும்.

இந்தப் பத்தில் இறுதி மூன்றையும் தவிர்த்து அதற்குப் பதிலாக கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றைச் சேர்த்துக் கூறுவது பெண்பாற் பிள்ளைத்தமிழ் ஆகும். பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுவதுமுண்டு. இன்று 120 இற்கு மேற்பட்ட பிள்ளைத் தமிழ் நூல்கள் பிரபலமாக இனங்காட்டப்படுகின்ற போதிலும் இவையெல்லாவற்றிற்கும் ஓர் அடிப்படையை வழங்கிய பாடல்களாகப் பெரியாழ்வார் திருமொழிப் பாடல்களையே கொள்வர்.

கண்ணனின் திருவவதாரம், கண்ணன் திருமேனி அழகு, தாலப் பருவம், அம்புலிப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், தளர்நடைப் பருவம், அச்சோப் பருவம், புறம் புல்கல், கண்ணன் அப்பூச்சி காட்டுதல், கண்ணனை முலையுண்ண அழைத்தல், காதுகுத்தல், நீராட்டம், குழல்வாரக் காக்கையை வா எனல், கோல் கொண்டு வா எனல், பூச்சூட்டல், காப்பிடல், பிள்ளை விளையாட்டு, ஆயர் மங்கையர் முறையீடு, அம்மம் தர மறுத்தல், கண்ணனைக் கன்றின் பின் போக்கிய அன்னை இரங்குதல், கண்ணன் மீண்டு வரும் கோலங்கண்டு அன்னை மகிழ்தல், கண்ணன் மீண்டு வருங்கோலங் கண்டு கன்னியர் காமுறல், கோவர்த்தன கிரியைக் குடை கொண்டமை, கண்ணன் குழல் ஊதல், நற்றாய் இரங்கல், தலைவன் பின் சென்ற மகளைக்குறித்துத் தாய் பலபடி உன்னி ஏங்குதல், உந்தி பறத்தல், அனுமன் சீதைக்குக் கூறிய அடையாளம், திருமாலைக் கண்ட சுவடு உரைத்தல், திருமாலிருஞ்சோலை, திருக் கோட்டியூர், பத்தராய் இறப்பார் பெறும் பேறு, திருமாலின் நாமம் இடுதல், கண்டம் என்னும் திருப்பதி, திருவரங்கம், எம பயம் நீக்கென அரங்கத்து அரவு அணையானை வேண்டுதல், தன் தகவின்மையை அறிவித்தல், பண்டன்று பட்டினம் காப்பே, திருமாலிருஞ்சோலைப் பெருமானைப் போகவிடேன் எனல், அடிமைப்பட்டுத் தாம் பெற்ற நன்மைகளை நினைத்துக் களித்தல், ஆகிய உள்ளடக்கங்களைக் கொண்டது.

இவற்றுள் நீராட்டம் என்னும் பகுதி உயர்தர வகுப்புக்களில் தமிழ்ப் பாடம் கற்கும் மாணவர்களுக்குரிய பாடப்பகுதியாக விளங்குகின்றது இப்பகுதியில் கண்ணனைக் குழந்தையாகவும் தன்னைத் தாயாகவும் முன்னிறுத்தி அவனை நீராட்ட அழைப்பதாகப் பெரியாழ்வார் சித்திரிக்கிறார். நீராட விருப்பின்றிக் குறும்பு செய்யும் கண்ணனை அழைப்பதில் பெரியாழ்வாரின் தாய்மைப் பண்பு அழகாக வெளிப்படுத்தப்படுகின்றது.

புராணங்கள் குறிப்பிடும் கண்ணனது தீரச் செயல்கள் பற்றியும் பெரியாழ்வார் ஆங்காங்கே சுட்டிக் காட்டுகின்றார். மராமரம் சாய்த்தமை, பூதனையிடம் பாலுண்டு அவளைச் சாய்த்தமை, கொடிய சகடாசுரனை வதம் செய்தமை, மலைப்பாம்பு உருவில் வந்த அகாசுரனைக் கொன்றமை எனக் கொடியவர்களை அழிக்கும் கண்ணனது பேரருளையும் பெரியாழ்வார் 'நீராட்டம்' என்ற பகுதியின் ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

பெரியாழ்வாரின் தாய்மைப் பண்பு பற்றி அடுத்த இதழில் நோக்குவோம்.

உ

திருவாசக ஆராய்ச்சியுரை — தொடர்ச்சி



# சிவபுராணம்

- சங்க நூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் -

**கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி**

**எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி**

**விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்**

**எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்**

**பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்**

*பதவுரை:* 23-5 விண் நிறைந்து மண்நிறைந்து மிக்காய் - விண்ணுலகம் முழுவதும் நிறைந்தும் மண்ணுலகம் முழுவதும் நிறைந்தும் அவற்றிற்கு அப்பாலுமாய்நிறைந்தவனே, விளங்கு ஒளியாய் - விளங்குகின்ற ஒளிவடிவினனே, எண் இறந்து எல்லை இலாதானே - சுட்டியுணரப்படும் தன்மையினைக் கடந்து வரம்பின்றி விரிந்தவனே, நின் பெரும் சீர் - நின்னுடைய பெரிய புகழினை, பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன் - தீய வினையையுடையேனாகிய யான் நின்னருளாலன்றிப் புகழ்ந்துரைக்கும் நெறி ஒன்றனையும் அறிகிலேன்.

இறைவன் விண்ணுலகம் மண்ணுலகம் முதலாகிய எல்லாவுலகங்களும் தன்னுள் அடங்கத் தான் அவற்றிற்கு அப்பாலுமாய் நிறைந்து ஒளிவடிவினனாய் உள்ளான் என்பது "விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்" என்பதனாற் கூறப்பட்டது. "உலகெலாஞ் சோதியாய் நிறைந்தான்" எனத் தேவாரத்தும் (ஞான 142:7) வருதல் காண்க. இறைவன் விண்ணும் மண்ணும் நிறைந்த ஒளிவடிவினன் என்பது,

"அண்டமா ரிருளூடு கடந்தும்பர்

உண்டுபோலு மோரொண்சுடர்" தே. நாவு. 211:2, என அப்பரடிகள் அருளிய வாற்றானுமறியப்படும்.

மனத்தினால் எண்ணி உணர்ந்து சுட்டியறியப்படும் தன்மைக்கு அப்பாற்பட்டவன் இறைவன் என்பது 'எண்ணிறந்து' என்பதனாற் கூறப்பட்டது.

"இன்னவுரு வின்னநிற மென்றறிவதே லரிது" (தே. 330:4) எனத் திருஞான சம்பந்த சுவாமிகளும்,

"அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே
கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத் தனிவனிறைவ
னென்றெழுதிக் காட்டொணாதே" 311:10

எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும் அருளிய திருவாக்குகளும் இதனை உணர்த்தும். இனி 'எண்ணிறந்து' என்பதற்கு மனவுணர்வுக்கும் எட்டாது எனப் பொருள் உரைத்து வாக்குக்கும் எட்டாது எனவும் உரைக்கலாம்.

பெருஞ்சீர்- அளவில்லாத உண்மைப் புகழ் "இறைவன் பொருள் சேர்புகழ்" (குறள் 5) என்றார் திருவள்ளுவரும், பொல்லா என்பது வினைக்கு விசேடணம். வினையேன் என்றது தன்னைத் தாழ்த்திக் கூறியவாறு.

அவனருளாலே அவன்தாள் வணங்கிச் (18) சிவபுராணந் தன்னை (19) உரைப் பனியான் (20) என்று சொல்லத் தொடங்கிய அடிகள் இம்மூன்று (23-5) அடிகளாலும் அவையடக்கம் கூறுகின்றாரதலின், 'நீன்சீர் புகழுமாறொன்றறியேன்' என்றார். இறைவனை முன்னிலைப்படுத்தி இவ்வவையடக்கத்தினைக் கூறியது அவ்விறைவனருள் முன்னின்று உதவுமாயினும் தற்போதங்கெட வேண்டியாகும். ஒன்று என்பதற்குச் சிறிது எனினுமமையும், "இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிழிவென" (கலி 2:19) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க.

*புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்*
*வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்*
*செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்*

26-31 புல் ஆகி - புல்லாகியும், பூடுஆய் - பல்வகைப் பூண்டுகளாகியும், புழு ஆய் - புழுவாகியும், மரம்ஆகி - மரமாகியும், பல்விருகம் ஆகி - பலவகைப்பட்ட மிருகங்களாகியும், பறவை ஆய் - பலவகைப் பறவைகளாகியும், பாம்புஆகி - பாம்புகளாகியும், கல்ஆய் - கல்லாகியும், மனிதர் ஆய் - மனிதராகியும் பேய் ஆய் - பேய்களாகியும், கணங்கள்ஆய் - கணங்களாகியும், வல்அசுரர்ஆகி - வலிய அசுரராகியும், முனிவர் ஆய் - முனிவராகியும், தேவர்ஆய் - தேவராகியும், செல்லா நின்ற இ தாவர சங்கமத்துள் - நிகழா நின்ற இந்த நிலையியற் பொருள் இயங்கியற் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுள்ளே, எம்பெருமான் எல்லா பிறப்பும் பிறந்து இளைத்தேன் - எம்பெருமானே யான் எல்லாப் பிறவிகளிலும் பிறந்து இளைப்படைந்தேன்.

இங்கு கூறப்பட்ட உயிர்களின் தோற்றமுறைமை, செய்யுளாதலின் பிறழவைத் துரைத்தாராயினும் அவை தோன்று முறைமையில் வைத்து உரைகொள்ளற்பாற்று. எல்லா உயிர்ப்பொருள்களும், நிலையியற்பொருளாகிய தாவரமும் இயங்கியற் பொருளாகிய சங்கமமும் என இரு கூற்றுள் அடங்கும். தாவர வகையுள் கல், புல், பூண்டு மரம் என்னும் நான்கும், சங்கம வகையுள் புழு பாம்பு பறவை பல்விருகம் மனிதர் அசுரர்

முனிவர் பேய் கணங்கள் தேவர் என்னும் பத்தும் கூறப்பட்டனவாகும்.

தாவரவகையுள் முதற்கண் கொள்ளத்தக்க கல் அல்லது மலை ஒருவகை அறிவு விளக்கமுமின்றிக் கிடந்த உயிர்களின் நிலையேயாகும். அந்நிலையினின்று ஏற்ற தகுதி வந்தபோது ஓரறிவுயிர்களாகிய புல் பூடு மரம் ஆகிய தோற்றத்தையடையும்; அவற்றினின்றும் அறிவு சிறிது சிறிதாக மேற்படும்போது சங்கம வகையுள் அவற்றிற்றேற்ற உடம்பினைப் பெற்று ஈரறிவுயிர்களாகிய புழுக்களாகியும், மூவறிவுயிர்களாகிய கறையான் எறும்புகளாகியும், நாலறிவுயிர்களாகிய நண்டு தும்பிகளாகியும், ஐந்தறிவுயிர்களாகிய பாம்பு பறவை பல்விருகமாகியும், ஆறறிவுயிர்களாகிய மனிதர் அசுரராகியும், ஆறறிவின் மேற்பட்ட முனிவர் பேய் கணங்கள் தேவர்களாகியும் பிறவி எடுக்கும் என உரை கூறிக்கொள்க.

பூமியினுட் கிடக்கும் கல் வளர்ச்சியடையக் காண்கின்றோமாதலின் அதுவும் ஒருவகை உயிர்த்தோற்றத்தின்பாற்பட்டதாகும். ஆயினும் அது உணர்ச்சியுடைத்தன்று; கௌதமர் சாபத்தாற் கல்லாய்க்கிடந்த அகலிகை இராமரது பாதந் தீண்டுதலால் தொல்லுருப் பெற்றனள் என வரலாறு கூறுதலின் உயிருக்குக் கல்லும் ஒருவகைப் பிறப்பாதல் உணரப்படும். இனிச் சர்வசங்காரகாலத்து உயிர் ஒருவகை உணர்ச்சியுமின்றி ஆணவமலத்துள் பாஷாணம் (கல்) போல் அசைவற்றுக் கிடத்தலின் 'கல்லாய்' எனக் கூறினார் எனக் கொள்ளுதலும் ஒன்று.

விருகம் - மிருகம்; பல் என்ற அடையைப் பூடு முதலியவற்றோடும் கூட்டுக. பேய் - நிழல்போல் நுண்ணுடம்பினையுடைய ஒருவகை உயிர். "நிழல்போ னுடங்கிப் பேயாட" (சீவக 309) எனப் பிறரும் கூறுதல் காண்க. இது கண்டார்க்கு அச்சத்தைச் செய்தலின் 'பேய்' எனப்பட்டது. பேந்தரும் பேய்" (சீவக 1181) என வருதலும் காண்க. பேம் - அச்சம். "பேநா முருமென வருஉங் கிளவி, யாமுறை மூன்று மச்சப் பொருள" (உரி 69) என்றார் தொல்காப்பியனாரும்.

ஈண்டு கணங்கள் என்றது பதினெண்கணங்களுள் இங்கே விதந்து கூறப்பட்ட அசுரர் பேய் தேவர் ஒழிந்த ஏனையோரை. பதினெண்களங்களாவார்; தேவரும் அசுரரும் தைத்தியரும் கருடரும் கின்னரரும் கிம்புருடரும் இயக்கரும் விஞ்ஞையரும் இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் பூதரும் பைசாகணமும் தாரகாகணமும் நாகரும் ஆகாயவாசிகளும் போகபூமியோருமெனவிவர். இதற்கு பிறவாறு முரைப்பர்.

அசுரர் - சுரர்க்கு மாறானவர். தாவரம் - நிற்பன. ஸ்தாவரம் என்னும் வடசொற்றிரிபு. சங்கமம் - அசைவன. ஜங்கமம் என்னும் வடசொற்றிரிபு.

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் - நிலையியற்பொருள் இயங்கியற் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுள்ளேயான் எல்லாப் பிறவிகளிலும் பிறந்து இளைப்படைந்தேன்.

'ஆனையாய் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப்பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை"

அம்மானை 14

என அடிகள் பிறாண்டும் கூறியிருத்தலுங் காண்க.

- கடலைப்போலவே மனமும் பொங்கும், வடியும் -

உ

# ஆனந்தம் எங்குள்ளது

- ம.க. ஸ்ரீதரன் அவர்கள் -

நாம் எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்கவேண்டுமென விரும்புகிறோம் அல்லவா? எம்மால் அப்படி இருக்க முடிகின்றதா? பொதுவாகக் கிடைக்கும் பதில் "இல்லை" என்பது தான். ஒரு துக்க நிகழ்வு ஏற்பட்டால் ஏன் நமக்கு துக்கம் ஏற்படுகின்றது? ஒரே சந்தோஷ நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தால் எவ்வளவு நல்லது என எமக்குள் நாம் எண்ணுகிறோ மல்லவா? சந்தோஷம் மேலும் நீடிக்க வேண்டுமென்றால் நாம் நமக்கு சந்தோஷத்தை உண் டாக்கக் கூடிய காரியங்களைத் தொடர்ந்து செய்கின்றோம்.

ஒவ்வொருவருக்கும் தத்தமது ஆனந்தம் ஒவ்வொரு வழியில் கிட்டுகின்றது. இறை வனை வணங்குவதாலோ, சந்நிதிக்குப் போவதாலோ, ஆச்சிரமத்தில் நாட்களைக் கழிப்ப தாலோ, ஆன்மீகப் புத்தகங்களை வாசிப்பதாலோ, பஜனைகளில் ஈடுபடுவதாலோ, சினிமா விற்கு போவதாலோ தனிமையாக இருப்பதாலோ, தொலைக்காட்சி, வானொலிகளை பார்ப்ப தாலோ அல்லது கேட்பதாலோ, நண்பர்களுடன் அரட்டை அடிப்பதாலோ என பலருக்கு பல வழிகளில் ஆனந்தம் கிட்டுவது வழக்கம். ஆனால் இவையெல்லாம் ஒரு குறுகிய கால எல்லைக்குள் வரையறுக்கப்பட்டதாகும். என்றாலும், இந்த ஆனந்தம் எங்கிருந்து வருகின்றது என்பதைப் பற்றி நாம் சிந்திக்கின்றோமா? வெளிவிடயங்கள் மூலம் தான் பெரும்பாலும் ஆனந்தம் உண்டாகின்றது. வீட்டில் ஒரு துக்க காரியம் நிகழ்வுற்றால் அவர், தனக்கு சந்தோஷத்தைத் தேடி மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளில் ஈடுபடுவதால் கடைசிவரையும் சந்தோஷத்தை அடையமுடியாது. ஆகவே, இதிலிருந்து நாம் அறிவது என்னவெனில் ஆனந்தம் என்பது வெளியிலிருந்து உண்டாவதில்லை. அது எமக்குள்ளே இருக்கும் ஒன்று தான் என்பதாகும்.

ஒரு பந்தல் போட்டிருக்கின்றோம். சூரிய ஒளி அதிலுள்ள துவாரம் வழியாக உள்ளே வருகிறது. ஒரு குழந்தைக்கு அந்த ஒளி புதிதாக வந்தது போலத் தோன்றுகிறது. எங்கும் வியாபித்திருக்கின்ற சூரிய ஒளியை இந்தப் பந்தல் மறைத்துக் கொண்டிருக்கிறதே தவிர, இது புதிய ஒளியை வரச் செய்யவில்லை என்று அப்போது நமக்குத் தெரிகின்றது. பந்தலை அகற்றினால் இயற்கையான ஒளி எங்கும் கிடைக்கிறது. இப்படித்தான் எமக்குள் நிறைந்திருக் கும் ஆனந்தமானது நம்மிடத்திலுள்ள மாயையினால் மூடப்பட்டுள்ளது. நாம் எமது மாயையை அகற்றிவிட்டால் ஆனந்தம் எம்மிடமிருந்து பிரவாகமெடுக்கும். உலக விஷயத்தினால் பெறும் ஆனந்தத்தினால் ஆசைகள் கூடுமேயன்றி குறையா. இவைகள் மேலும் மேலும் அதிகரித்து கடைசியில் மனிதனை மரணத்திற்கு கொண்டு செல்லும். ஆதலால் நித்தியானந்தம், பிரம்மானந்தம் என்ற உண்மையான, நிலையான ஆனந்தத்தையே நாம் நாடவேண்டும்.

இது என்றும் நித்தியமானது. அழிவற்றது. பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள் பார்வையாளர்களை ஆனந்த சொரூபிகளே! பிரேமை சொரூபிகளே! என அடிக்கடி தனது அருளுரைகளில் அழைக்கின்றார். இதன் அர்த்தம் உண்மையில் மனித னிடம் ஆனந்தம் நிரம்பியுள்ளது என்பதே. அவன் வேண்டுவதும் ஆனந்தமே. இப்படிப்பட்டவன் ஆனந்தத்தைத் தேடி வீணே காலம் கழிக்கிறான். ஆகவே நாம் தெய்வத்திடம் ஒன்றிவிடு வதால் நமக்கு நிலையான ஆனந்தம் கிட்டுகின்றது. நாம் செய்யும் செயல்கள் இயல்புக்கு விரோதமாக இருப்பதாலேயே நமக்கு ஆனந்தம் கிட்டுவதில்லை. ஆதலால், நாம் செய்யும் செயல்களால் நமக்கு மகிழ்ச்சியும், திருப்தியும் ஏற்படவேண்டுமென்று செய்தால் நாம் நிச்சயமாக ஆனந்தத்தை அடையலாம். தனிமையையும், மௌனத்தையும் நாடி இவற்றின் மூலம் பெறக்கூடிய ஆனந்தமே உன்னதமானது.

மற்றவர்கள் அனுபவிக்கும் மகிழ்ச்சியிலிருந்து ஆனந்தம் பெறுவது தெய்வீகப் பண்பாகும். ஆனந்தத்தைக் கடினமான வழிகளிலேயே சம்பாதிக்கவேண்டும். அன்பின் கோட் பாட்டில் அகம்பாவமோ, களங்கமோ துளியும் கிடையாது. தன்னலத்துடன் கூடிய பற்றிலிருந்து அது முற்றிலும் விடுபட்டிருக்கின்றது. புறப்பொருட்களூடாகச் சந்தோஷத்தை ஏற்படுத்தக் கூடியவையிலும் பார்க்க அகத்திலிருந்து பிறக்கும் ஆனந்தத்தை அளிக்கக்கூடியவற்றில் கூடிய நம்பிக்கை கொள்ளவேண்டும். அவ்வகையில் ஆனந்தத்தை வீட்டில் நிம்மதி நிலவுவதாலும் நற்கருமங்களைச் செய்வதாலும், குடும்ப அங்கத்தினரிடையேயும் சமூகத்தின் மத்தியிலும் பரஸ்பர ஒத்துழைப்பு இருப்பதாலும், பிறருக்குச் சேவை புரிவதாலும், ஒருவர் வாழும் சமூகத்தின் வளத்தினாலும், கடவுளிடம் மனதை ஒன்று படுத்துதல் மூல மாகவும் அடையலாம். ஒருவன் தானே ஆனந்த ஸ்வரூபமெனவும், ஆனந்தமே தனது உண்மையான இயல்பு என்பதிலும் அவனுக்கு நம்பிக்கையில்லை. ஆனால் ஒவ்வொருவருக்குள்ளும் ஆனந்தம் பொதிந்து கிடக்கின்றது. அதனை நாம் மேற்குறிப்பிட்ட வழிகள் மூலம் வெளிக் கொணரலாம்.

மனிதன் ஆனந்தத்தை அடைவதற்கு பிறந்தவனேயன்றி உண்ணவும், களியாட்டம் ஆடவும் பிறந்தவனல்ல. மனிதனில் இயல்பாக உறைகின்ற தெய்வீகத்தைப் பிரகாசிக்கச் செய்யும் தர்மவழியில் செல்வதனால் மட்டுமே உண்மையானதும், நிலையானதுமான ஆனந் தத்தைப் பெறமுடியும். உண்மையில் நாம் இறைவனுடன் கொண்டாடும் ஆனந்தமே பேரானந்தமாகும். ஆனந்தமே மனிதன் நாடிச் செல்லும் இறுதி இலட்சியமாகும். மனித வாழ்வின் நோக்கமும் அதுவே. ஆனந்த நிலையை எய்தும் பொருட்டு மனிதன் பல்வேறு வகைகளில் உழலுகிறான். ஆனந்த நிலையானது இன்பத்தின் உச்சநிலை, மகிழ்ச்சியின் திரட்டு ஆகும். இன்பத்தின் மூலம் இன்பத்தை அடையமுடியாது. துன்பத்தின் வாயிலாகவே ஒருவர் இன்பத்தை அடைய முடியும். ஆனந்தமென்பது இரு துன்பங்களுக்கு மத்தியிலுள்ள இடைவெளியாகும். உறுதியானதும், நிரந்தரமானதுமான சாத்வீக ஆனந்தத்தைப் பெறுவதற்கு மனிதன் கஷ்டம், துன்பம், இலாபம், நஷ்டம் ஆகிய எல்லாவற்றையும் ஏற்றுத்தானாக வேண்டும். நம்பிக்கையையும், சிரத்தையையும் விருத்தி செய்து அன்பின் வழியாகவும்

ஆனந்தத்தை அடையலாம். ஆனந்தமானது எல்லாக் கவலைகளையும், எல்லா அச்சங்களை யும், எல்லா அங்கலாய்ப்புகளையும் அழித்துவிடுகின்றது. ஆனந்தத்தைத் தேடும் மனிதன் மூன்று விடயங்களிற் கவனஞ் செலுத்தவேண்டும்.

01. மறக்கப்படவேண்டியவையை மறந்துவிட வேண்டும்.
(ஏமாற்றும் இயல்பு கொண்ட உலக இன்பங்கள்)

02. தெய்வீகம் என்னும் இலக்கை அடைய முயல வேண்டும்.

03. கைவிடவேண்டியவற்றைக் கைவிடவேண்டும்.
(அதாவது உலகாயுத ஆசைகள்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா அவர்கள் தமது அருளுரைகளில் அடிக்கடி வலியுறுத்து வது ஆசைகளுக்கு வரம்புவைக்க வேண்டும். (Ceiling on desires) என்பதாகும். தேவையற்ற எல்லாவற்றிற்கும் ஆசைப்பட்டு அவை நமக்கு கிடைக்காது போனால் நாம் மனவிரக்தியுற்று கோபப்படுகின்றோம். ஆசைகளுக்கு வரம்பு வைப்பதன் மூலம் நாம் உண்மையான ஆனந்தத் தைப் பெறமுடியும்.

ஆகவே மனதை நாம் எப்பொழுதும் திடப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் எந் நேரமும் ஆனந்தமாயிருப்போமானால் நம்மை எந்த நோயும், துன்பமும் அணுகா, "வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்" என்பதற்கிணங்க நம்மை பீடித்திருக்கும் சகல நோய்களும் நம்மைவிட்டு பறந்தோடிவிடும்.

உண்மையில், எல்லோரிடமும் ஆனந்தம் நிரம்பியிருக்கின்றது. ஆனால் அதை நாம் கண்டு கொள்ளவில்லை. ஆகவே, ஆனந்தத்தை விருத்தி செய்யுங்கள். அப்பொழுது கெட்ட மன எழுச்சிகளும், சுபாவங்களும் மறைந்துவிடும். ஏனெனில் இதயத்தில் காலடி வைக்க அவற்றிற்கு முடியாது போய்விடும். நாம் உறுதியாக இதில் இருந்தோமானால் நிச்சயம் நாமெல்லோரும் ஆனந்த சொரூபிகளே! பிரேமை சொரூபிகளே! அதைப் பெற அனைவரும் முயற்சிப்போமாக!

"ஸ்மஸ்தா லோகா சுகினோ பவந்து"

---

# நினைத்ததெல்லாம் தருவாய்!

வாய்கட்டிப் பூசையேற்கும்
வடி வழக வள்ளிமணாளா
சேய் வடிவாய் காட்சி தருகினும்
ஞானச் சுடரே செல்வச் சந்நிதியானே!
நோய் நொடிகள் பறந்தோடும்
உந்தன் நீறுஅணிய முருகா!
நெய்யிட்டு மா விளக்கேற்றுவேன்
நினைத்ததெல்லாம் தருவாய் ஐயா!



இராமஜெயபாலன் - கொக்குவில்.

உ

## அருட்கவி. சீ. விநாசித்தம்பி புலவரது

# கண்ணன் வந்த வண்ணம் நூலிலிருந்து....

- செல்வி தி. வரதவாணி அவர்கள் -

முழுமுதற் கடவுளாகிய கிருஷ்ணரின் அவதாரத்துவத்தை அறிதல் என்பது கிடைத்தற்கரிய பேறேயாகும். தனது நிலையிலிருந்து கீழிறங்கி அவதாரம் எடுக்கின்ற இறைவனினது பாரமான லீலைகளைப் பற்றி அறியும் வாய்ப்பை ஆத்மா பெறுவதால் ஜடமாசு உடனடியாக நீங்கும். இதனையே பகவத்கீதை "ஜன்ம கர்ம சமே திவ்யம்" என்று கூறுகின்றது. எனவே கண்ணனின் லீலையை நாமும் அறிந்தால் ஆன்மமாசு நீங்கி சிறந்த திவ்விய நிலையை எய்தலாம் என்பதில் ஐயமில்லை.

தேவகி மணிவயிற்றில் உதித்து யசோதை கரங்களில் வளரும் கிருஷ்ணனாகிய கண்ணன். ஆயர்பாடியிலே நிகழ்த்திய ஆனந்த லீலைகளைச் சொல்லில் அடக்க முடியாது. அண்ணன் பலராமனும் கிருஷ்ணனும் தண்டை மணி ஒலிக்க தவளத் தொடங்கினர். தமது தாய் என எண்ணி கோபியர் பின்னால் செல்வதும் பசுமாட்டின் கன்றுக் குட்டிகளின் வாலை தவழ்ந்து சென்று பிடிப்பதும் அது பயந்து ஓடுவதுமாகச் செல்லக் கண்ணன் வளர்ந்து வருகிறான். இப்பருவத்திலே கண்ணனைக் கொல்ல கம்சனால் ஏவப்பட்ட சகடாசுரன் மற்றும் திருணாவர்த்தன் என்பவர்களை கண்ணன் வதம் புரிந்த வரலாறும் காணப்படுகின்றது.

இவ்வாறு சின்னஞ்சிறு கால்களால் தத்தித் தத்தி எழுந்து நடக்கும் பருவத்தை கண்ணன் எய்தினான். அவன் நடக்க ஆரம்பித்ததுதான் ஆயர் பாடிக்கே ஓர் மகிழ்ச்சியான கொண்டாட்டம் ஆரம்பித்தது. ஓடி ஆடியும் குழலிசை ஊதியும் அனைவரையும் இன்பத்தில் ஆழ்த்தியது மட்டுமல்ல கோகுலத்தில் அவன் செய்யாத குறும்புத் தனத்தால் மகிழாதவர் எவரும் இல்லை எனலாம்.

*'"தேவகியின் மகனாய செங்கமலக் கண்ணன்*
*சீரார் யசோதையின் செல்வ மகனாக*
*ஆவினம் பொழியும் ஆயர்பாடி யிலே*
*ஆடுவான் குழலூதிப் பாடுவா னினிதே*

இவ்வாறு நாளாக நாளாக கண்ணனின் குறும்புத் தனத்துக்கு எல்லையில்லாமல் போய்விட்டது. இதனால் ஒவ்வொரு கோபிகையரும் யசோதையிடம் முறையிடுவதற்கெனவே குவிந்தனர்.

ஒரு கோபி சொல்வாள் நேற்று விடியற்காலை கண்ணன் என் வீட்டுக்கு வந்தான். நான் மாட்டுக் கொட்டகைக்கு பால் கறக்கச்சென்றேன். கன்றுக்குட்டியை கட்டிய இடத்தில் காணவில்லை. பார்த்தால், அது தாயிடம் பால் குடித்துக்கொண்டு இருந்தது. இது எவ்வாறு

---

- கண்மூடித்தனம் வேகமான வீழ்ச்சியில்வந்து முடியும் -

நிகழ்ந்தது என யோசித்தபடி நின்றேன். தூரத்தே குறும்புச் சிரிப்புடன் கிருஷ்ணன் நின்று கொண்டு இருந்தான். அவனைக் கலைத்தவண்ணம் ஓடிச் சென்றேன். வேறொரு வீட்டுக்குள் சென்று ஒளிந்து விட்டான் என்றாள்.

மற்றொரு கோபி சொன்னாள், 'உன் மகன் திருட்டுத் தொழிலில் இப்பவே கைதேர்ந்த நிபுணன் ஆகிவிட்டான். என் வீட்டு பால், வெண்ணெய் திருடுவதற்கே அவன் எத்தனை வழி கள் வைத்திருக்கிறான் என்பது உனக்குத் தெரியுமா? சரி களவெடுத்துசாப்பிட்டது போக மிகுதியை மரங்களில் இருக்கும் குரங்குகளுக்கு கொடுத்து அதுகள் செய்யும் அட்டகாசம் தாங்முடியவில்லை என்றாள்.

இன்னொருத்தி கூறினாள், இவனுக்கு எட்டாமல் நம் உறிகளை மேலே உயர்த்தி வைத்தால், தோழருடனும் பலராமனுடனும் சேர்ந்து ஒருவர் மீது ஒருவர் மேலேறி எடுத்து உண்கிறார்கள். சிலவேளை எட்டவில்லை என்றால் கல்லெறிந்து உடைத்து வீழ்த்தி அதில் ஒழுகுவதை அவனும் நண்பர்களும் கீழே வாயை "ஆ" எனத்திறந்து குடித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றாள்.

இவ்வளவு முறைப்பாட்டையும் கேட்டுக் கொதிப்படைந்த யசோதையிடம் இன்னொரு கோபி ஓடிவந்தாள். கண்ணன் செய்கையால் அவன் மீது ஓர் கண் வைத்தபடியே இருந் தேன். வந்தான் எனது ஜாக்கிரதைத் தனத்தால் அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை. போய்விட்டான் சிறிது நேரத்தில் நன்கு உறங்கிக் கொண்டிருந்த என் குழந்தை வீறிட்டுக் கத்தியது. ஓடிச் சென்று பார்த்தேன். தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை கிள்ளி எழுப்பி விட்டு குறும்புச் சிரிப்புடன் ஓடுகிறான்" என்றாள்.

ஆயர்பாடியில் கிருஷ்ணனின் குறும்புத்தனம் தாங்கமுடியவில்லை. அதனைக்கேட்டு அவன்மீது அளவுகடந்த அன்புமிக்க அன்னை யசோதைக்கு அவன் மீது எல்லோரும் குறையாகக் கூறுவது பொறுக்க முடியவில்லை. பெரு வேதனையுடன் கண்ணனது காதி னைத் திருகியபடி அவன் வாயிலிருந்த வெண்ணெய்யைப் பார்த்து எங்கே திருடி உண்டாய் என அடிக்கக் கையோங்குவாள் ஒன்றும் அறியாத பச்சிளம் குழந்தையாகிய கிருஷ் ணனின் முகம் விம்மி வெதும்பிவிடும். செங்கமலக் கண்கள் குளமாகிவிடும். அவன் குன் றிப்போன முகத்தையும் அழுகையையும் பார்க்க முடியாத யசோதை மனம் மாறி பின் னர் தன்மடியில் கிடத்திக் தட்டிக் கொடுத்து அழுகையை ஆற்றிவிடுவாள். புத்திமதிகளும் புகட்டுவாள்.

மறுநாள் கண்ணன் ஓர் கோபிகை வீட்டில் வெண்ணெய் பால் உண்ணப் போனான். எதுவும் கிடைக்கவில்லை. அவ்வீட்டுப் பெண், வீட்டை சுத்தம் செய்து மெழுகி கழுவி சுத்தமாக வைத்திருந்தாள். ஒன்றும் இங்கு கிடையாது என்றபடி கிருஷ்ணரை ஒரு சிறு கோல்கொண்டு கலைத்தாள். கிருஷ்ணன் அவள்வீடு முழுவதும் தெரு மண்வீசி புழுதி யாக்கிவிட்டு ஓடிவிட்டான்.

இன்னொரு வீட்டில் களவாய் வெண்ணெய்ப் பானையை உடைத்து எல்லா இடமும் அதை சிதறடித்து மரத்தடியில் இருந்த குரங்குகளுக்கு உண்ண எறிந்தவண்ணம் இருந்தான். இச்சேதிகேட்ட யசோதை ஓர் கோலுடன் மெல்ல மெல்ல கிருஷ்ணரைப் பிடிக்கச் சென் றாள். யாராவது தன்னைப் பார்க்கிறார்களா என்ற வண்ணம் நாலாபுறமும் தன் கண்ணை

உருட்டி உருட்டிப் பார்த்த வண்ணம் கண்ணன் தனது வேலையில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தான்.

யசோதை கோலுடன் தன்னைப் பிடிக்க வருவதைக் கண்டவன் துறு துறுவென்று எழுந்து ஓட ஆரம்பித்தான். யசோதைக்கு இன்னும் கோபம் அதிகமாயிற்று ஓடிச் சென்று ஒருவாறு பிடித்துவிட்டாள். பயந்த விழிகளுடன் கெஞ்சியவாறு தாயின் கரங்களைத் தட்டித்தட்டி விட்டுக் கொண்டிருந்தான். அவனது முகம்பார்த்ததும் யசோதைக்கு அடிக்க மனம்வரவில்லை. "உன்னுடைய குறும்பு அளவு கடந்து போய்விட்டது. நான் உனக்கு நன்றாக இடம் தந்து விட்டேன். இனி எப்படி ஒடித்திரிந்து குள்ளத்தனம் புரிவாய் பார்ப்போம்" எனக் கூறி தறதற வென இழுத்துவந்து ஓர் உரல் குற்றி இருந்தது. அதனுடன் சேர்த்து கண்ணனையும் கட்டி விட்டு சென்றுவிட்டாள்.

*"பலராமன் என்கின்ற ரோகினியின் மகனும்*
*பக்கத்து வீட்டாரின் சிறுவரும் சேர*
*பலவீடு வீடாகப் பால் வெண்ணெய் திருடிப்*
*பகிர்ந்துண்ணும் விளையாடல் செய்தனன் கண்ணன்*
*"உறிதிருடும் முறைப்பாடு தாய்க்குவந் துரைக்க*
*உரலோடு கட்டினாள் ஓங்காரப் பொருளை*
*நெறிகாணும் மருதினிடை தவழ்ந்தான் முகுந்தன்*
*நின்றஇரு தேவர்களும் சொந்தவடி வானார்.*

உரலுடன் கட்டப்பட்ட கிருஷ்ணன் சிறிதுநேரம் அங்கும் இங்கும் ஆடி ஆடிப் பார்த்தான். அது அவனுக்கு சலிப்பையளித்தது. பின்பு மெல்ல மெல்ல முயற்சித்து உரலை கீழே உருளும் வண்ணம் சரித்தான். தவழ்ந்தபடி இழுத்தான் சிறிது சிறிதாக உரலும் அசைந்து சென்றது. தனது வீட்டுக்கு வெளியே சிறுவர் சிலர் விளையாடும் ஒலிகேட்டது. தான் உரலுடன் கட்டப்பட்டிருப்பதைக் கண்டால் எள்ளி நகையாடுவர். எனக் கருதி மெல்ல மெல்ல முற்றம் வழியாக மறுபக்கம் சென்றான். எவ்வாறு இந்த உரலைத் தன்னிடமிருந்து கழட்டுவது என்று நினைத்த கண்ணனுக்கு முற்றத்தில் பக்கத்தே இரு மரம் நின்றது புலப் பட்டது. இரு மர இடைவெளியால் தான் வந்தால் உரல் இரண்டு மரத்திற்கும் இடையில் தடைப்பட்டு நின்றுவிடும். நன்றாக இழுத்தால் கயிறு அறுந்துவிடும் என்று திட்டமிட்டவனாய் இரு மருத மரம் இடையேயும் தான் தவழ்ந்து வந்தான் உரலும் சிக்கி நின்றது. பலமாக இழுத்தான். என்ன அதிசயம் அவ்விரு மரமுமே வேருடன் சாய்ந்தன. அம்மரங்களில் இருந்து இரு தேவபுருஷர் வெளிப்பட்டு கண்ணனை நமஸ்கரித்தனர். நாம் நாரதர் சாபத்தால் இவ் வாறு இரு மருதமரமாகப் பிறப்பெடுத்தோம். யமலன், அர்ஜுனன் என்னும் குபேரனின் குமா ரர்களாகிய எமக்கு சாபவிமோசனம் கிருஷ்ணனின் பாதம்பட்டதும் கிடைக்கும் எனக் கூறப் பட்டதற்கு இணங்க இன்று நாம் உம்பாதம் பட்டு சாபவிமோசனம் பெற்றோம் என்று கூறி மீண்டும் கிருஷ்ணரை வணங்கி தேவ உலகம் சென்றனர்.

மரம் வீழ்ந்த ஓசைக்கேட்டு கிருஷ்ணரைக் காணாது பரிதவித்த யசோதை மர இடை யில் கிருஷ்ணர் இருப்பதைக் கண்டு கண்ணீர்மல்கி ஓடிச் சென்று கட்டினை அவிழ்த்து மார்புறத் தழுவி தூக்கிச் சென்றாள்.

வாயைக் காப்பவன்தான் வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்கின்றான்.

உ

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் (கட்டுரைத் தொடர் - 35)

**- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்-**

வடநாட்டு வழிமுறையாக வந்து கலந்த அட்டாங்க யோகத்தை திருமூலர் சிவயோகமாக வளர்த்து அதன் மூலம் ஞானத்தைப் பெறும் வழியைத் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். யோகமும் ஞானமும் முறையே சாதனமும் சாத்தியமும் (பயிற்சியும் பயனும்) எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. யோக சாதனையில் உணர்வு உடம்பு முழுவதும் எதிரொலிக்கின்றது. மூலாதாரம் முதல் ஆஞ்ஞை வரை அந்த உணர்வு ஏற்படுகின்றது. சீவன் சாதாரண உலகியல் வாழ்க்கையில் தொடங்கிச் சிவம் ஆகும் நிலை வரை அடையும் உணர்வுகளை மிக விரிவாகத் திருமூலர் எடுத்துக் கூறுகின்றார். உலகியல் உணர்வுகள் போல இவை யாவும் இறையியல் உணர்வுகளே எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. அழியும் உடலைக் கொண்டே அழியா வாழ்வு பெறுவதற்கான வழிகளைக் காட்டுகிறது.

ஒன்றுமில்லாமல் எல்லாம் வெறுமையாய் இருக்கும் நிலை சூனியம் எனப்படும். அது என்ற தற்பதமும், நீ என்ற தொம்பதமும், அதுவாக ஆகின்றாய் என்ற அசிபதமும் ஆகிய முப்பதமும் நீங்கிய நிலையே பெரு நிலை ஆகும். சிவத்தை முன்னாலே வைத்துத் தியானித்தால் அகத்திலே சிவம் பிரகாசிக்கும். சிவபதிக்கு அடிமையாகி நின்ற ஆன்மா தன் உணர்வு முழுவதையும் சிவ சொரூபத்தில் நிறுத்திப் பேரானந்தத்தினை அனுபவிக்கும் 'அ' என உயிரும், 'உ' எனப் பரமும், 'ம்' எனச் சிவமும் இணைந்து ஒன்றாக நிற்பதே ஓம் என்ற பிரணவ மந்திரம். முப்பதமும் நீங்கிய நிலையில் ஆன்மா சிவத்தோடு இணைந்து சிவகதியைப் பெறும்.

***வைத்துச் சிவத்தை மதி சொருபானந்தத்து***
***உய்த்துப் பிரணவமாம் உபதேசத்தை***
***மெய்த்த இதயத்தை விட்டிடு; மெய் உணர்ந்து***
***அத்தற்கு அடிமை அடைந்து நின்றானே.***

முத்தி நிலையில் உள்ள ஆன்மா இறைவனுக்கு அடிமையாக இருக்கும் என்றே மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஒன்றாகிய திருவருட்பயனும் கூறுகிறது. இறைவனுடைய தாளும் (திருவருளும்) உயிரினது தலையும் (அறிவும்) பொருந்துவதை உவமையாகக் கூறுவதால் இறைவன் தலைவன் என்பதும், உயிர் அடிமை என்பதும் பின்வரும் திருவருட் பயனின் ஊடாக விளக்கப்படுகிறது.

***தாடலை போற் கூடியவை தானிகழா வேற்றின்பக்***
***கூடலை நீ ஏகமெனக் கொள்.***

காரணம் எதுவுமில்லாமல் காரியம் எதுவும் விளையாது என்பது அறிவியல் அறிஞர்கள் அனைவரினதும் ஏகோபித்த கருத்தாகும். காரணமாகிய பாவ புண்ணியத்திற்கு உரிய விளைவே காரியமாகிய நரகமும் சொர்க்கமும் ஆகும். காரணத்தை அழித்தவரிடம் காரியம் இல்லை. மனமண்டலம் குணத்தைச் சார்ந்து மனோமயகோஷம் அமைகிறது.

- ஒரு வினாடிப் பொறுமை பத்துவருட சுகம் -

இதற்கேற்ப தேகம் கிடைக்கிறது. மனம் நினைப்பதற்கேற்பவே இவை உண்டாகின்றன. மனம் அண்ட சராசரமெல்லாம் வியாபித்து நிற்கும் பரம்பொருளாகிய சிவத்தைப் பற்றி நின்றால் தேகப்பற்று நீங்கிச் சிவ ஒளி புலப்படும்.

மனமண்டலமே தேகம் என்றும் தேகமே மன மண்டலம் என்று கூறும் தன்மை அறிந்து அவ்விரண்டுக்கும் உள்ள உண்மையான தொடர்பினை உணரும் ஞானியர்களுக்கு அவர்களைக் கீழ்மைப்படுத்தும் பள்ளமும் இல்லை. மேலாகச் செய்யும் மேடும் இல்லை இத்தகையவர்களிடம் பிரபஞ்ச மயக்கம் இல்லாமையால் அவர்கள் தேகதர்மம் கடந்து விளங்குவர்.

*உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்*
*உள்ள பரிசறிந் தோருமவர்கட்குப்*
*பள்ளமும் இல்லைத் திடரில்லை பாழில்லை*
*உள்ளமும் இல்லை யுருவில்லை தானே*

சைவ சித்தாந்தம் கூறும் மும்மலங்களில் ஒன்றாகிய மாயை இறைவனின் வைப்புச் சக்தி ஆகும். உயிர்களைத் தன்வசமாக்கி மயக்குவதால் மாயை என்ற காரணப் பெயரைப் பெற்றது. குயவன் தன் திரிகையின் உதவியோடு மண்ணிலிருந்து குடத்தைச் செய்வது போல நிமித்த காரணமாகிய பதி, துணைக் காரணமாகிய தன் சக்தியால், முதற் காரணமாகிய மாயையில் இருந்து முப்பத்தாறு தத்துவங்களையும் தோற்றுவிக்கிறது. சுத்த மாயையில் இருந்து சிவ தத்துவங்கள் ஐந்தும், அசுத்த மாயையில் இருந்து வித்தியா தத்து வங்கள் ஏழும், சுத்தாசுத்த மாயை அல்லது பிரகிருதி மாயையில் இருந்து ஆன்ம தத்து வங்கள் இருபத்துநான்கும் தோற்றம் பெறும்.

சிவன் காரியோபாதியாகிய ஆன்ம தத்துவங்களில் விறகில் தீ போலவும், காரண உபாதியாகிய வித்தியா தத்துவங்களில் பாலில் நெய் போலவும் சிவ தத்துவங்களில் மணி யில் ஒலி போலவும் கலந்து நிற்பார். உயிருக்கு உயிராகப் பிரிதலின்றி நிற்பவனும், காரிய உபாதி, காரண உபாதி என நிற்கும் தத்துவங்களில் வெவ்வேறு வகையாக ஒன்றாய் நிற்பவனுமாகிய சிவபெருமான் உயிர்க்கு உடனாய் நின்று அனுபவம் தந்தால் அல்லாமல் உயிரைக் களைத்துப் போகச் செய்யும் ஆணவமலம் நீங்காது.

*உயிரக்கு உயிராகி ஒழிவு அற்று அழிவு அற்று*
*அயிர்ப்பறு காரண உபாதி விதிரேகத்து*
*உயிர்ப்பு உறும் ஈசன் உபமிதத்தால் அன்றி*
*வியர்ப்பு உறும் ஆணவம் வீடல் செய்யாவே*

விருப்பு வெறுப்பு அற்று இருக்கும் நிலை உபசாந்தம் எனப்படும். மன அலைவு அற்ற நிலை, போக்கு வரவு அற்ற நிலை என்றும் கூறலாம். சிவ ஞானமே வீடு பேறாகிய முத்தி அடைவதற்குரிய மார்க்கமாகும். சிவனிடத்தில் தன் முனைப்பின்றி அவனது திருவடி களைப் பொருந்தியிருத்தலே பக்தி செய்யும் வழியாகும். பக்தி என்பது தான் இறைவன் என்ற இரண்டிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே ஆகும். உண்மைச் சம யத்தின் உயிர் நாடியாகத் திகழ்வது பக்தியே ஆகும். இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தி ஆகும். ஆன்மாவிற்கும் இறைவனுக்கும்

உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே பக்தி எனப்படும். பக்தனின் செயல் கள் அனைத்தும் இறைவனின் செயல்களாகவே காணப்படும் என்பதைச் "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்" எனத் திருவாசகம் குறிப்பிடுகிறது.

திருவடியுணர்வாகிய சிவஞானமே திருவடிப் பேறாகிய முத்திக்கு வழிகாட்டும் வாயிலாக உள்ளது. சிவனின் திருவடியினையும், அவனது மெய்யடியார்களின் திருவடி யினையும் பணிவும் இன்சொல்லும் உடையவனாய் நீங்கா நினைவுடன் தொழுதல் பக்திக்கு வித்தாக அமையும். சிவத்தைப் பொருந்திச் சிவமாதலே அட்டமா சித்திகளையும் பெறு வதற்குரிய வழியாகும். அருள் வழி நிற்றலும், அவ் அருளினை மறவாமையும் மனம் தன் வயப்படுதலாகிய சித்திக்கு வழிகாட்டும். ஆன்ம விருப்பு வெறுப்பின்றி அடங்கி இருத்தலே சக்தியை அடைவதற்குரிய வழியாகும்.

*முத்திக்கு வித்து முதல்வன் தன் ஞானமே*
*பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே*
*சித்திக்கு வித்துச் சிவபரம் தானாதல்*
*சக்திக்கு வித்துத் தனதுபசாந்தமே*

ஆன்ம தரிசனம் பெற்றுப் பேரின்பம், அடைந்த அனுபவத்தை திருமூலர் பல பாடல்களின் ஊடாக வெளிப்படுத்துகின்றார். இந்த உடம்புக்குள்ளே புகுந்து நிற்கின்ற இறைவனை அகப்பார்வையினால் கண்டு ஆனந்தித்த தன்மையை எடுத்துக் கூறுகின்றார். "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்ற முதுமொழிக்கு ஏற்ப அடியவர்களின் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளித் தரிசனம் தருவான். இறைவன் இந்த உடம்புக் குள்ளேயே நம்மைத் தேடி வந்து புகுந்து நின்ற போதிலும் அகத்தினுள்ளே பார்வையைச் செலுத்தி உள்ளுணர்வினால் மக்கள் அவனை அறிகின்றார்கள் இல்லையே என்று இரக்கப் படுகின்றார் திருமூலர். தான் இறையருளால் பெற்ற ஞான அனுபவத்தைத் தொடர்ந்து கூறு கின்றார் கண் இமைகளை மூடித் தியானத்தில் இருந்த பொழுது, அண்ட சராசரங்கள், ஏழு உலகங்கள் எல்லாம் அவனுக்குள்ளே அடங்கி இருப்பதைக் கண்டேன்.

*தேடிக் கண்டு கொண்டு என்னுள்ளே நேர்தரு நந்தியை*
*ஊடு புக்கு ஆரும் உணர்ந்தறிவாரில்லை*
*கூடு புக்கு ஏறலுற்றேன். அவன் கோலம் கண்*
*மூடிக் கண்டேன் உலகு ஏழும் கண்டேனே*

கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் என்றும் கடவுளைக் கண்டு தெளிந்த வர்கள் சித்தர்கள் என்றும் தேவாரம் சித்தர்களுக்கு வரைவிலக்கணம் கூறியுள்ளது. சிவ சித்தர்கள் பேரறிவு வடிவாகிய சிவத்தை தரிசித்தவர்கள். இவர்கள் ஆணவ மலம் நீங் கிய சீவன் முத்தர், பரமுத்தி அடையத் தகுதி உடையவர்கள். சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய மூன்று வகை முத்திகளும் முறையே சரியை கிரியை, யோகம் ஆகிய வற்றால் அடையப்படுவன. இவை பத முத்தி எனப்படும். எனது என்னும் புறப்பற்றும் நான் என்னும் அகப்பற்றும் விட்டுச் சிவமயமாகிய சித்தத்தில் நிலைபெற்று நிற்பவரே சிவசித்தர் எனத் திருமந்திரம் கூறுகிறது.

*பதமுத்தி மூன்றும் பழுது என்று கைவிட்டு*
*இதம் உற்ற பாச இருளைத் துரந்து*
*மதம் அற்று, எனது யான் மாற்றிவிட்டு ஆங்கே*
*திதம் உற்றவர்கள் சிவசித்தர்தாமே*

ஆன்மாவினது அறிவையும், மனம் வாக்கு, காயம் ஆகியவற்றையும் செயற்படுத்துபவள் சதாசிவ பத்தினியாகிய மனோன்மணியே ஆவாள். மனம் வாக்கு, காயம் ஆகிய மூன்றும் அகத்திலே இருக்கும் திரிகரணங்கள் ஆகும். மனதிலே தோன்றுவது எண்ணம், வாக்கிலே தோன்றுவது சொல், காயமாகிய உடம்பாலே செய்யப்படுவது செயல். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் தூய்மையாகச் செயற்பட்டால் செய்கின்ற காரியங்கள் அனைத்தும் சித்தியாகும். இதனைத் "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் நீ அருள்வாய்" எனத் தாயுமான சுவாமிகள் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களும் தம் வயப்பட்டு நின்ற காலத்தில் நின்றாலும், இருந்தாலும், பலவிதமான உலக நிலைகளைப் பேசினாலும், புலன்களை வென்று மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனையே நாடுவர். நடக்கும் போதும் உட்கார்ந்திருக்கும் போதும் இறை உணர்வு உள்ளபடியால் இவர்கள் சிவத் திருவுடையோர்களாகத் திகழ்வார்கள். சிவமாம் திருவுடையோர் எப்போதும் சிவனையே நினைந்திருப்பர்.

*ஒன்றும் மிரண்டும் ஒருங்கிய காலத்து*
*நின்றும் இருந்தும் நிலம் பல பேசினும்*
*வென்றும் மிருந்தும் விகிர்தனை நாடுவர்*
*சென்றும் இருந்தும் திருவுடையோரே*

சித்தம் சிவமாகிவிட்டால் சீவ இயல்பு ஆன்மாவை விட்டு நீங்கிவிடும். "சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட" என்றே திருவாசகமும் குறிப்பிடுகிறது. சீவனுக்குள்ளே சிவ ஒளி பிரகாசித்ததும் பழைய வினைகள் அனைத்தும் வேரோடு சரிந்து விடும் என்பதனைப்

*"பழவினைகள் பாறும் வண்ணம்"*

என மணிவாசகரும் திருவாசகத்தின் அச்சோப்பதிகத்தில் குறிப்பிடுகின்றார்.

திருவருளால் சிவனையே இடையறாது நாடுபவர்களின் சிந்தையின் கண் சிவன் உறைவான். ஆருயிரின் முனைப்புத் தன்மை அகன்று இறைவனுக்கே அடிமையாகும் நினைப்புத் தன்மை இடையறாது இறைவனைச் சிந்திப்பதால் ஏற்படும் பிறவிக்கு காரணமாக உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் ஆன்மாவை விட்டு நீங்கும். சித்தம் சிவமாகிவிட்டால் செய்கின்ற செயல்கள் யாவும் தவமாகவே மாறிவிடும். ஒன்பதாகக் குறிப்பிட்ட வகையின் இறுதியில் நல்ல சிவஞானம் தவத்தால் அடையும் பயனாகித் தான் என்பது இல்லாமல் சிவமாய் விளங்கும்.

*சிவமான சிந்தையிற் சீவன் சிதையப்*
*பவமான மும்மலம் பாறிப் பறிய*
*நவமான அந்தத்தில் நற்சிவ போதம்*
*தவமாம் மவையாகித் தானல்லவாகுமே*

உ

# செய்திச் சிதறல்கள்

- திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன அருள் திரு அம்பலவாண தேசிக மூர்த்திகளின் 27ஆவது ஆண்டு குருபூசை பங்குனி திருவோணம் திருநீராட்டு விழா 08.04.2010 அன்று நடைபெற்றது.
- கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் அமைந்துள்ள ஈழத்து காசி லிங்கேஸ்வரப் பெருமான் அருள்திரு ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரப் பெருமானின் மணவாளக் கோலவிழா 17.04.2010 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி விசேட பூஜை வழிபாடுகளுடன் நிறைவு பெற்றது.
- நீர்வேலி கந்தசுவாமி கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம் விரோதி வருடம் பங்குனி மாதம் 27ஆம் நாள் 10.04.2010 சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27.04.2010 இரதோற்சவமும் 28.04.2010 தீர்த்த உற்சவத்தோடு நிறைவு பெற்றது.
- திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் அருள்திரு மாதவர் சிவஞான யோகிகள் சித்திரை ஆயிலிய திருநட்சத்திரத் திருநாள் திருநீராட்டு விழா 23.04.2010 வெள்ளிக்கிழமை நடை பெற்றது.
- சிவபூமி முதியோர் இல்ல மூன்றாவது ஆண்டு நிறைவு விழா 17.04.2010 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பாலச்சந்திரன் அரங்கில் தலைவர் செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

- உதவிசெய்யப்போய் உபத்திரம் வந்ததுதான் மிச்சம் -

உ

(தொடர்ச்சி...



# சந்நிதியான்

திரு. ந. அரியரத்தினம் அவர்கள்

இவ்வாறு சு. சங்கரலிங்கம் அவர்கள் ஆபத்பாந்தவனான சந்நிதிமுருகனிடம் சரணாகதி அடைந்து அவனை உள்ளம் உருகி வழிபாடு செய்த நிலையிலும் அவர் இயல்பாக நடமாடக்கூடிய அளவுக்கு அவரது வலது காலில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை. ஒரு காலின் செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகவே இருந்தது.

இந்நிலையில் தொண்டைமானாற்று கிராமத்தின் அயற்கிராமமான கெருடாவில் கிராமத்தில் உள்ள ஞானவேலவன் என்ற ஒரு சிறிய முருகன் ஆலயத்தில் அருள்வாக்குக் கூறுகின்ற (குறி) ஒரு அம்மையார் இருப்பதாகவும் அவரிடம் சென்று குறிகேட்டால் அவர் வழி கூறுவார் எனவும் இவரது அயலவர்கள் ஆலோசனை கூறினார்கள். இறைநம்பிக்கை உள்ள சங்கரலிங்கம் மருந்தினால் இந்த வருத்தத்தை முழுமையாக மாற்ற முடியாது என அவரது உள்ளுணர்வு உணர்த்தியது. இந்த நிலையில் அயலவர் கூறிய ஆலோசனைப்படி கெருடாவில் கிராமத்திலுள்ள அந்த முருகன் ஆலயத்திற்கு சென்று முருகப் பெருமானை மனமுருகி வழிபாடு செய்தபின் அங்கே அருள் வாக்குக் கூறுகின்ற அந்த அம்மையாரிடம் பயபக்தியுடன் அருள் வாக்குக் கேட்டார்கள்.

அங்கே குறி கூறுகின்ற அந்தப் பூசாரி அம்மையார் முதலில் தன்னை அருள் நிலைக்கு பக்குவப்படுத்திக் கொண்டார்கள். பின்பு சங்கரலிங்கத்தை நோக்கி "நீ ஆலயத் தொண்டினை அல்லது அதுபோன்ற ஒரு தொண்டினைச் செய்து வந்துள்ளீரா என

வினா எழுப்பினார்கள். அதற்கு இவர் ஆம் என பதில் கூறினார்கள். அதற்கு அந்த அம்மையார் அப்படியானால் அந்தத் தொண்டினை தொடராது இடை நிறுத்தி உள்ளீரா என வினாவியதுடன் அவ்வாறு இடைநிறுத்தியிருந்தால் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளு மாறும் அருள் வாக்கு கூறினார்கள்.

ஆம். சங்கரலிங்கம் ஆச்சிரமத்தில் கடமையாற்றியப் பொழுது அதனை ஒரு தொழிலாக மட்டுமன்றி ஒரு தொண்டாகவும் எவ்வாறு செயற்படுத்தமுடிந்தது எனவும், அங்கே பசியாறிப்போக வருகின்ற அடியார்களுக்கு அன்னம் பரிமாறும்பொழுது அவர் களுக்கு தண்ணீர் வழங்குதல், அடியார்கள் உணவு உட்கொண்டபின் மண்டபத்தை துப்புரவு செய்து மீள் ஒழுங்கு செய்தல் போன்ற வேலைகளில் ஏனையவர்களுடன் சேர்ந்து ஈடுபடுகின்ற செயற்பாட்டையும் அதில் கிடைக்கின்ற மனநிறைவு என்பனவற்றை எல்லாம் மீட்டுப்பார்த்தார்கள்.

ஆனாலும் ஏறத்தாழ மூன்று வருடங்களுக்கு முன்பு அங்கே ஏற்பட்ட மனக்கசப்பு பற்றியும் அதன் காரணமாக அங்கே வேலைக்குச் செல்வதை இடை நிறுத்திக் கொண்டது பற்றி எல்லாம் சிந்தித்துக் கொண்டார்கள். இது போன்ற தொண்டுகள் இடம்பெறும் இடங்களில் சரி பிழை பார்க்காதும், ஏற்படும் மனக்கசப்புகளையும் அவ் வப்பொழுது மறந்துவிட்டும் இவற்றை எல்லாம் இறைவனிடம் பாரப்படுத்திவிட்டு எமது இயல்பான செயற்பாடுகளைச் செய்வதுதான் பொருத்தமானது என்பதையும் தற்பொழுது நன்கு உணர்ந்து கொண்டார்கள். அதுமட்டுமல்ல ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் முக்கியமான தினங்களில் ஆலயத்தின் மடைப்பள்ளிக்கு ஆட்கள் கூடுதலாகத் தேவைப் படும் சந்தர்ப்பங்களில் அந்த மடைப்பள்ளி வேலைகளையும் அவ்வப்பொழுது செய்து வந்தது பற்றியும் கடந்த சில வருடங்களாக அதனையும் செய்யாதுவிட்டது பற்றியும் எண்ணிப் பார்த்தார்கள். ஆம் இப்பொழுது அங்கே அந்த முருகன் ஆலயத்தில் கூறப்பட்ட அருள்வாக்கினையும் எண்ணிப் பார்த்தபின் திடமான ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

மூன்று வருட இடைவெளிக்குப்பின் தற்பொழுது மீண்டும் ஆச்சிரமத்திற்கு செல்வதென முடிவு செய்தார்கள். அங்கே தான் முன்பு மேற்கொண்டுவந்த அந்தச் செயற் பாட்டை மீண்டும் தொடர்ந்து செய்வதற்கு சந்நிதியான் கருணை புரியவேண்டும் என வும் வேண்டிக்கொண்டார்கள். ஆனாலும் ஆச்சிரமத்தின் சுவாமிகள் இவற்றை எல்லாம் ஏற்றுக்கொண்டு தனக்கு அங்கே மீண்டும் இடம் தருவதற்கு சம்மதம் தெரிவிப்பாரா என்ற சந்தேகம் நிலவியது. அதுமட்டுமல்ல அங்கே மீண்டும் செல்வதற்கு தனது, அடி மனதில் ஒரு தயக்க உணர்வு ஏற்படுவதையும் உணர்ந்து கொண்டார்கள். இவ்வாறான எண்ணங்கள் எல்லாம் அவர் மனதில் அலை மோதினாலும் கூட எல்லாவற்றையும் சந்நிதியான் பார்த்துக்கொள்வான் என தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டார்கள்.

இவ்வாறு கெருடாவில் முருகன் ஆலயத்தில் அருள் வாக்குக் கேட்டு சில நாட்களின் பின் சங்கரலிங்கம் ஆச்சிரமத்திற்கு சென்றார்கள். அங்கே நீண்ட கால இடை வெளிக்குப்பின் சாமியாரைச் சந்தித்தார்கள். அத்துடன் ஆச்சிரமத்தில் தான் மீண்டும் கடமைபுரிய விரும்புவதுபற்றி தனது விருப்பத்தை மிகுந்த தயக்கத்துடன் சாமியாரிடம்

எடுத்துக் கூறினார்கள். அதுமட்டுமல்ல சாமியாரிடம் **"சந்நிதியான் தான் என்னை இங்கே போகச்செல்லிச் சொன்னவர்"** என்று தனது உள்ளத்தில் பட்டதையும் அப்படியே எடுத்துக் கூறினார்கள்.

சாமியார் மனதிற்குள் சிரித்துக்கொண்டார்கள். அத்துடன் சங்கரலிங்கத்தை நோக்கி **"அப்படியா சந்நிதியான் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லையே"** எனவும் பதிலுக்குக் கூறிக்கொண்டார்கள். அதற்கு சங்கரலிங்கம் என்ன பதில் கூறுவதென்று தெரியாது சில விநாடிகள் மௌனமாக நின்றார்கள். சாமியார் மனதிற்குள் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. சரி நாளை காலை ஆறுமணிக்கு வேலைக்கு வா எனக் கூறி அவரை அனுப்பி வைத்தார்கள்.

சுவாமிகள் குறிப்பிட்டதுபோல அடுத்த நாள் வேலைக்குச் சென்ற சங்கரலிங்கம் அதாவது 2009ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து மீண்டும் கடமைக்குச் சென்று அங்கே திருப்தியுடன் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். சங்கரலிங்கம் வேலைக்கு வந்து ஒரு சில வாரங்களுக்குள்ளேயே தனது நோயில் முன்னேற்றம் ஏற்படுவதை உணர்ந்து கொண்டார்கள். அதுமட்டுமல்ல எந்த வித சிகிச்சையும் இன்றியே அவரது வலது கால் முழுமையாக சுகமடைந்துவிட்டது. தற்பொழுது அவரது வலது காலின் பெருவிரலில் சிறிய விறைப்பு மட்டும் இருப்பதை அடியேனிடம் காண்பித்தார்கள.

அடியேன் வவுனியாவில் கடமையாற்றிக் கொண்டிருந்ததனாலும் அங்கே அடியேனுக்கு ஏற்பட்ட ஒரு விபத்துக் காரணமாகவும் ஒரு சில வருட இடைவெளிக்குப் பின்பு கடந்த டிசம்பர் மாதம் சந்நிதியானிடமும், ஆச்சிரமத்திற்கும் சென்றிருந்தேன். அப் பொழுதுதான் சங்கரலிங்கம் மேற்படி அற்புத அனுபவத்தை மிகவும் உணர்வு பூர்வமாகவும் உருக்கமான தொணியுடனும் அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

அடியேன் இந்தக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று ஓய்வுபெற்ற ஒரு பொலிஸ் உத்தியோகத்தரையோ அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தரைப் போன்றே சிறிய வித்தியாசமான தோற்றத்துடன் காட்சியளிக்கும் சங்கரலிங்கத்தை ஆச்சிரமத்திற்கு செல்லுகின்ற எவரும் இலகுவில் அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலோ அல்லது ஆலயச் சூழலிலோ சங்கரலிங்கம் போன்றவர்கள் மேற்கொள்ளுகின்ற சேவைகள் மேலோட்டமாகப் பார்க்கும்போது சாதார ணமாக ஜீவனோபாயச் செயற்பாடாகத் தோன்றலாம். ஆனால் சந்நிதியில் ஒன்று கூடு கின்ற அடியார்களுடன் தொடர்புபட்ட இவ்வாறான சேவைகள் புனிதம் நிறைந்ததும் சந் நிதியானது அருட்பார்வைக்கு உட்பட்டவையுமாகும்.

இதனை அறிந்தும் உணர்ந்தும் செயற்படுபவர்கள், வாழ்க்கையில் நிறைவுடனும் நின்மதியுடனும் வாழ்வதே சந்நிதியின் நியதியாகும். இதனையே சங்கரலிங்கம் தனது அனுபவத்தால் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

ஓம் முருகா!

# முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயாவின் 96ஆவது அகவை நூல் வெளியீட்டுவிழா



மேலும் ஐயா அவர்களின் 96ஆவது அகவை யினை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலரானது 16.04.2010 வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

ஆச்சிரம சுவாமிகளின் ஆசியுரையுடன் விழா ஆரம்பமாகி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியின் தலைமையுரையுடன் நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலிற்குரிய வெளியீட் டுரையினை யாழ்ப்பாண பட்டப்படிப்புக் கல்லூரியின் விரிவுரையாளராகிய திரு. அ. குமாரவேல் அவர்கள் நிகழ்த்த அதனைத் தொடர்ந்து மலருக்குரிய மதிப்பீட்டுரை யினை யாழ். பல்கலைக்கழக இளைப்பாறிய விரிவுரை யாளர் திரு. ச. விநாயகமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

இறுதி நிகழ்வாக விழா நாயகராக விளங்கிய புலவர் ஐயா அவர்கள் தன் பதிலுரையை நிறைவு செய்த தோடு நூல் வெளியீட்டிற்கு சமூகம் அளித்தவர்களுக்கு நன்றி கூறும் நிகழ்வு இடம்பெற்று, இனிதே நிறைவு பெற்றது.

# ஞானச்சுடர் சந்தாதாரர் கவனத்திற்கு

*அன்புடையீர்!*

எமது பேரவையினால் வெளியீடு செய்யப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் 150ஆவது ஆனி மாத மலர் சிறப்பான பல அம்சங் களைத் தாங்கி வர உள்ளதால், மலரினைப் பெற்றுவரும் சந்தாதாரர் கள் தங்கள் முகவரியினை உறுதிப்படுத்தும் முகமாக எம்முடன் தொலைபேசியினூடாகவோ, அல்லது கடித மூலமாகவோ உறுதிப் படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்

**பேரவையினர்.**

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருச்சி தாயுமானவர் சுவாமி திருக்கோயில்

(மலைக்கோட்டை)

- வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்-

"சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிருமே" என சம்பந்தர் பெருமான் பாடிப்பரவிய சிராப்பள்ளி, "சிராப்பள்ளி மேவிய நாயனார் என நம் வினை நாசமே" என அப்பர் பெருமானும், "சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி என்று மாணிக்கவாசகரும் போற்றிப்புகழ்ந்து பேசிய சிராப்பள்ளி. காலப்போக்கில் திருச்சிராப்பள்ளி ஆகி இப்போது மிகவும் சுருங்கி திருச்சி ஆகிவிட்டது. ஒரு காலத்தில் சோழர்களின் தலைநகராகியிருந்த இடமான உறையூரைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது இவ்வூர். தலைநகரமாகவிருந்தது என்பதற்கு அடையாளமாக உறையூர் பெருவீதியில் அருகே உள்ள குதிரை லாயமும், உறையூரின் உட்புறச் சந்துகளுள்ளே இன்றும் உள்ள அக்கிரகாரத்து வீடுகளும் பெருஞ் சுவர்களும் சாட்சிகளாக உள்ளன.

திருச்சிராப்பள்ளி மலை அதிக உயரம் இல்லையாயினும் அதன் கம்பீரம் சொல்லிலடங்காது. நான்கு திசைகளிலும் சற்று தூரத்தில் நின்று மலைக் கோட்டையின் அழகை அள்ளிப் பருகுவதே தனி ஆனந்தம். சென்னையிலிருந்து புகையிரதத்திலும் வாகனங்களிலும் வருபவர்கள் தம்மையறியாமலே நேரே தெரியும் மலைக்கோட்டையினைப் பார்த்துக் கைதொழ வைக்கும் மலை இது. இந்த மலைமீதுதான் தாயுமானவர் சுவாமி திருக்கோயிலும், மலை மேலுள்ள உச்சியில் பிள்ளையாரும் அமர்ந்திருந்து அருளாட்சி செய்கின்றனர். மேற்குப் புறமாக கோட்டையின் மதிற் சுவரும் வாசலும் பெருங்கதவும் காணப்படுகின்றன. வாசலினூடாக உள்ளே சென்றால் வீதியும், இடது புறம் பரந்த தெப்பக் குளமும் வருகிறது.

எவ்வேளையும் மக்கள் வெள்ளம் நிரம்பி வழியும் அந்த வீதியில் கிழக்கு நோக்கி முன்னேறி கோயிலின் ஒடுங்கிய நேர் வாசலுக்கு வருகிறோம். வாசலின் இரு பக்கமும் அர்ச்சனைப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் தாண்டி நேராக மாணிக்கப்பிள்ளையார் சந்நிதியை அடைகிறோம். அவரை வணங்கி அனுமதி கேட்டு சில படிகள் மேலேறினால் நேராக ஒரு பரந்த மண்டபமும் குறுக்கே வீதி ஒன்றும் வருகிறது. மண்டபத்தின் ஒரு பகுதி யானை கட்டும் இடமாகவும், மற்றொரு பகுதி உள்ளே செல்வதற்கான அனுமதிச்சீட்டு வழங்கும் இடமாகவும் உள்ளது. உரிய அனுமதிபெற்று படிகளில் ஏறுகிறோம். மலைக்கோட்டையில் மொத்த படிகளின் எண்ணிக்கை 258 ஆகும்.

படிகளில் நாம் ஏறும்போது நமது வலது கைப்பக்கமான உட்புறம் சிறிய சிறிய சந்நிதிகளும் சிறிய வாயில்களும் காணப்படுகின்றன. அவற்றுள் சில குடைவரைச் சந்நிதிகளாக (மலையைக் குடைந்து செய்யப்படுபவை) காணப்படுகின்றன. இடது புறத்தில் பரந்த நூற்றுக்கால் மண்டபம் ஒன்று காணப்படுகிறது. அம்மண்டபம் அமைந்துள்ள விதமும் அழகும் கண்டு ரசித்தபடி இன்னமும் சில படிகள் மேலேறினால் ஒடுங்கிய வாசலும் உள்ளே பரந்த மண்டபமும் வருகிறது. மண்டபத்துச் சுவர்களிலும் மேல் விதானத்திலும் பல்வேறு

சித்திரங்கள் காணப்படுகின்றன. அநேகமானவை தெளிவில்லாமல் உருக்குலைந்து காணப்பட்டாலும் மண்டபத்து நடு விதானத்தில் காணப்படும் பெரியதொரு காளியின் திருவுருவம் அழகுறக் காணப்படுகிறது. கழுத்து வலி எடுக்க நிமிர்ந்து பார்க்கிறோம்.

தாமரை மலரின் மேல் காணப்படும் காளியின் பாதங்கள் எந்தத் திசையிலிருந்து நாம் பாதங்களைப் பார்த்தாலும் நம்மை நோக்கியபடியே இருப்பதைப் பார்த்து அதிசயிக்கிறோம். கற்பனைக்கு எட்டாத ஓவியனின் கைவண்ணம் கண்டு வியந்து நிற்கிறோம். கிழக்கு நோக்கியுள்ள அருள்மிகு தாயுமானவர் சுவாமி திருக்கோயில் வளாகத்தினுள்ளே காலடி வைக்கிறோம். நேராக நமக்குத் தெரிவது கருவறையின் பிற்பக்கச் சுவர். வலஞ்சுழியாக நாம் வலம் வருகையில் தெட்சணாமூர்த்தியின் அழகிய திருவுருவம் அடுத்து எவ்வித சிற்ப வேலைப்பாடுகளுமற்ற இரண்டு கருங்கற்தூண்கள். அதில் ஒன்றில் ஒரு சோடி மீன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. திருமலை கோணேசர் கோயிலுக்குச் செல்லும் கோட்டை முகப்பு வாசலிலும் இதுபோன்ற மீன் இலச்சினை பொறிக்கப்பட்டிருப்பது நினைவுக்கு வருகிறது.

அருகருகே அமைந்துள்ள கம்பத்தடி விநாயகரையும் ஆறுமுகப் பெருமானையும் வணங்கினால், அருகே நவக்கிரக சந்நிதி. எல்லா நவக்கிரகங்களும் நடுவேயுள்ள சூரியனைப் பார்த்தபடி அமர்ந்திருப்பது ஒரு வித்தியாசமான அம்சம்.

அம்பிகை மட்டுவார் குழலியம்மை, சுகந்தகுந்தளாம்பிகை என்கிற திருநாமங்களுடன் மேற்கே பார்த்தபடி அமர்ந்துள்ளார். அம்பாள் சந்நிதிச் சுற்றில் அம்பிகையின் அருள் சக்திகளின் திருமேனிகளையும் தரிசிக்கலாம். மூலவர் மிகப் பெரிய சிவலிங்கத் திருமேனியுடன் அருள் பாலிக்கிறார். தரிசனம் தரும் நன்றுடையான் தீயதில்லான். சிராப்பள்ளிக் குன்றுடையான். இவர்தான் சிராப்பள்ளி மேவிய சிவன். இவர் தாயும் ஆனவர். ஒரு தாயும் மகளும், மகள் பிரசவ வேதனையில் துடிக்க, தாய் பெருக்கெடுத்து வெள்ளம் பாயும் காவேரியின் மறுகரையில் தவிக்க, இங்கே இறைவன் தாயாகி பிரசவம் பார்த்து தாயுமானவர் ஆனார்.

தாயுமானவர் கோயிலைவிட்டு வெளியே வந்து குன்றின் மீது வானம் பார்த்தபடியுள்ள பல படிகளில் ஏறினால் உச்சிப்பிள்ளையார் வீற்றிருக்கும் மண்டபத்தை அடைகிறோம். நிறைந்த அலங்காரத்தோடு பொலிவும் பூரிப்புமாக உள்ள உச்சிப்பிள்ளையாரைக் கைதொழுது வணங்குகிறோம். சிறிய ஒடுங்கிய பிரகாரத்தை வலம் வரும்போது நாற்புறமும் உள்ள யன்னல்கள் வழியாக திருச்சி நகரம் முழுவதும் தெரிகிறது. இதைவிட தூரத்தேயும் கிட்டவுமாக பல கோயில்கள் கோபுரங்கள் தெரிகின்றன. குறிப்பாக வானைமுட்டும் ஸ்ரீரங்கம், திருவானைக்கா கோயில்களின் கோபுரங்கள் துலக்கமாகத் தெரிகின்றன.

ஏறிச் சென்ற 258 படிகளிலும் கீழிறங்கி இடையே தாயுமானவர் சுவாமியை வணங்கி, கீழே மாணிக்கப்பிள்ளையாரையும் மீண்டும் கைதொழுது விடைபெற்று வெளியே வீதிக்கு வந்தால், வீதியில் நிரம்பி வழியும் மக்கள் கூட்டத்தில் நாமும் கரைந்து விடுகிறோம்.

"நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே(று)
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன் உள்ளங்குளிருமே"

- சம்பந்தர் -

உ

# வைகாசி மாத வாராந்த நிகழ்வுகள்

**07.05.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "தெய்வ வாசகம்"**

**வழங்குபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**

**14.05.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**விடயம் :- "இன்னிசை"** [பக்கவாத்திய சகிதம்]

**வழங்குபவர் :- ஏரம்பு நுஷந்கா** [இராமநாதன் நுண்கலைபீடம்]

**21.05.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

## வருடாந்த வைகாசிப் பெருவிழா

**28.05.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் 149 ஆவது வைகாசி 2010 மாத வெளியீடு

**வெளியீட்டுரை :- திரு. சி. சிவபாலசிங்கம் அவர்கள்**

[கிராம உத்தியோகத்தர் பொலிகண்டி]

**மதிப்பீட்டுரை :- திரு. துரை கணேசமூர்த்தி அவர்கள்**

[ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி]

பதிவு இல. Q.D/46/NEWS/2010

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

